


பாட்டு

ப் பாட்டு

புரட்டு
இமாலயப் புரட்டு

ரியர்களின் மத-வேத-சாஸ்திர-புராணங்களின்
புரட்டுகளை ஆதாரங்களுடன் விளக்குவது

பெரியார் ஈ.வெ.ரா.

குடிஅரசு பதிப்பகம், ஈரோடு.

1961.

முதற் பதிப்பு 1953
இரண்டாம் பதிப்பு 1961

புரட்டு - இமாலயப் புரட்டு !

இன்று "இந்தியா" தேசம் என்பதிலும் நமது நாட்டிலும் நடந்து வரும் புரட்டும்— நீண்ட நாளாகப் பார்ப்பனர் கோடிக்கணக்கான மக்களை ஏமாற்றிவரும் இமாலயப் புரட்டும். "இந்து மதம்", "மத ஆதாரநூல்கள்", "மதக்கடவுள்கள்" "சமஸ்கிருதம்", "இந்தி மொழி" அவைபற்றிய பெருமைகள் ஆகியவைகளாகும். நீண்டநாளாகவே நமது நாட்டில் இவைபற்றிய உண்மையை உண்மையாய் அறிந்தவர்கள் மிகஅருமை "அறிந்துள்ள" சிலரும் கோழைகள் —, சுயநலத்திற்கு எதையும் விற்பவர்கள் ஆக இருந்து வருகிறார்கள்.

எந்த ஒரு நாட்டிலும் இப்படிப்பட்ட புரட்டுக்கள் இத்தனை நாட்கள் நின்றதில்லை. எந்த ஒரு நாட்டு மக்களும் இப்படி காட்டு மிராண்டிகள் போல் ஏமாற்றப்பட்டதில்லை.

ஆகையால் இவைகளைப்பற்றி அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் சிந்தித்து இந்த ஏமாற்றத்திலிருந்து மக்களை வெளியாக்க வேண்டியது இன்றைக்கு அவசியமாகும்.

அரசியலையே முக்கிய காரியமாகக் கொள்வதில் பயனில்லை.

முட்டாள்கள் உள்ளவரை அயோக்கியர்கள்தான் எல்லாத்துறையிலும் ஆதிக்கமும் ஆட்சியும் செலுத்துவார்கள். அதுதான் "ஜனநாயக"மாகும்.

என்ன சொல்லுகிறீர்கள்?

—ஈ. வெ. ரா.

தோற்றுவாய்

பழங்கால சமஸ்கிருதம் என்பதாக ஒரு மொழி இருந்திருக்கவில்லை. சமஸ்கிருதம் பழங்காலத்தில், பலர் பலவிதமாகப் பேசி வந்த பல மொழிகளிலிருந்த சொற்களைச்சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு புதுமொழியாகும்.

சமஸ்த்தம்+கிருதம்=சமஸ்த்கிருதம்
சமஸ்த்தம்=யாவும்
கிருதம்=சேர்த்து செய்தது என்பது பொருள்.

★ பார்ப்பனர்கள் சமஸ்கிருத மொழியைப் பேசுவதில்லை.

★ அவர்களது லௌகீக வாழ்க்கையில் உலக வழக்கில் வந்த காரியத்திற்கும் அவர்கள் சமஸ்கிருதத்தைக் காரியத்தில் பயன்படுத்துவதும் இல்லை.

★ சமஸ்கிருதம் பார்ப்பனர்களுக்கும், மற்றும் எவர்க்கும் எந்தக் காலத்திலும் தாய்மொழியாக, பேசும் மொழியாக இருந்ததும் இல்லை.

★ இப்பார்ப்பனர்களின் மூதாதையர் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில் வசித்தவர்களும் அல்ல. அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஏதாவது ஒரு மொழியையே பேசிவந்தவர்களும் அல்ல.

★ அவர்கள் வாழ்ந்த நாடு பல நாடுகள்.

★ அவர்கள் பேசிவந்த மொழிகள் பல மொழிகள்.

- இந்த உண்மைகளை ஒரு அளவுக்கு விளக்கவே **சமஸ்கிருதம்** பற்றிய கட்டுரையில் குறிப்பாக சிலவற்றை விளக்குவோம்.

- இதுபோலவேதான் அவர்கள் (பார்ப்பனர்கள்) மதமான **இந்துமதமும்** எந்தவித ஆதாரமும் அடிப்படையும் இல்லாமல் எதை எதையோ சேர்த்து, கதம்பயாகக் கற்பித்துக் கொண்ட மதமாகும்.

- மற்றும் இதுபோலவேதான் அவர் (பார்ப்பனர்) களுடைய **பல கடவுள்களும்** பல நாட்டு மக்கள் காட்டு மிராண்டித் தன்மையில் அவரவர்கள் சவுகரியத்திற்கு ஏற்ப சமயோசிதம்போல் கற்பித்துக் கொள்ளப்பட்டவைகளை, தாங்களும் அதே தன்மையில் தங்களுக்கும் ஏற்படுத்திக்கொண்டவை ஆகும். இவற்றைப்பற்றிப் பின்னால் விளக்குவோம்.

- பார்ப்பனர்களுக்கு அடிப்படை ஆதாரம் என்பது யாவற்றிற்கும் வேதமாகும். அந்த வேதம் ஒன்றல்ல; பல.

- அவை ஒருவரால் அல்ல; பல பேர்களால் சொல்லப் பட்டவை.

- அந்தப்படி சொல்லப்பட்டதும் ஒரு காலத்தில் அல்ல; பல காலங்களில்.

● அவைகளும், ஏதாவது ஒரு குறிப்பில் குறித்து வைக்கப்பட்டிருந்தவை அல்ல; வாய்ச் சொல்லில், வாக்கு ரூபமாக இருந்து, அடிக்கடி கூட்டியும் குறைத்தும் திருத்தியும் கூறி வந்ததாகும்.

● அவைகளும் காலத்துக்கு ஏற்ப பலரால், சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருள் கூறப்பட்டு வந்தும், பிறகு அப்பொருளுக்கு ஏற்ப மூலம் மாற்றப்பட்டு வந்தும் இன்றைக்கும் விவாதத்திற்கு நிற்காத முறையில் உருவாக்கப்பட்டதாகும்.

△ வேதத்தின் துவக்கமானது செல்வம், பொருள், சுகபோகம் பற்றிய பேராசை இலட்சியமேயாகும்.

△ பிறகு இந்தநாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்க்கையைப்பார்த்து பொறாமையும் ஆத்திரமும் கொண்டு, அவர்களை எதிரிகளாகக் கருதி வசவு கூறி சாபம் இடுவதேயாகும்.

△ இவைகளுக்கு ஏற்ப கற்பித்துக் கொண்டவைதான் வேதத்தில் காணப்படும் தேவர்கள் என்பவர்களுமாகும்.

△ அவைகளும் காலத்துக்கு ஏற்ப கற்பனையும் முக்கியத்துவமும் கொண்டவைதான்

இவைகளைப் பற்றியும் பின்னால் விளக்குவோம்.

பிரசுரிப்போர் முன்னுரை

புரட்டு—இமாலயப்புரட்டு என்னும் இப்புத்தகம் ஆரியர் வேதம், ஆரியர் கடவுள்கள், அவை சம்பந்தமான புராண இதிகாசங்கள் ஆகியவைகளைப்பற்றிய மூலங்களைக் கொண்டிருக்கின்றன. இதில் கண்டுள்ள சேதிகள் அவ்வளவும் ஆதாரங்களை, அதுவும் பெருத்த ஆராய்ச்சியாளர்களான மேல் நாட்டார்கள், வங்காள நிபுணர்கள் ஆகியவர்களுடைய ஆராய்ச்சிக் கருத்துகளையும் என்சைக்ளோபீடியா என்னும் உலக ஞானக்களஞ்சிய ஆராய்ச்சி நூலையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

"இந்தியாவின் சரித்திரத்தையும், இந்திய மக்களின் சமய, சமுதாய, கலாச்சாரத்தை உள்ளது உள்ளபடியே மக்களுக்கு விளக்குவதற்கு" என்றே இந்தியப் பார்ப்பனத் தலைவர்களாகிய பிரபல வக்கீலும், மாஜி மந்திரியும், இன்றைய கவர்னருமான தோழர் K. M. முன்ஷி, சென்னை பிரபல வக்கீலும் பார்ப்பன சமுதாய தலைவரும் பாதுகாப்பாளருமான தோழர் T. R. வெங்கட்ராம சாஸ்திரி, இந்திய உதவி ஜனாதிபதியும் உலக விஞ்ஞான நிபுணர் என்று பெயர் பெற்றவருமான Dr. S. ராதாகிருஷ்ணன் முதலியோர்களால் பிரபல கோடீசுவரரான சௌகார் G. D. பிர்லா அவர்கள் பொருளுதவியால் துவக்கப்பட்டு நடைபெற்றுவரும் **பாரதீய இதிகாச சமீதி** என்கின்ற ஒரு ஆராய்ச்சி நிலையத்தில், இந்தியாவில் உள்ள வேத, சாஸ்திர, புராண, இதிகாச ஆராய்ச்சி நிபுணர்களாலும், மாபெரும் சரித்திர ஆசிரியர்களாலும் தொகுக்கப்பட்ட ஆராய்சி உண்மைகள் என்பவைகளை ஆதாரமாகக் கொண்டே (இச்சிறு நூல்) தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதுடன்,

இதைப் பெரிதும் நமது நாட்டு இந்து, சூத்திர, பஞ்சம மக்கள் படித்து உண்மையை அறியவேண்டும் என்கின்ற அவாவாலேயே தொகுக்கப்பட்டதாகும்.

மற்றும் இன்று பார்ப்பனரின் உயர்வுக்கும், நல்வாழ்வுக்கும், செல்வத்திற்கும் காரணமெல்லாம் நாம் வணங்கும் கடவுள்களும், வேத, சாஸ்திர, புராண இதிகாசங்களுமேதான் என்பதோடு அதுபோலவே சூத்திரர், பஞ்சமர் ஆகிய நம் இழிவுக்கும், கீழான நிலைமைக்கும், தரித்திரத்திற்கும் காரணமெல்லாம் மேலே குறிப்பிட்ட கடவுள்கள், வேத, சாஸ்திர, புராண, இதிகாசங்கள் என்பவைகளேயாகும் என்பதை மெய்ப்பிப்பதற்கும் தொகுக்கப்பட்டதாகும்.

இதில் கண்டுள்ள உண்மைகளை இதுவரை எந்தச் சமய சமுதாய சீர்திருத்தக்காரரும்—புரட்சிக்காரரும் சரிவர அறிந்து கொள்ளாததினாலும், அறிந்தவர் களுக்குத் துணிவில்லாததாலும் சூத்திர, பஞ்சமர்கள் என்பவர்களுடைய நிலை ஆயிரக்கணக்கான வருஷங் களாக மாறுதல் இல்லாமலேயே இருந்து வருகிறது.

ஆதலால் பொதுமக்கள், சிறப்பாக தமிழகத்தில் உள்ள சூத்திரர், பஞ்சமர் என்பவர்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து உண்மையை உணர வேண்டுகிறோம்.

குறிப்பு :- இந்த நூல் ஒரு முறையாகவோ அல்லது ஒழுங்காகவோ விஷயங்களை அமைத்துப் பிரசுரித்ததாகவோ இருக்காது.

ஏனெனில் அவ்வப்போது தோன்றிய கருத்துக்கள் நினைவுக்கு—தகவலுக்கு நேர்ந்த விஷயங்கள் ஆகியவை களைக் கொண்டும் பத்திரிகைகளில் வெளியானவை களைக் கொண்டும் எழுதித் தொகுக்கப்பட்டதாகும். ஆதலால் வாசகர்கள், இதில் சில விஷயங்கள் விட்டு விட்டு திரும்ப திரும்ப மாறி, மாறி வருகிறதே என்று எண்ணாமல் பொருத்திக் கோவையாக்கிக் கருத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

விஜய-ஆண்டு
சித்திரை 1ந் தேதி
13–4–53, திருச்சி.

பெரியார் தன்மான
பிரச்சார நிலையத்தார்

பொருள் அடக்கம்

சமஸ்கிருதம்

1

சமஸ்கிருதம் ஒரு மூல மொழியல்ல; அது அந்நிய பல நாட்டுக் கதம்ப மொழி

அடி நாளில் (நீண்ட நாளுக்கு முன்) மேற்கு மத்திய ஆசியாவில் வாழ்ந்த நார்டிக் ஆரிய மக்கள் பேசிவந்த மொழியே, பலமொழிகள் கலந்து சமஸ்கிருதம் என்பதாக ஆயிற்று. அதாவது தங்கள் தாயகத்தின் சுற்று வட்டார எல்லை நாடுகளின் மொழிகளான டர்கிஸ் **(Turkic)** மொழி, ஈரானிய மொழி—பாக்ட்ரினியாவில் குடியேறிய பின் பர்மீரியன் மொழி ஆகியவற்றிலிருந்து தொகுத்த கதம்பமே சமஸ்கிருத மொழி.

மேற்கு மத்திய ஆசியாவில் வசித்த இந்த ஆரியர்கள் பாக்ட்ரினியாவிலிருந்து இரு பிரிவாகப் பிரிந்து, கி. மு. 1350ம் ஆண்டு வாக்கில் வடமேற்கிந்தியாவில் குடியே றியபோது இந்த சமஸ்கிருத மொழியையும் வடமேற் கிந்தியாவில் புகுத்தினர்.

இவர்கள் வடமேற்கிந்தியாவில் இருமுறை நுழைந் தனர். முதலாவது கி. மு. 1400-வேதகாலம். இரண் டாவது கி. மு. 58ல். பாக்ட்ரினியா, சாக்டியானா நாடு களில் கிரேக்க- பாரசீக மொழிக் கலைத்தொடர்புகளின் பலனாக இந்த சமஸ்கிருதமொழி மேற்கண்ட பாரசீக— கிரேக்க மொழிக் கலை இலக்கிய இலக்கணங்களையும் தழுவி மேற்கொண்டு திருத்தப்பெற்றது.

மற்றும் சமஸ்கிருதமொழி இந்தியாவின் "லத்தீன்" மொழி என்றும் அழைக்கப்பட்டது. ஆல்பைன்கெல்ட்

மக்கள் மத்தியதரைக்கடல் வட்டாரங்கள்மீது படை யெடுத்தபோது, இத்தாலிய மக்களிடையே இந்த கெல்ட் மக்கள் திணித்த மொழியே லத்தீன்.

மொழிகளின் பிரிவு

மொழிகள், துரானிய மொழிகள் என்றும், ஆரிய மொழிகளென்றும் இருபெரும் பிரிவுகளைக் கொண் டுள்ளது. சமஸ்கிருதம் ஆரிய மொழியினத்தைச் சேர்ந்தது.

"சமஸ்கிருதம்" என்ற சொல்லின் பொருள், சுத்தப் படுத்தப்பட்டது அல்லது பலவற்றைச் சேர்த்து உருவ கப்படுத்தப்பட்டது என்பதாகும்.

மேலும் விளக்க வேண்டுமானால் இது ஹிந்துஸ் தானியில் "சான்ஸ்கிரிட்" என்று உச்சரிக்கப்படுகிறது. இந்த சமஸ்கிருத மொழியாக்கத்தின் பெரும்பகுதியும், அடிப்படை அமைப்பும் மேற்கு மத்திய ஆசியாவில் வழங்கிய ஆரிய மொழியிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டதாகும். மற்றும் பல நூற்றாண்டுகளாக பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளுடன் தொடர்பு கொண் டதன் பலனாக பிறமொழி அம்சங்கள் பலவற்றை இந்த சமஸ்கிருதமொழியுடன் அவ்வப்போது சேர்த்துக் கொண்டு வந்தனர்.

பொருளுக்கேற்ற பெயர்

வடமேற்கு இந்தியாவில் குடியேறும் வரையில் இந்த ஆரியர்கள், இடைக்காலத்தில் திரிந்த பல்வேறு நாடுகளின் பல்வேறு மொழிக் கலைப்பகுதிகளையும் இச்சமஸ்கிருதத்தில் சேர்த்துக்கொண்டுளர்.

சமஸ்த = எல்லாம்;
கிருதி = தொகுக்கப்பட்டது
—என்பதே இதன் பொருள்.

"என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா" என்ற ஆங்கிலமொழிப் பேரகராதியில்: 13-வது தொகுதியில், சமஸ்கிருத மொழி பிறப்பு வரலாறு, டாக்டர் எச். ஜூலியஸ் எக்லிங் என்பவரால் தரப்பட்டுள்ளது.

"சமஸ்கிருதமொழி ஆரிய மொழிகளுடன் கொண்டுள்ள தொடர்பையும்; பல அம்சங்களில் கிரேக்க மொழியைப் போன்றிருப்பதையும்" இவர் விளக்கியுள்ளார்.

டாக்டர் பிரான்ஸ் பாப் என்பவர் கோதிக் மொழியிலிருந்து பைபிளை வாசித்தபோது, கோதிக் மொழியும் சமஸ்கிருத மொழிபோன்றே இருப்பதைக் கண்டார்.

சர். மானியர் வில்லியம் என்பவர் தமது சமஸ்கிருத —ஆங்கில அகராதியின் (அச்சிட்டது. காலண்டர் பிரஸ்; ஆக்ஸ் போர்டு 1899) முகவுரையில் "சமஸ்கிருத மொழி, பாக்ட்ரியானா-சாக்டியானா வட்டாரங்களில் தோன்றியது; புக்காவிலோ, ஆக்ஸ்நதி துவக்க வட்டாரத்திலோ தோன்றியதல்ல" என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவினுள் நுழைந்த இந்த ஆரியர்கள் கோத்ஸ்- (கிதாய்) என்ற நாட்டிலிருந்து வந்தவர்களென்பதும் கோதிக் மொழியைத் தம்முடன் கொண்டு வந்தவர்களென்பதும் பல சரித்திரச் சான்றுகளால் தெளிவுபடுகிறது.

பிறந்த விதம்

இந்த கோதிக் மொழியே இடையில் பல்வேறு மாற்றங்கள் பெற்று சமஸ்கிருத மொழியாக உருவெடுத்தது. ஆரியர்கள் மேற்கிந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது; இந்த கலப்பட சமஸ்கிருத மொழியையும் அங்கிருந்த மக்கள் (ஹிந்து) பால் திணித்தனர். வேதகால சமஸ்கிருதத்திற்கும் இக்கால சமஸ்கிருதத்திற்கும் அதிக வேற்றுமைகள் உள்ளன.

பொய்க் கூற்று

எனவே, இந்த சமஸ்கிருதமொழி அனாதிகால மொழி யென்றும், இம்மொழியிலிருந்துதான், இந்தியாவின் பழங்கால மொழிகள் அனைத்தும் உற்பத்தியாயிற்றெனவும் சொல்வது ஆதாரமற்றதாகிறது. ஏனெனில் இந்த மொழி கி. மு. 1500லும் அதற்குப் பின்னரும்தான் உருவாயிற்றென்பது தெளிவாகிறது. இந்தியர்கள் மீது திணிக்கப்பட்ட மொழிகளில் இதுவே கடைசி மொழி. உண்மை இப்படியிருந்தும், தற்கால மொழிகளில் சிலவற்றை இந்த சமஸ்கிருத மொழியிலிருந்து பிறந்ததாகச் சிலர் கூறிக்கொள்கின்றனர்.

இந்த நார்டிக் ஆரியர்களும், ஈரானிய ஆரியர்களும் பல்வேறாகப் பிரிந்து, பல்வேறு திக்குகளில் படர்ந்தனர். இவ்விருபிரிவினரும் இந்தியாவில் வசித்த **இந்தோனேஷியர்** சந்ததிகளே என்றும், இவர்களே வடகிழக்கு நாடுகளில் பரவினர் என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஹிந்துஸ்தானி

இவ்விதம் சென்றவர்களில் ஈரானிய ஆரியர்கள் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பினர். இது வேத

சமஸ்கிருதமொழி இந்தியாவில் நுழைக்கப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தது. இந்தியா திரும்பிய இந்த ஈரானியர்கள் தாம், இப்போது மேற்கிந்தியாவில் பேசப்படும் ஹிந்தி (பிராக்கிருதி) (ஹிந்துஸ்தானி) மொழியைக் கொண்டு வந்தவர்கள் இவர்கள் வந்ததும், அவ்வட்டாரங்களில் வசித்து வந்த பழங்குடிகளான இந்தோனேஷியர்களை தெற்கில், தக்காணத்துக்கும் கிழக்கில் வங்காளக் குடாக்கடல் வட்டாரத்துக்கும் அதற்கப்பாலும் செல்லச் செய்தனர். இவ்வாறாக நெருக்கித் தள்ளப்பட்ட இந்திய இந்தோனேஷியர்கள் பசிபிக் தீவுகள் வரையிலுள்ள வட்டாரங்களில் குடியேறினர்.

நார்டிக் இனத்தவரும் இந்தியா திரும்பியபோது தங்கள் மொழியையும் கொண்டு வந்தனர். ஆயினும் ஈரானிய, பர்மீரிய, பாரசீக, கிரேக்க மொழிப் பண்புகள் இம்மொழியில் கலந்திருந்தன. இந்தக் கலப்பு மொழி தான் பின்னர் சமஸ்கிருதமெனப்பட்டது.

இந்த சமஸ்கிருத மொழி, பரம்பரை அனாதிகால மொழியென்றும் (தெய்வமொழி என்பர் தென்னாட்டுப் பார்ப்பனர்) இலக்கிய வளமிக்கதென்றும் கூறி, அப்போதிருந்து வந்த ஹிந்தி (ஹிந்துஸ்தானி) மொழிகளின்மீது திணிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்த பழம் பெரும் மொழிகளான இந்தோனேஷிய மொழியிலிருந்து அடி நாளில் பிறந்த ஹிந்தி (ஹிந்துஸ்தானி)யும், நார்டிக் மொழிகளும் பல்வேறு வட்டாரங்களில் நெடுகப் பேசப்பட்டு, பாக்ட்ரியானாவில் சமஸ்கிருதமாக உருமாற்றமும் பெயரும் பெற்றது, மொழி வரலாறுகளில் அறியக் கிடக்கிறது. இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட இந்த சமஸ்கிருதமும், ஹிந்தி (ஹிந்துஸ்தானி)யும் அப்போதிருந்த பற்பல இந்திய மொழிகளில்; ஊடுருவி முக்கியமாக வடஇந்தியாவில் வழங்கிய மொழிகளை ஆக்ரமித்துத் தலைமையிடம் கொண்டன.

சமஸ்கிருத மொழிக்கும், நார்டிக் மொழிகளுக்கும், முக்கியமாக கோதிக்மொழிக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஏனெனில் இந்த சமஸ்கிருதமும் நார்டிக் மொழிகளில் ஒன்றேயாகும் என்று டாக்டர் பாப் சுட்டிக்காட்டுகிறார்.

மற்ற மொழிகளைவிட இந்த சமஸ்கிருத மொழி தான் அதிகமாக அயல் மொழிகளின் கலப்பைக் கொண்டு பெரும் உருமாற்றம் பெற்றிருக்கிறது. இருந் தாலும் இதுவும் நார்டிக் மொழி குழுவைச் சேர்ந்ததே யாகும்.

இன மனித உட்பிரிவுகள்

தென்கிழக்கு ஆசிரிய மக்களின் இனப்பிரிவைத் திட்டவட்டமாகக் கணித்துக் காண்பது கடினமாகவிருந் தாலும் முக்கியமாக முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்க லாம். அவை :—

1. இந்தாஃப்ரிக்கர் (கருப்பர்)
2. துரேனியர் (மஞ்சள்-சிகப்பு)
3. ஆரியர் (மாநிற-வெள்ளை)

இப்போது, இவர்களில் இந்தாஃப்ரிக்கர் முக்கிய மாகத் தென்மேற்குப் பசிபிக்தீவுகளிலும், மத்தியாஃரிக் காவிலும், தென்னாஃப்ரிக்காவிலும் (அமெரிக்காவில் இருப்பவர் தவிர்த்து) வசிக்கின்றனர்.

துரேனியர்கள் முக்கியமாக கிழக்கு ஆசியாவிலும், மத்திய ஆசியாவிலும், வடக்கு யூரேஷியாவிலும் (அமெரிக்க இந்தியர் தவிர்த்து) வசிக்கின்றனர்.

ஆரியர்கள் முக்கியமாக இந்தியாவிலும், ஈரானிலும் (பாரசீகம்), அய்ரோப்பாவிலும், வடக்காஃப்ரிக்காவிலும், தென்னாஃப்ரிக்காவிலும் வசிக்கின்றனர்.

இந்தாஃப்ரிக்கன் மொழி, துரேனிய மொழி – ஆரிய மொழி இந்த இனப்பிரிவினையின் அடிப்படையிலே வந்தவை. ஆயினும் பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளன; அடைந்து வருகின்றன. கெதேயில் குடியேறும் வரை அதாவது கி. மு. 2300 வரை நார்டிக் மக்களின் தெற்கிலே மேற்கு துருக்கிஸ்தானத்தில் துரேனியர்களும் (துருக்கியர்) (சுமேரியர்) கி. மு. 4300 வரை) பின்னர் ஹிட்டைட்சும் (கி. மு. 2300 வரை) இருந்தனர் நார்டிக் மக்கள் துவக்க காலத்தில் எண்ணிக்கையில் குறைவாகவிருந்ததால், தங்களைவிட நாகரீகமக்களான சுமேரியர்களின் சம்பந்தத்தையும் கருத்துக்களையும், பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டனர்.

நார்டிக்குகளும், ஹிட்டைட்சுகளும் கலந்துவாழ்ந்ததன் விளைவாக துரேனியமொழி நார்டிக்மொழி சார்பினதாக மாற்றம் பெற்றது. ஹிட்டைட்ஸ்மொழியிலிருந்தும் பல சொற்கள் சுவீகரிக்கப்பட்டன.

நார்டிக்குகளின் படையெடுப்பு

துரேனியர்கள் தெற்கே பரவியபோது நார்டிக்குகள் தங்கள் தாயகத்தை விட்டு வெளியேறி பாக்ட்ரியானாவில் குடியேறினர். இவ்வட்டார மக்களின் மொழிக்கிணங்க தங்கள் மொழியிலும் மாற்றம் செய்து கொண்டனர். இங்கு வசித்த மக்களின் கலாசாரம் இரானிய கலாசாரத்தைப் போன்றதே.

இவர்கள் தெற்கு நோக்கிப் படை எடுக்கத் தீர்மானித்தபோது இவர்களுடைய மொழி வேத சமஸ்

கிருதம். கி. மு. 1400-ல் வடமேற்கிலிருந்து இந்தியா விற்குள் வந்தபோது இந்த வேத சமஸ்கிருதமொழி யைத்தான் தங்கள் இலக்கியங்களில் கையாண்டனர். இவர்கள் அடிநாளில் இனங்களாகவும் வகுப்புகளாகவும் பிரிந்திருந்ததாகவும் "ஏழு ஆற்று நாட்டில்" (மத்திய ஆசியா) வசித்து வந்ததாகவும் திட்டவட்டமாக அறியக் கிடக்கிறது. இவர்கள் இரு குழுவினராக இருமுறை இந்தியாவில் நுழைந்தனர். இரு குழுவினரும் ஒரே மொழியை இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர். பின்னவர் மொழியில் பாரசீகம், கிரேக்கக் கலப்படம் அதிகம் இருந்தது. இரண்டாம் படையெடுப்பே பிற்கால வரலாற்றுக்கு முக்கியமானதாகிறது.

கி. மு. 750-ல் இவர்கள் காஸ்பியன் கடல் நோக்கி நகர்ந்தனர். பாரசீகத்தில் தடை ஏற்பட்டது. பாரசீகர்கள் தாக்குதல் வலுக்கவே, இவர்கள் தனித்தனி கும்பலாகப் பிரிந்துசென்று, தனித்தனித் தலைவர்கள் தலைமையில் தனியினங்களாகிவிட்டனர்.

இந்தப் பிரிவினர்களில் ஒருவரான காஸ்பி சாதி யாரின் பெயரடியாகவே காஸ்பியன் கடல் எனப் பெய ரிடப்பட்டது. இவர்களில் பெரும் பகுதி கிழக்கே பாமிர் மலைப்பகுதிகளை நோக்கி நகர்ந்தனர். அங்கிருந்த பழங்குடிகளையும் சிதைத்து ஒடுக்கினர்.

வடகிழக்கு ஈரானில் குடியேறியவர்களில், குடி யேறிய இந்த நார்டிக் சாதியார்களில் முக்கியமானவர்கள் ஆரீ-சோராங்மீ-பாஸியானி ஆகியோர்.

ஆரிசாதியார் முதலில் தங்கிய வட்டாரத்திலிருந்த ஆற்றுக்குத் தங்கள் பெயரடியாக ஆரியஸ் நதி என்று பெயரிட்டனர்.

ஆரியர் என்ற சமஸ்கிருத மொழியிலிருந்துதான் ஆரியன் என்ற சொல் தோன்றிற்று.

ஆரியன் என்றால் "மேல் மக்கள்" "ஆளும் இனம்" என்று பொருள் ஆகியது.

சிதறிய நார்டிக்குகள்

இந்த நார்டிக் இனத்தார் பிற்காலத்தில் பல்வேறு குழுவினராகச் சிதைந்து பல்வேறு வட்டாரங்களில் பரவியபோது அவர்களுடைய அடிநாள் பொதுப் பெயரும் மறைந்தது! தனிப்பிரிவினராகித் தனித்தனி பெயர்களிட்டுக்கொண்டனர். பாமீர் வட்டாரத்தில் பாமிர்யர்கள் குஷான்கள் என்று பெயர் கொண்டனர். இதுவே பாக்ட்ரியானா நாடு. இதில் புக்காராவும் சேர்ந்தது. இதன் தலைநகர், இப்போது வடஆஃப்கானிஸ்தானத்திலுள்ள 'பால்க்' என்பது.

தோக்காரி, குஷான்கள் எப்தாலைட்ஸ் சாக்கே சாக்கியர் ஊசன் ஆகிய சாதியார் (உட்பிரிவினர்) இணைந்து பெரும் சாம்ராஜ்யத்தை நிர்மானித்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் அடிப்படையில் நார்டிக் மக்களே. பாக்ட்ரியானாவில் குடியேறியவர் வெள்ளை ஹூனர்களென சீனர்களால் அழைக்கப் பட்டனர். இவர்களும் நார்டிக்குகளில் ஒரு பிரிவினரான கோத்திக் இனத்தவரேயாவர். இந்தியாவுக்குள் வந்தவர்கள் ஆரிய மொழியினவர் என்பதற்கு பல்வேறு சரித்திர ஆதாரங்களுள்ளன.

அலெக்சாண்டர் படைஎடுப்புக்குப் பின்னர், அதாவது கி. மு. 701ம் ஆண்டு வாக்கில் வடமேற்கு இந்தியாவில் வேத சமஸ்கிருத மொழி செல்வாக்கற்றுப் போயிற்று. இப்போதுள்ள சமஸ்கிருதமொழி அப்போது அங்கு கிடையாது.

இப்போதைய சமஸ்கிருதம்

குஷான் வம்சத்தைச் சேர்ந்த கனிஷ்கரின் ஆட்சி கி. மு. 58ல் துவக்கமாகிறது. இந்தியாவில் விக்ரம சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் இந்த கனிஷ்கரே.

மற்றும் அக்காலத்தில் வட இந்தியாவில் வழங்கி வந்த கிரேஷிய கலாச்சாரங்களையும், கிரேக்க மொழியையும் ஒழித்து, நார்டிக் மொழியை அடிப்படையாகக் கொண்ட இப்போதைய சமஸ்கிருத மொழியைத் தோற்றுவித்தார். இது பழங்குடிகளின் சொற்களை (பிராக்கிருதம்) கொண்டது. எனவே இப்போது வழங்கப்படும் சமஸ்கிருத மொழி கி.மு. 58ல் தோன்றிய தெனலாம்.

கி. பி. 123-153ம் ஆண்டுகளில் ஆண்ட இரண்டாவது கனிஷ்கர் பவுத்தர். இவர் காஷ்மீர் வட்டாரங்களில் பவுத்தமதக் கொள்கைகளை தற்கால சமஸ்கிருத மொழியில் எழுதி பழங்குடிகளிடையே பறப்பினர்.

இவற்றையெல்லாம் கவனிக்குமிடத்து சமஸ்கிருத மொழி எப்போது பிறந்தது! அதன் அடிப்படை மூலம் என்ன? எம்மொழிகளிலிருந்து பிறந்தது? இது இந்தியாவில் எப்போது—எவ்விடம் நுழைக்கப்பட்டது என்பன, சந்தேகமறத் தெளிவுபடுகிறது.

இந்த சமஸ்கிருதமொழி பாக்ட்ரியானாவிலிருந்துதான் வந்தது என்று தற்கால அறிஞர்கள் பலர் திட்டமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்திய சமஸ்கிருத மொழி வரலாறு

இந்தியாவில் நுழைக்கப்பட்ட சமஸ்கிருதமொழி வேதகால சமஸ்கிருதமென்றும், தற்கால சமஸ்கிருத மென்றும் இருவகைப்படும் என்பதும், இவற்றின் பிறப்பு வரலாறும் மேலே தெளிவுபடுத்தப்பட்டது. அதாவது வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குள் வந்த நார்டிக் ஆரியரால் இறக்குமதிசெய்யப்பட்ட மொழி என்பது விளக்கப்பட்டது.

சமஸ்கிருதம் என்ற சொல்லுக்கு, திரட்டி தொகுத் தது. புதுப்பித்து அமைக்கப்பட்டது என்று பொருள். பழங்கால மொழிகளுக்கும் இந்த புதுமொழிக்கும் வேற் றுமை காணவே இப்பெயரிடப்பட்டது. பிராமணீய இந்தியா காலத்தில் வழங்கப்பட்ட சமஸ்கிருதத்திற்கும் அதற்கு முன்னையகால சமஸ்கிருதத்திற்கும் பல வகை களிலும் வேற்றுமை காணப்படுகிறது. வேதகால சமஸ்கிருதம், கலைக்கால சமஸ்கிருதத்திலிருந்து பல வகைகளிலும் மாறுபட்டது.

இந்த சமஸ்கிருதமொழி, இந்தோ-ஜெர்மானிய அல்லது ஆரிய மொழியிலிருந்து பிறந்த கிழக்கோடி வட்டாரப் பிரிவாகும்.

இந்து ஆரியர்கள், வடமேற்கிலிருந்துதான் இந்தி யாவுக்குள் வந்தனர் என்பது மக்கள் சரித்திரங்களால் உறுதிப்படுகிறது.

இந்த ஆரியர்கள் கிழக்கு கபூலிஸ்தான் மலை வட்டாரங்களிலிருந்து பஞ்சாப்புக்கும் அதன் பின் யமுனை—கங்கை ஆற்று வட்டாரங்களுக்கும் வந்தனர் என்பது அவர்களுடைய பரம்பரை இலக்கிய ஏடுகளி லிருந்தே அறியக் கிடக்கிறது.

வேத ஆரியர்கள்—ஈரானிய மக்கள் ஆகிய இரு இனத்தவர்களின் மொழி—மத நூல்கள் ஆகியவற்றிற்குள்ள ஒற்றுமையைக் கவனிக்குமிடத்து இவ்விரு இனத்தவர்களும் இந்து—ஜெர்மானிய குடும்ப சந்ததிகளேயெனவும் இருவரும் முன்னர் சேர்ந்திருந்து பின்னர் பிரிந்தவர்களெனவும் தெளிவாகிறது.

சமஸ்கிருதத்தின் முக்கியத்துவம் பற்றி பெரும்பாலும் மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன. ஆதித் தாய்மொழியின் கலை மகள் இந்த சமஸ்கிருதம் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஏனெனில் இந்த இனத்தைச் சேர்ந்த மற்ற ஆறு மொழிகளான, ஈரானிய—ஹெலினிக், இத்தாலிய- செல்டிக்-ட்யூடானிக் லெட்டோஸ்லாவிக் மொழிகளில் இலக்கிய வளமின்மையால் இந்த சமஸ்கிருதம் முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த இலக்கியவளமும், ஆங்காங்கு பல நாடுகளிலுள்ள, தொன்மை மொழிப் புலவர்களின் கூட்டுறவால் ஏற்பட்டதேயாகும். கிரேக்க மொழிக்கும் சமஸ்கிருத மொழிக்கும் அதிக ஒற்றுமை காணப்படுகிறது.

இந்திய எழுத்துக்களின் பிறப்பு பற்றிய வரலாறு இன்னும் புலனாக வில்லை. அசோகர் காலத்தில் புத்தமத அறமொழிகள் பாலிமொழியிலே பாறைகளிலே செதுக்கப்பட்டிருக்கின்றன. மவுரிய-ஆந்திரா வரிவடிவங்களுக்கு முன்னைய வரிவடிவம் பற்றி விளக்கம் கிடைக்க வில்லை.

எனவே பிராமணர்கள் எதையும் எழுதவில்லை என்றும், அவர்களுடைய மொழிக்கு அப்போது வரிவடிவம் (எழுத்து) இல்லையென்றும், சமஸ்கிருத வரிவடிவம் பிற்காலத்தில் இந்திய மொழி வரிவடிவங்களிலிருந்து அமைத்துக்கொள்ளப்பட்டதே என்றும் தெளிவுபடுகிறது.

ராயல் ஏசியாடிக் சொசைட்டி ஜர்னலில் 14-வது பாகத்தில் இந்த மெய்மை தெளி வுறுத்தப்பட்டுள்ளது.

சமஸ்கிருதம் ஒரு மொழியென்றாலுங்கூட இது இந்தியாவில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி மொழியாகவுமிருந்ததில்லை, பேச்சுமொழியாகவும் இருந் ததில்லை. அக்காலத்தில் ஆண்ட கிரேக்க--பாக்டரி யானா மன்னர் கியூக்ராடைட்சின் சந்ததியார் நாட்டு மொழியான "பிரம்மி" மொழியில் தான் நாணயங்களை அச்சிட்டனர். இந்த பிரம்மி எழுத்துக்கள்தான் இப் போது வழங்கப்படும் நகரி-தேவ-நகரி எழுத்துக்களுக்கு தாயாகும். இந்த பிரம்மி மொழியின் அடிநாள் வரலாறு என்ன என்பது இன்னும் கலைஞர்களாலும் கண்டு பிடிக்க இயலவில்லை.

பாக்டரியானாவிலிருந்த இந்த வடக்கத்தி தலைவர் கள் அடிப்படையில் கிரேக்கர்களே யாகையால், இவர்கள் இந்தியாவுக்கு வந்தபோது திருத்தப்பட்ட நார்டிக் மொழியை (சமஸ்கிருதம்) இந்தியாவில் நுழைக்க அதிக அக்கரை கொள்ளவில்லை.

கி. மு. 58ல் வட இந்தியாவில் ஆண்ட குஷான் குலத்தினரே இந்த சமஸ்கிருத மொழியை வட இந்தி யாவில் பரப்பும்பணியை மேற்கொண்டனர். முதலாவது கனிஷ்கர் வடமேற்கு இந்திய வட்டாரங்களைப் பிடித்த பின் இந்த சமஸ்கிருதத்தைப் பரப்புவதில் கருத்துச் செலுத்தினார்.

இதற்குமுன், நாட்டுமொழிகளுடன் கிரேக்கமொழி தான் ஆட்சித் துறையில் கைக்கொள்ளப்பட்டிருந்தது. கனிஷ்கர் காலத்தில் கிரேக்க் மொழி, நாட்டு மொழிகளி

னிடத்தை சமஸ்கிருதம் பிடித்துக்கொண்டு அரசாங்க மொழியாயிற்று.

பாக்ட்ரியானாவுக்கு வருமுன் நார்டிக்-ஆரிய தொக்காரிகளின் மொழி சமஸ்கிருதமாக இருந்தாலும், பக்ட்ரியானாவில் அந்நாட்டுமக்கள் மொழிகளைத் தழுவி கி. மு. 546—330ல் பெரும் மாற்றம் செய்யப்பட்டது. முக்கியமாக கி. மு. 330—126ல் கிரேக்கர் காலத்தில் அதிக மாறுதல் பெற்று உருமாற்றமடைந்தது, இந்த சமஸ்கிருதமொழி.

எனவே, இப்போது வழங்கப்படும் நவீன சமஸ்கிருதம் அரசுத்துறையில் கி. மு. 58-ம் ஆண்டு வாக்கில் தான் நுழைக்கப்பட்டது என்பது நிரூபிக்கப்படுகிறது. இது ஆட்சி ஆதிக்கம் கொண்ட இனத்தவர்களின் மொழியாகவிருந்தால் ஆளப்பட்ட இந்நாட்டு பழங்குடி இலக்கியப் புலவர்கள் இந்த அயல்மொழியை ஏற்றுக் கொள்ள அதிகக் காலமாயிற்று.

சமஸ்கிருதம் ஒரு தாய்மொழியல்ல

மேலேயுள்ள வரலாறுகளால் விளக்கமாவது என்ன?

வேதகால சமஸ்கிருத மொழியும், நவீன சமஸ்கிருத மொழியும் மேற்கு இந்தியாவில் அந்நிய நாட்டினரால் நுழைக்கப்பட்டவை என்பதும், இவற்றிலிருந்து இப்போது வழக்கிலுள்ள சமஸ்கிருதமொழி இந்தியாவின் பழங்கால மொழிகளுக்குத் தாய்மை மொழியாக இருக்க முடியாது என்பதும்,

சமஸ்கிருதம் பிறப்புவகையிலும், இந்தியாவில் இடம்பெற்ற வகையிலும் அண்மைக்

காலத்தினதே என்பதும், அதாவது அண்மைக் காலத்தில் பிறந்து அண்மைக்கால இந்தியாவில் இடம்பெற்ற மொழியே என்பதும் (சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன்) தெளிவுபடுகிறது.

பர்மிரியாவிலிருந்து இந்தியாவுக்குள் வந்த ஆரியர்கள், பல புதிய மொழிகளையும் நுழைத்தனர். வடமேற்கில் வழங்கப்படும் ஹிந்தி (இந்துஸ்தானி) மொழியும் இதிலொன்று. இம்மொழி இரானிய (பாரசீக) மொழியிலிருந்து பிறந்தது. மேற்கிலிருந்து இந்தியாவுக்குள் படை எடுத்தவர்கள் அண்மைக் காலத்தில் நுழைந்ததே இம்மொழியும். இதுவும் அண்மைக்கால நுழைவுமொழி என்பதற்குப் பல சரித்திர ஆதாரங்கள் உள்ளன.

இந்த ஆராய்ச்சியால் அறியக்கிடப்பது என்னவென்றால் :—

> தற்கால ஆரியமொழிகள் எல்லாம் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பழங்காலத்தில் வழங்கிய இந்தோனேஷிய மொழியிலிருந்தே பிறந்தவை என்பதும் திராவிட மொழிகளுக்கெல்லாம் பிற்பட்டதென்பதும், திராவிட மொழிகளினிடையே முன்னணியிலும் பின்னணியிலும் அலைந்து கொண்டிருந்ததென்பதும், படை எடுப்பாளர்களுக்கு சாதகமாக இருந்ததென்பதும் ஆகும்.

தற்காலப் புலவர்கள் தீட்டியுள்ள மொழி வரலாற்று நூல்கள் முழு ஆராய்ச்சியின் சித்திரமாக இல்லை. மக்களின் இனம்—மொழி—பிறப்பு வளர்ச்சி வரலாறுகளில் ஆழ்ந்த கருத்துச் செலுத்தாமலேயே சரித்திரம் தீட்டி விடுகின்றனர். மக்கள் பிறந்த இடம்

வாழ்ந்த இடம்-அவ்வக்கால பண்புகள்- கோட்பாடுகள் —அவர்கள் பேசிய வெவ்வேறு மொழிகளின் அடிப் படை—வளர்ச்சி வரலாறுகள்—அம்மொழிகள் எங் கெங்கோ—எவ்வெப்போது பேசப்பட்டன. எங்கெங்கே எவ்வெத்துறைகளில் மாற்றங்களடைந்தன. எதனால் அம்மாற்றங்கள் செய்யப்பட்டன-முதலிய வரலாறுக ளையும் கண்டு தொகுத்திருந்தால், சரித்திர வரலா றுகள் அதிகப் பயனுள்ளதாக இருக்கும். இப்பொது இத்துறையில் போதுமான ஆதாரங்கள் இன்மையால் இம்மொழி வரலாற்று ரகசியங்களை அறிவது கடின மாகவுள்ளது.

ஆரிய இனமொழி

"ஆரியன்" என்ற பெயர் இரானிய இனமான ஆரியை (Arii) என்பதன் அடிப்படையாக வந்தது; மொழி பழக்க வழக்கங்களும் மேற்படி இனத்தவரதே. இந்த ஆரிய இனமொழியிலிருந்தே சமஸ்கிருதம் வந்தது.

சமஸ்கிருத மொழியின் அடி வரலாற்றை திட்ட வட்டமாக அறிய பல்வேறு நார்டிக் மக்கள் ஒன்றாக இருந்த அடி நாளிலிருந்து, பின்னர் பல்வேறு காலங் களில் பல்வேறிடங்களில் பேசிய மொழிகளின் வரலாறு களையும் கவனிக்க வேண்டும்.

இந்தியாவில் வழங்கிய இந்தோனேஷிய மொழியை, ஈரானியர் சுலைமான் மலைகள் வழியாக ஈரானிய பீடபூமிக்குக்கொண்டு சென்றனர். இந்தக்காலம் முதல் அம் மக்களின் வாழ்க்கைத் துறைகளிலும் மொழித் துறைகளிலும் பற்பல மாறுதல்கள் ஏற்படலாயின.

கி. மு. 7700—7500 ஆண்டு வாக்கில் நார்டிக்குகள் துரேனியர்களுடன் தொடர்பு கொண்டு வந்துளர்.

மேற்கு துருக்கிஸ்தானத்தில் கி. மு. 7500-ஆண்டு வாக்கில், சுமேரியர்கள் காலூன்றிய காலத்தில், நார்டிக்குகள் வடமேற்காகப்படர்ந்து தம்துதாயகமான கெத்திக் நாட்டுக்கு மீண்டும் திரும்பினர். அதன்பின் கி. மு. 4300 வரை—அதாவது மேற்கு துருக்கிஸ்தானில் சுமேரியருக்குபதில் ஹிட்டைட்சுகள் ஆதிக்கம் கொண்ட போது, இரு இனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மொழி—பழக்க வழக்கத் தொடர்புகளே அதிகம் கவனிக்கவேண்டியதாகும். அடுத்த 2000 ஆண்டுகளில் நார்டிக்குகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது. எனவே அவர்கள் தனித்தனி குழுவினராகப் பிரிந்து பல திக்குகளிலும் பரவினர்.

தற்கால சமஸ்கிருத மொழியிலுள்ள ஈரானிய, பாரசீக, பாமீரிய கிரேக்க மொழிக் கலப்படங்களை நீக்கிவிட்டால், இது பழங்கால மாஸாகெட்டே அல்லது தேக்காரி மொழியாகும். கி. மு. 1000-750ல் வழங்கிய சாக்கிய மொழியும் இவ்வாறே இருக்கும்,

மொழிகளின் தாயகம்

பல்வேறு ஆரியமொழிகள் பிறந்த அடிப்படை தாய் மொழியும், இந்தாஃப்ரிகன் மொழிகளும், துரேனியின் மொழிகளும் பிறந்த தாய்மை மொழியும், வங்காளக் குடாக்கடல் கரையோரத்தை அடுத்த வட்டாரங்களிலும் அல்லது இந்தியாவின் உட்பகுதிகளிலும் பிறந்தனவேயாகும். மற்றும் இப்போது தக்காணத்தில் வசிக்கும் திராவிட மக்களின் மூதாதைகள் பேசிவந்த தொன்மை மொழியிலிருந்தே, இந்த ஆரிய மொழிகளும் மற்ற மொழிகளும் பிறந்தவையாகும்.

கன்னடம், துளு, குடகு, தோடா, கோட்டா, குருக்ஸ், மால்டோ, தமிழ், மலையாளம், தெலுங்கு, கூயி, கோண்டி ஆகிய திராவிட மொழிகள், பால் திணை ஆகியவைகளுக்காக பல் வேறு குறிகளைச் சேர்த்துக்கொண்டுள்ளன.

ஜாவா, சுமத்திரா, மலேயா, வட்டாரங்களிலும், வங்கக் கடல் கரைப்பகுதிகளிலும் இன்னும் பல தொன்மை மொழிகள் பேசப்படலாம்.

இந்தாஃப்ரிக்க இனத்தார் வடமத்திய இந்தியாவிலும், துரேனியர்கள் பர்மாவிலும் அதற்கு வடகிழக்கு வட்டாரங்களிலும், ஆரியர்கள் வடமேற்கு இந்தியாவிலும் இருப்பதாகக்கொள்ளலாம். மற்றும் துரேனிய இனத்தார், திபேத்திய பீடபூமியின் கிழக்குச் சரிவுகளிலும், ஆரிய இனத்தார் சுலைமான் மலைகளைக் கடந்து இரானிய பீடபூமியிலும் இண்டஸ் (சிந்து) ஆற்றின்மேல் படுகை வழியாகக் காஷ்மீரிலும், மேற்குத் திபேத்திலும் (இறுதி குடியேற்றம் கி. மு. 6000) அதற்கு அப்பாலும் குடியேறினரெனலாம்.

இந்தாஃப்ரிக்க இனத்தார், கிழக்குமுகமாக பசிபிக் தீவுகளுக்கும், மேற்கு முகமாக தென் அராபியா, ஆஃப்ரிக்கா மூலமாகவும் இந்தோனேஷிய ஆரியர்களால் விரட்டப்பட்டனர். இந்தோனேஷிய ஆரியர்களும் பனிக் கடுமையால் வட இந்தியாவிலும், தென்முகமாக தக்காணத்திலும் பரவவேண்டியதாயிற்று. இது கி. மு. 5000 வாக்கில் நடந்தது. எனவே ஆரிய இனத்தைத் தோற்றுவித்தவர்களும், இப்போது தக்காணத்திலுள்ள திராவிட மக்களின் இந்தோனேஷியக் கிளை மூலமான மூதாதைகளே என்கின்றனர். இந்தாஃப்ரிக்கர்கள் வெளியேறியதும் இந்தோனேஷியர் சிந்துநதி வட்டாரத்தில் குடியேறினர். சுலைமான் மலையைக்கடந்து

திரும்பி வந்த இராவியர் (ஹிந்துக்கள்) வட தக்காண திராவிட மக்களிடையே ஊடுருவினர். இந்த ஆராய்ச்சியில் காணும் முடிவுக் கருத்தாவது ,—

1. திராவிடருக்கு முற்பட்ட மக்கள்

ஜாவா, சுமத்ரா, மலேயா, இலங்கை, ரோடியர், பெருகுயீச்சுவா, வங்காளக்கடலின் இருமருங்கு கரையோர வட்டார மக்கள்.

2. தக்காண திராவிடர்

கன்னடம், துளு, குடகு கோடா, கோட்டா, குருக்ஸ் (குறும்பர்) மால்டோ, தமிழ், மலையாளம், தெலுங்கு, கூயிகோண்டி மொழி பேசுபவர்கள். இவர்கள் நீண்ட தலை மக்கள். இது அடிப்படை முக்கியம்.

3. இந்தோனேஷியர்

இது வடமேற்கில் பரவிய இனம்; திராவிட மொழியில் திருத்தம்செய்து பேசியவர்கள் வங்கமொழியின் அடிப்படையிலும், பசிபிக் தீவிலுள்ள போலினேஷியர் மொழிகளின் அடிப்படையிலும் ஒப்பனை காணலாம். இந்தாஃப்பிரிக்கன் நாரேனிய மொழிகளுடன் இவைகளும் தோன்றியிருக்கலாம். இவர்களும் நீண்ட தலையுடைய மக்களே.

4. ஈரானியர்கள் (மத்தியதரைக்கடல் வட்டாரத்தினர்-ஹாமைட்கள் ஹிந்துக்கள்):—

மத்தியதரை வட்டாரத்தினர் - மொழி வட்டாரங்கள் கருங்கடலுக்குத் தெற்கே—ஈரான், அரேபியா, பழங்கால எகிப்து, கிரீட், மத்தியதரை முகத்துவாரப் பகுதிகள் ஹாமைட்கள் வட்டாரங்கள் :— மேற்கு இந்தியா, தென் ஈரான் எத்தோபியா (அபிசினியா) பிற்கால எகிப்து.

ஹிந்து — ஈரானிலும் இந்தியாவிலும் ஹிந்தி மொழிகள் பேசும் வட்டாரங்கள்.

அடிநாளில் இவ்வினத்தவர்களும், இந்தோனேஷியர்களிடமிருந்து தோன்றியவர்களே; இவர்களும் நீண்ட தலைகளையுடையவர்களே.

5. செவ்ட்டோ ஸ்லாவ்ஸ்

சிறிய தலையுடையவர்கள், பாமீரியர், ரஷ்யாவிலுள்ள ஸ்லாவ்கள், பால்கன் முதலிய வட்டார மக்கள் அண்ட்டோலி யாஹெலன்கள், கிரீசிலும் சுற்று வட்டாரத்திலும் வசிப்போர், மத்திய அய்ரோப்பிய ஆல்பைன் கெல்ட்கள் (இத்தாலி, அய்பீரியன் தீபகற்பம், மத்திய ஃப்ரான்ஸ், கிழக்குஃப்ரான்ஸ் ஆகியவைகளில் வசிப்போர் உட்பட) இவர்களும் ஆதி இந்தோனேஷியரிடமிருந்து உற்பத்தியானவரே.

6. நார்டிக் மக்கள்

உருண்டைத் தலையர்களான ஆரிய மக்கள், சூவியர்: நார்வீஜியர், சுவீடன் மக்கள், பிரிசியர், ஆங்கிலர் சாக்ஸன்கள், துரிங்கியர், பவேரியர்; செம்னோனியர் அல்லது சுவாபியர், அலிமன்னியர், கிம்மேரியர்-மேதியர், குர்டுகள், தோரியர், அல்பேனியர், லத்வியர், லித்துவேனியர், பழைய புரஷியர்-டேனிஷ்காரர், மற்றும் வீசர், வெரா ஆறுகளுக்கு மேற்கிலும் உர்டன் பர்க் தென் பேடன், அல்சாசுக்கு வடக்கிலும் மேற்கு ஃப்ரான்சிலும் வடக்குப் ஃப்ரான்சிலும் வசிப்போர் (மத்தியதர வட்டார புருனட்டுகளையும், அல்பைன் கெல்டுகளையும் ஆங்கிலோ சக்சன்களைத் தவிர்த்தும்)

கேதே-சுவீடன், இத்தாலி, ஸ்பெய்ன் ஆகியவற்றிலுள்ள கோத்கள்.

மாஸ்ஸகேத்தே வடகிழக்கு ஈரான், தோக்கரி, குஷான், பாக்ட்ரியானா, எப்தாலைட்கள்.

சாக்கே:- சாக்யோனியாவில் வசிக்கும் ஊசுன்கள் உட்பட இறுதியில் கூறப்பட்ட இரு இனத்தவரில் இந்தியாவில் சிந்தோ இந்திய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்தவர்களின் சந்ததியாருமுளர். இவர்கள் மொழி சமஸ்கிருதம்

சார்மேதியரான போலந்தியர், உக்ரேனியர், கிம்மேரியர் கெத்தே இனத்தவர்கள் கலப்பட சந்ததியார்.

இவர்கள் கெல்ட்டோஸ்லாவ் இனத்திலிருந்து உற்பத்தியானவர்கள். இயற்கை மாறுதல்களால் நாளடைவில், ஏற்பட்ட உட்பிரிவுகளால் இவர்கள் தனித் தனியாயினர். எனவே அடிநாள் வரலாற்றைக் கொண்டு தான் இவர்களுடைய அடிநாள் உற்பத்தியையும் இனத்தையும் கணிக்க முடியும்.

எனவே மேற்கண்ட ஆராய்ச்சிக் குறிப்புகளில் இருந்து இன்றைய ஆரியர்கள் என்பவர்கள் பல இடங்களில் பராரியாகத் திரிந்த பல கூட்டங்களில் இருந்து இந்தியாவுக்கு வந்து தங்கிபோன ஒரு கலப்பு இனக் கூட்டம் என்பதும், இவர்கள் இப்போது தங்கள் தாய் மொழியாகவும் மத மொழியாகவும் பாவித்துக்கொண்டு மற்றவர்களுக்கு தேவமொழி என்று கூறி ஏமாற்றுப் பிரசாரம் செய்யும் சமஸ்கிருதமொழி என்பதானது, பல பிரிவு மக்கள் பல இடங்களில், பல காலங்களில் பேசி வந்த பல்வேறு மொழிகளின் சேர்ப்பு மொழியே தவிர, ஒரு குறிப்பிட்டகால குறிப்பானமொழி அல்ல என்பதும் இதில் எவ்விதமான உயர்வுத் தன்மையும் கிடையாது என்பதும், பார்ப்பனர் அதைப்பற்றி உயர்வாகப் பேசுவதும் பிரச்சாரம் செய்வதும் தங்கள் சமய-மத கோட்பாடுகளை உயர்த்திக் கொள்ளவும், நமது மொழிகளை இழிவுபடுத்தவுமே ஆகும் என்பதும் நன்றாய் அறியப் படுகின்றன.

கடவுள்கள் பித்தலாட்டம்

2

"விஷ்ணு அவதாரம்"
"விஷ்ணு அவதாரக் கடவுள்கள்"

என்பவை பார்ப்பனர்களின் மாபெரும் பித்தலாட்டமாகும்.

> இது சமஸ்கிருதம் தேவ பாஷை, முக்கிய பாஷை, காப்பாற்றப்படவேண்டும் என்பது போன்ற மொழிப் பித்தலாட்டம் போலவே இது ஒரு மாபெரும் கடவுள் பித்தலாட்டமாகும்,

உலகத்தைப் படைத்துக் காத்து அளிக்கும் சக்தி உள்ள, ஆதியும் அந்தமும் இல்லாத, உருவமற்ற, குணமற்ற, கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாத, பிறப்பு இறப்பு இல்லாத எங்கும் நிறைந்து யாவுமாய் இருக்கிற "கடவுள்" என்பதாக ஒன்று இருக்குமானால் இருந்து போகட்டும். அதைப்பற்றி யாரும் இருக்கிறதா—இல்லையா என்றுகூட தொல்லைப்படவேண்டிய அவசியம் இல்லை. அதை மறுக்க இக்கட்டுரை எழுந்ததும் அல்ல.

ஏனெனில், இந்தப்படி ஒரு கடவுள் இருப்பதை நம்பவேண்டுமென்று உலக மக்களின் பெரும்பாலோர் இடையில், வெகு நாட்களாக சில மதங்களால் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்றாலும், அந்த நம்பிக்கை வரவர 100-க்கு $99\frac{3}{4}$ பேர்கள் ஒரு விளக்கமுமறியாத ஆசீர்வாதச் சடங்குபோல் கருதி, காரியத்தில் ஏமாறாமல் இருக்கவே முயற்சித்தும்

நடந்தும் வருகிறார்கள். ஆதலால் அதற்கு ஆக நாம் எதுவும் சொல்ல இப்போது அவசரப்படவேண்டிய தில்லை என்றே கருதுகிறோம்.

ஆனால் மதத்தின்பேரால் இந்துக்கள் என்னும் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் திராவிட (தமிழர்) சமுதாய மக்களாகிய நாம், கடவுள் சம்பந்தமாக என்ன கருத்து புகுத்தப்பட்டிருக்கிறோம். நாம் என்ன கருத்துக்கொண்டு இருக்கிறோம், அது சரியா, தப்பா என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம் என்றே கருதுகிறோம். அதற்கு ஏற்றகாலம் இது என்றும் கருதுகிறோம்.

இன்று நமக்கு கடவுள்கள் **சிவன்** அவன் மனைவி, மக்கள் அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களும்,

விஷ்ணு, அவன் மனைவி, மக்கள், அதன் அவதாரங்கள், அவர்களது மனைவி மக்கள் அவைகளைச் சேர்ந்த பரிவாரங்களும்,

பிர்ம்மா அவன் மனைவி மக்களும்,

மற்றும், **இந்திரன், வருணன், அக்கினி, வாயு சூரியன், சந்திரன்** முதலியவைகளும், குறிப்பிட்ட ஒரு சில **மிருகங்களும்,** ஒருசில பறவை ஜெந்துக்களும், ஒரு சில **மரம், செடிகளும்,** ஒருசில **மலை, நதிகளுமாக** இருக்கின்றன.

இவைகள் அவ்வளவையும் பற்றிய ஆராய்ச்சியை முகவுரையாக முதலில் குறிப்பிட்டுவிட்டு பிறகு இந்துக்களுக்கு முக்கிய கடவுள்களாகக் கருதப்படும், விஷ்ணு, 'சிவன்' அவர்களின் குடும்பம், பரிவாரம் ஆகியவைகளைப் பின்னால் சிந்திக்கலாம் என்று கருதி, இவை

களைப்பற்றி மேல்நாட்டுக் கீழ்நாட்டு பொது ஆராய்ச்சி யாளர்களின் கருத்துக்களை வெளியிட்டு பின்னால் எழுதிவரலாம் என்று கருதுகிறோம்.

இந்த ஆராய்ச்சியானது இந்தக் கடவுள் தன்மைகள் ஆரியர்களுக்கு எப்படித் தோன்றிற்று, அவைகளின் தோற்றத்திற்கு ஆரியர்கள் மூலபுருஷர்களா, அல்லது ஆரியர்கள் மற்ற நாட்டாரைப்பார்த்து; நாட்டில் வழக்கில் இருந்ததைப் பார்த்து தாங்கள் காப்பி அடித்து அவைகளைக் கொண்டுவந்து நம் நாட்டில் புகுத்தினார்களா என்பவை முதலியவைகளை ஆதார ஆராய்ச்சிப்படி வெளியாகி இருக்கும் உண்மைகளைக் குறிப்பிடுகிறோம். அன்பர்கள் கூர்ந்து படித்து சிந்திக்க வேண்டுகிறோம்.

ஹிந்துக்கள் என்னும் ஆரிய மதத்தினர்களிடம் நல்ல கோட்பாடுகளைவிட ஒழுங்கீனமான மதக்கோட்பாடுகளும், பழக்க வழக்கங்களுமே ஏராளமாக இருக்கின்றன என்கிறார் ஆசிரியர் கால்வின்.

சர். வில்லியம் ஜோன்ஸ் என்பவர் இந்துக்கள் சாஸ்திரமான 'மனு'வின் சட்டங்கள் அக்கிரமமானவை —நேர்மையற்றவை என்கிறார்.

"ஹிந்துக்களின் தெய்வங்கள் என்பவையெல்லாம் கெட்டக் குணங்கள், ஒழுங்கீன நடவடிக்கைகள் ஆகியவற்றையே பெரிதும் சித்தரித்துக்காட்ட, மனித உருவில் கற்பனை செய்யப்பட்டவைகளாகும்" என்று பல கவுரவமான பேரறிவாளர்கள் கருதுகின்றனர். உருவ வணக்கத்தின் கொள்கைகள் எல்லாம் பெரிதும் இதேபோன்றவைதானென்பது ஆராய்ச்சியாளர் தீர்ப்பு.

இந்துக்களின் கடவுள்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறீர்களோ அவை இந்துக்களுக்கு மாத்திரம் உரிமையான "ஹிந்து மதக்கடவுள்கள்" என்ற கூற்றும் பொய்யென்பது, பல நாட்டு மத வரலாறுகளைப் படித்துப் பார்த்தால் விளங்கும்.

இந்து கடவுள்கள் என்பன, அயல்நாட்டு, அயல் மதத்தார்களின் கடவுள்கள் "காப்பி" (நகல்) என்றும் ஆதாரங்களின் மூலம் எண்ணவேண்டிருக்கிறது.

உதாரணமாக, இந்துக்கள் லிங்க வடிவை அதாவது சிவன் என்று கூறுவதை கிரேக்கர்கள் பால்லி என்றும் எகிப்தியர் பிரியாபஸ் என்றும், இந்துக்கள் காளி என்று கூறுவதை, கிரேக்கர்கள் தியேனா தவ்ரிகா என்றும் குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து யாருடைய கடவுள்கள் உண்மை, யாருக்கு அக்கடவுள்கள் தனியுரிமையானவை என்று நிர்ணயிக்கவியலாதிருக்கிறது. ஒரே வரலாற்றை, ஹிந்துக்களும், கிரேக்கர்களும் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர் என்றோ அல்லது ஒருவரிடமிருந்து மற்றொருவர் இக்கடவுள்களைச்சுவீகரித்துக் கொண்டனரென்றோ ஆகிறது.

உருவ வணக்கம்

ஹிந்துக்களின், கடவுள்களின் வரலாறுகள்பற்றி பற்பல கூறப்படுகின்றன. இவ்வரலாறுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளாக விருக்கின்றன.

எகிப்தியர்களிடமிருந்துதான் இந்தியர்கள் தங்கள் மதத்தையும் கடவுள்களையும் பெற்றனர் என்று சிலரும், எகிப்தியர்கள்தான் இந்தியரிடமிருந்து தங்கள் மதத்தையும் கடவுள்களையும் பெற்றனரென்று சிலரும் வாதிக்கின்றனர். பாரசீகம்தான், மேற்படி இரு நாட்

டினர் மதம்—கடவுள்களின் தாயகமென மற்றொரு சாரார் கருதுகின்றனர்.

வங்காள சால்டிய என்ற நாட்டில்தான் முதலில் சூரிய வணக்கம் காட்டுமிராண்டித் தன்மையிலிருந்த பழங்கால மக்களால் கைக்கொள்ளப்பட்டது என்றும், அங்கிருந்து பாரசீகத்திற்குப் பரவிற்று என்றும் ஒரு வரலாறு குறிப்பிடுகிறது. பின்னர் மற்றும் பல உருவக் கடவுள்கள் தோன்றின: மக்கள் அநாகரீகர்களாக இருந்த காலத்தில் மக்களின் பரபரப்பு நடவடிக்கைகளாலும், பூசாரிகளின் சுயநல குயுக்திகளாலும் பற்பல கடவுள்கள் உற்பத்திப்பெருக்கம் செய்யப்பட்டன. சால்டியானா உருவ வணக்கம் பாரசீகத்தில்தான் அதிகமாகப் பரவிற்றாம். அங்கிருந்து பல திக்குகளிலும் பலநாடுகளுக்கும் பரவினவாம். எகிப்துக்கும்—இந்தியாவுக்கும் இதே போலத்தான் உருவ வணக்கம் பரவியிருக்கிறதென்று கூறப்படுகிறது.

இந்த உருவ வணக்கத்தின் அடிப்படை உற்பத்தி இரகசியம் எவ்விதமாக விருந்தாலும் இப்போது இந்துக்கள் கையாளும் முறை உருவ வணக்கமேயாகும்.

இவர்களுடைய கடவுள்கள் எண்ணத் தொலையாதன. நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகிய வண்ணமுள்ளன.

"இந்துக்களுக்கு உருவ வணக்கப்புராணங்களே எல்லாமுமாக ஆகியுள்ளன. விஞ்ஞானம், கலை, இலக்கியம், சித்திரம், பழக்க வழக்கங்கள், உரையாடல் எல்லாவற்றிலும் இந்த புராணக் கோட்பாடுகள் கலந்துள்ளன" என்று மேஜர் மூர் என்பவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்து மதத்துறை நூல்களில் சத்திய யுகம்—1728000 ஆண்டுகள்.

கிரேத யுகம்—1296000 ஆண்டுகள்.
துவாபர யுகம்—864000 ஆண்டுகள்.

கலியுகம்—432000 ஆண்டுகள் எனக் குறிப்பிட்டுள்ளனர். இது அறிவுக்கெட்டாத கணக்காக உள்ளது. மற்றும் வேதயுகம் அல்லது மகாயுகம் என்கின்றனர். இது 30672000 ஆண்டுகள் கொண்டனவாம். மற்றும் இதுபோல் கோடி கோடி என ஆண்டுகள் கணக்கிட்டபடியுள்ளன. இவைகள் நம்பிக்கைக்குரியனவாக இல்லை. இந்துக்கள் தெய்வங்களின் பெயர்களும் பற்பல வட்டாரங்களில் பற்பலவாறாக உச்சரிக்கப்படுகின்றன; எண்ணிக்கைக்கடங்காத பெயர்களும் கூறப்படுகின்றன.

பிரம்மம்

இதை யாரும் அறிந்ததுமில்லை; கண்ணால் கண்டதுமில்லை. உலக சிருஷ்டிகர்த்தா இதுவென இந்துக்கள் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

"பிராமணர்கள் இந்த கடவுள் பற்றிய ரகசியங்களை எல்லாம் தமக்குள்ளாகவே அடக்கி வைத்துக் கொண்டு, பொதுமக்களுக்குத் தங்கள் விருப்பம்போல், பிரம்மத்துக்கு மனிதர்களின் பண்புகளையும் உருவத்தையும் கொடுத்து பலவகைக் கோட்பாடுகளைக் கூறி வந்துளர்" என்று எர்க்ஸ்கின் என்பவர் கூறுகிறார்.

மற்றும் பிராமணர்கள் வெளியிடும் கொள்கைகளுக்கு ஏற்ப, இயற்கைக்கு ஒவ்வாத பல கதைகள் கட்டப்பட்டன. இவற்றிலிருந்து பூசாரி முறையும், குருட்டுக் கொள்கைகளும் குருட்டு நம்பிக்கைகளும் உற்பத்தியாகி உரம்பெறலாயின.

இந்துக்கள் முப்பத்துமுக்கோடி தேவர்களையும் உருவங்களையும் தோற்றுவித்து வணங்கியதாக லார்ட் என்ற கிருஸ்தவ மதப் பிரசாரகர் வர்ணிக்கிறார்.

அதாவது சாதாரண மனித உருவங்கள்; மனித உடல்களுக்கு மிருகங்களின் தலை—கை—கால் அங்கங்களைக் கொடுத்த விநோத உருவங்கள்; சந்திரன்—சூரியன் — நட்சத்திரங்கள் — நதிகள் — ஊற்றுகள்—மரங்கள் — கற்கள் ஆகிய பலவும் மதத்தின் பெயரால் வணங்கும் பொருள்களாக்கப்பட்டன. உருவங்களைக் காட்டி மக்கள் மனதை மயக்குவதுதான் எளிதாகவுள்ளதாக பிராமணர்களே ஒப்புக்கொள்கின்றார்கள் என்கின்றனர் மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள். எனவே காண முடியாததென்றும் அடைய முடியாததென்றும் வர்ணிக்கப்படும் அந்தக் 'கடவுள்' இந்த ஏராளமான உருவக் கடவுள்களால் மறைக்கப்பட்டுப் போயின. ஒரு தனிக் கடவுள் பற்றிய எண்ணமே எழாதபடி செய்யப்பட்டு விட்டது. இந்த குட்டி தெய்வங்களுக்குத்தான் ஏராளமான கோயில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 'அசல் கடவுள்' (பிரம்மா) எனப்படுவதற்கு கோயிலே கிடையாது. தாங்கள் நெருக்க முடியாத கடவுளின் பெயரைச் சொல்லி சிலைகளை வணங்குகின்றனர் இந்த இந்துக்கள் என எதிர் மதத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர். இந்து மத நூல்களில் கூறப்பட்டவைகளின் உண்மை எதுவாயினும் நடைமுறைகள் முற்றும் தவறானவையேயாகும். அதாவது கடவுளைப்பற்றி நம்ப முடியாத கற்பனைக் கோட்பாடுகளை எல்லாம் தோற்றுவித்துக் கொண்டுள்ளனர்.

சிவனுக்கும் காளிக்கும் செய்யப்படும் பூசைகளும் விழாக்களும், ஆதி கடவுளுக்கெனக் கூறப்படுவது பொருத்தமில்லாத கூற்று. கடவுள் ஒன்றே என வேதங்கள் கூறுவதாக, வாயளவில் கூறி, எண்ணற்ற

தெய்வங்களுக்கு விழாக் கொண்டாடுகின்றனர். இந்த உருவ வணக்கம்பற்றிய வரலாறுகள் அருவருக்கத் தக்கதனவாகவுள்ளன சாந்தமான தெய்வங்கள் என்பன வற்றைவிட அழிவு வேலைகளைச் செய்யும் கோர தெய்வங்களான சிவன், துர்க்கை, காளி ஆகியவற் றுக்குத்தான் அதிக மதிப்புத் தருகின்றனர்.

இந்த பல்வேறு உருவ வணக்கத்தைக் கைக் கொள்ளும்படி ஆதி கடவுளான சிவனே கூறுவதாக கூர்மபுராணம் என்பதில் தீட்டியுளர்.

சிருஷ்டி

இந்த பரப்பிரம்மம்தான் உலகை உற்பத்தி செய்தா ரென்கின்றனர் இந்துக்கள். ஆனால் எவ்வகையில் உற்பத்தி செய்தாரென்பதுபற்றி இந்து மதவாதி களுக்குள் பல்வகையிலும் கருத்து வேற்றுமைக ளுள்ளன. பலரும் பலவித வரலாறுகளைக் கூறு கின்றனர்.

சிலர் கூற்று

பரப்பிரம்மம் முதலில் பவானி என்ற பெண் தெய்வத்தைப் பிறப்பித்தாளாம். (பவானி என்றால் இயற்கைச் சக்தி என்கின்றனர். இந்த பவானிக்கு பிரம்மா—விஷ்ணு—சிவன் என்று மூன்று ஆண் குழந் தைகள் பிறந்தன.

தாயான பவானியே பின்னர் மூன்று பெண்ணுருவங் களாக மாறி, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களை மணந்துகொண்டாள். (அதாவது தாயே தான்பெற்ற மக்களுக்கு மனைவியானாளாம்)

மற்றொருவர் கூற்று

இயற்கை சக்திகள் ஒரு மூட்டையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. அந்த மூட்டை பதினான்கு சமபாகங்களாக வெடித்து மேலேழுலகம் கீழேழுலகம் ஆயின. பின்னர் கடவுள் மேருமலையில் தோன்றி பிரம்மாவுக்கு உற்பத்தி வேலையையும் விஷ்ணுவுக்கு பாதுகாக்கும் வேலையையும், சிவனுக்கு (பிரம்மா சிருஷ்டித்ததை) அழிக்கும் வேலையையும் தந்தார் என்பது.

மூன்றாவது கூற்று

'முன்னிருந்த உலகம் அழிந்தபின் விஷ்ணு அனந்தன் என்ற பாம்பின்மீது படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த போது, அவருடைய தொப்புளிலிருந்து ஓர் தாமரைப்பூ தோன்றிற்று; அதில் பிரம்மா உற்பத்தியானார்; அவர் உலகை உண்டாக்கினார். இந்தவுலகை அழிக்கும் சிவனை பிரம்மா பெற்றெடுத்தார். அதன்பின் மனித இனத்தையும் உண்டாக்கினார்—பிரமன் தலையிலிருந்து பிராமணரும், தோளிலிருந்து க்ஷத்திரியரும், தொடையி லிருந்து வைசியரும், பாதங்களிலிருந்து சூத்திரரும் தோன்றினர்'' (ஆணுடைய கை கால் தலை முதலிய அங்கங்களிலிருந்து மனிதர்கள் பிறக்கும் இந்த விநோத வரலாறுகள் விளக்கத்துக்குரியனவாகும்)

பிரமன்

பிரமன் உலக சிருஷ்டிகர்த்தா என்கின்றனர். கிரேக்கர்களும், பெத்தினியர்களும் குறிப்பிடும் சாட்டர்ன் (சனி) என்ற தெய்வ வரலாறு இதே போன்றுளது. இந்த பிரம்மா சிகப்பு அல்லது பொன்னிறத்துடன் நான்கு தலைகளுடையவராம் இவருக்கு அய்ந்து

தலைகள் இருந்ததாகவும், சிவன் தன்னைவிட மேலான வனென இந்த பிரம்மன் ஒப்புக்கொள்ளாததால், சீற்ற மடைந்த சிவன் ஒரு தலையை கிள்ளி எறிந்துவிட்ட தாகவும் சைவர்கள் கூறுகின்றனர். மற்றும் சிவனுக்கும் 5 தலையாகவும், பிரம்மாவுக்கும் 5 தலையாகவும் இருந்ததால் சிவன் மனைவி அடையாளம் தெரியாமல் அடிக்கடி ஏமாற ஏற்பட்டதால் பிரம்மனின் ஒரு தலை சிவனால் கிள்ளப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

இந்த பிரம்மனுக்கு ஹம்சம் (வாத்து) வாகனம். சிலர் அன்னப்பறவை என்கின்றனர்.

வைஷ்ணவர்களும், சைவர்களும் இந்த பிரம்மன் கோவில்களை அழித்து விட்டனராம். இப்போது பிரமனை யாரும் மதிப்பதில்லை. இவருக்கும் ஏராள மானக் குட்டிப்பெயர்களுண்டு.

தட்சன்

தட்சன் பிரம்மனின் அவதாரமாம். சிவன் மனைவி சதி இவர் மகளாம். இந்த சதியின் மகனெனப்படும் வீரபத்திரன் தகப்பனாரான சிவனின் ஜடாமுடியிலிருந்து பிறந்தானாம். தன் தகப்பனான சிவனை அவமதித்ததாலும், தாய் தீயில் விழுந்து இறக்கச் செய்ததாலும் சீற்றமடைந்த வீரபத்திரன் தட்சனின் தலையை வெட்டி விட்டானாம். தேவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி பிரம்மா மீண்டும் தோற்றுவிக்கப்பட்டாராம்.

ஆனால் அவர் தட்சனாக இருக்கையில் வெட்டப் பட்ட தலை தீயில் விழுந்து பொசுங்கிவிட்டதால், இந்த பிரமனுக்கு ஆண் ஆட்டின், (கடா) தலை ஒட்டப்பட் டதாம். இப்போதும் அந்த பிரம்மன் இந்த ஆண் ஆட்டின் தலையுடன் இருக்கின்றாராம்.

விஸ்வகர்மா

உலகை அமைத்த தச்சனார் விஸ்வகர்மா என்பவராம். கடவுளுக்குக் கையாம், பிரம்மனின் மகனாம்.

இவர் மூன்று கண்களைக் கொண்ட வெள்ளை நிற உடலுடையவராம்.

நாரதர்

இவர் பிரம்மா—சரஸ்வதி மகன். இவர் கடவுள்களின் செய்தி பரப்பும் தூதனாம். வீணையைக் கண்டு பிடித்தவனாம். இவனுக்கு மனைவியோ, காதல் கிழத்திகளோ இல்லை. ஒரு தடவை கிருஷ்ணனைச் சந்தித்தபோது, கிருஷ்ணனுக்குள்ள பதினாயிரம் கோபிகளில் ஒருவரை தனக்கு இரவலாகக் கொடுக்கும்படி அந்த கிருஷ்ணனையே கேட்டாராம் ஆனால் அந்த பெண்ணின் அறையில் நுழைந்ததும் அங்கு கிருஷ்ணன் உருவங்களைக்கண்டு திரும்பிவிட்டாராம்.

பிருகு

பிருகு, பிரம்மாவின் மகன். பிர்ம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரில் யார் உயர்ந்தவரென தேவர்கள் இவரைக் கேட்டார்களாம். இவர் அம்மூவரைப் பரீட்சிக்க சென்றாராம். தகப்பனான பிர்ம்மாவுக்கு வழக்கமான வணக்கம் செலுத்தாது கண்டபடி திட்டி விட்டு, சிவனிடம் சென்று அவரையும் அதிகமாகத் திட்டினாராம். அவர்கள் கோபித்துக் கொள்ளவே ஏதோ சாக்குப்போக்குக்கூறி இருவரையும் சமாதானம் செய்து விட்டு விஷ்ணுவிடம் சென்றாராம்.

அப்போது லட்சுமி பக்கத்தில் அமர்ந்திருக்க, விஷ்ணு தூங்கிக்கொண்டிருந்தாராம். இதைக்கண்ட பிருகு விஷ்ணுவின் மார்பில் எட்டி உதைத்தாராம். விஷ்ணு கண்விழித்தார். பிரம்மா—சிவனைப் போல் கோபிக்காது உதைத்த கால் வலிக்கிறதா என்று கேட்டாராம். அதோடு நிற்காது பிருகுவின் காலையும் தடவிக்கொடுத்தாராம்.

இந்த பிருகுவைப்பற்றிக் கூறப்படும் வரலாறுகள் தற்காலத்தவர் நம்பத்தகாதனவாக உள்ளன.

மலடியாகவிருந்த சுகுரு என்ற அரசனின் மனைவிக்கு 60-ஆயிரம் மக்கள் பிறக்கச்செய்தாராம் இவர். இவள் இன்னும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டேயிருக்கிறாளா என்பதுபற்றி இந்து புராணங்கள் குறிப்பிடவில்லை.

சப்த ரிஷிகள்

பிரம்மாவின் மகனான மனுவிற்குப் பிறந்தவர் ஏழு ரிஷிகள். இவர்கள் ஆறு பெண்களை மணந்தனர். ஏழு ஆண்கள் எவ்விதம் ஆறு பெண்களை மணந்து வாழ்க்கை நடத்தினரென்பதும் புராணங்களில் விளக்கப்படவில்லை.

சரசுவதி

பிரம்மாவின் மனைவி சரசுவதி. படிப்பின் தெய்வமாம். இவள் பிரமனின் மகள் என்றும், விஷ்ணுவின்

மனைவிகளில் ஒருத்தியென்றும் (உடன் பிறந்தவளே மனைவியானாள்) இந்துக்கள் கூறுகின்றனர். பிரம்மனின் மனைவி என்றே பெரும்பாலோர் சொல்லுகின்றனர். (தகப்பன் தன் சொந்த மகளையே பெண்டாட்டியாக்கிக் கொண்டாராம்.) படிப்பு இந்த தெய்வத்தினிடமிருந்துதான் இந்துக்களுக்குக்கிடைக்கிறதாம். பொய்களை மன்னிக்க இவருக்கு பூசைபோடுவதாகக் கூறப்படுகிறது. இந்த பூசை, வெற்றி தருவதாக விருந்தால் அடிக்கடி பூசைபோடவேண்டுமே; ஏனெனில் இந்துக்கள் அடிக்கடி பொய்கூறும் வழக்கமுடையவர்களென்று மேனாட்டு புலவர் சார்லஸ் கால்மன் கிண்டல் செய்கிறார். கிரேக்கர்களின்—ரோமர்களின் மினர்வா என்ற படிப்புத் தெய்வம் போன்றதே இந்த சரசுவதி.

அடுத்த பக்கத்தில் கண்ட பட்டியலின்படி இரு வேறு மதஸ்தர்கள்—நாட்டினர் கடவுளும் ஒன்றாயிருப்பதால், ஒரே சட்டுக்கதையையே, இந்த இரு மதத்தாரும் வெவ்வேறு பெயர்களில்காட்டுகின்றனரென்பதாகிறது. எனவே புராணங்கள் இந்துக்களின் சொந்தம் என்றும், இந்து கடவுள்களின் பிறப்பு, நடப்பு வரலாறுகள் என்றும் கூறப்படுவது முற்றிலும் ஆதாரமற்றதாகிறது.

கிரேக்க-ரோம கடவுள்களுக்கும் இந்து கடவுள் களுக்கும் ஒப்புவை பட்டியல் வருமாறு :—

சிவன் இந்திரன்	— ஜூபிட்டர்
பிரம்மா	— சாட்டர்னஸ்
யமன்	— மைனாஸ்
வருணன்	— நெப்ட்யூன்
சூரியன்	— சோல்
சந்திரன்	— லூனஸ்
வாயு	— ஈயோவஸ்
விசுவகர்மா	— காஸ்டர்-போல்வாக்ஸ்
கணேசன்	— ஜூனஸ்
விரஜா நதி அல்லது வைத்ராணி	— ஸ்டிக்ஸ்நதி
குபேரன்	— ப்ளூட்டர்ஸ்
கிருஷ்ணன்	— அப்பிலோ
நாரதன்	— மெர்குரியன்
ராமன்	— பச்சுஸ் (மதுவைக் கண்டுபிடித்தவர்)
கந்தன்	— மார்ஸ்
துர்க்கை	— ஜூனோ
சரசுவதி	— மினர்வா
ரம்பை	— வீனஸ்
உஷா	— அரோரா
ஸாகா	— வெஸ்டா
பிரிதிவி	— சைபெல்வி
ஸ்ரீ	— சிரஸ்

ஆரியர்கள் வணங்கிவந்த சில்லரைத் தெய்வங் களின் இலட்சணத்தை ஆராய்வோம்.

வருணன்

இரேக்கர்கள் ஆகாயத்தை முரட்டுக் காளையாக உருவகப்படுத்தி, டையாஸ் என்று பெயரளித்து வணங்கி வந்தனர். இரேக்க மொழியில் ஒரனாஸ் என்றால் ஆகாயம். **ஒரனாஸ் என்பதையே ஆரியர்கள் வருணன் என்று குறிப்பிடுகின்றனர்.** வான மண்டலத்திலே தங்க மாளிகையிலே வசிக்கிறானாம் இந்த ஆரிய வருணன். அந்த மாளிகைக்கு ஆயிரம் வாசல்களும் அறைகளுமுள்ளனவாம். பளபளப்பான உடைகள் அணிபவனாம்; ஒற்றர்களும் உடையவனாம். இவ்வளவு தூரம் இவனைச் சிறப்பித்துவிட்டு; அவனுடைய பிறப்பையும் இனத்தையும் குறைகூறியிருக்கின்றனர் ரிக்வேதத்திலேயே. அதாவது அவன் ஒரு அசுரனாம்—மாயவித்தைகளின்மூலம் ஆட்சி புரிகிறானாம். இந்த மாய வித்தை என்பதற்கு இந்த சமஸ்கிருத வேதியர் இருபொருள் கூறுகின்றனர்.

ஆண்டவன் மாயலீலை-என்பர். இதற்குப்பொருள் ஆண்டவனின் சிறந்த நடவடிக்கைகள் - திருவிளையாடல்கள் என்பதாம். அசுரர் மாய வித்தை என்றால் கேடுகள் விளைவிக்கும் நடவடிக்கைகள் என்றுபொருள் கூறுகின்றனர். சொற்பொருளிலும் இன வேற்றுமை, சாதியுணர்ச்சி வாடை துளிர்விடுகிறது.

இந்த மாயசக்தியால் இந்த வருணன், சூரியனை வானத்திலே சுற்றிவரச் செய்கிறானாம். சூரியன் இந்த வருணனின் கண்ணாம்; மழைக் கடவுள் இந்த வருணனாம். ஆறுகள் கடல்களுக்கு அதிபதியாம். நாம் நமது தலைக்குமேல் பார்க்கும் ஆகாயத்தைத்தான் வருணன் என்று பெயரளித்து கும்பிடுபோட்டு வந்துள்ளனர், கற்பனைக் கொள்கைகளிலே-அச்சத்தால் ஏற்பட்ட மூடக் கோட்பாடுகளிலே நம்பிக்கைகொண்ட, பிஞ்சுமதி

ஆரிய மக்கள் என்பது மேற்படி விவரிப்பால் தெளிவாகிறது.

ஊர் சுற்றி விஷ்ணு

ரிக்வேதத்தில் விஷ்ணு பெயர் சில்லரை தெய்வப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. "ஊர்கயா ஊர்க்ரமா" என்ற அடைமொழிகள் கொடுத்து இந்த விஷ்ணுவை நாடோடி—ஊர்சுற்றி தேவனாக்கியுள்ளது. அதாவது மண்ணுலகம், வானுலகம், ஆகாயம் ஆகிய மூவுலகில் திரிபவனாம். வாமனாவதாரக் கதை இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டதாகிறது. சூரியனின் நடவடிக்கைகளுக்கு உருவமளித்து விஷ்ணுவெனப் பெயரிட்டழைத்தனர் என்று யூகக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியன் உஷா

ஆகாச கடவுளான வருணனுக்கும் அவன் மனைவி அதிதிக்கும் பிறந்தவனாம், சூரியன். பக்தர்களுக்கு விடுதலைதருவது இந்த அதிதி தேவனின் பணியாம். மற்றும் அருணோதயத்திற்கும் உஷா என்று பெயரிட்டு தேவதையாக்கி விட்டனர். உஷாதேவியின் காதலன் சூரியனாம். இந்த உறவிலும் ஒரு விசித்திரக்கோட்பாடு—உலகம் சிரிக்கும்—பகுத்தறிவுக் கொவ்வாத ஓர் கற்பனைக் கருத்து! அதாவது காலையில் இந்த உஷா தேவி சூரியனுடைய காதலியாம். நடுப்பகலாகும்போது இவள் சூரியனின் தாயாகி விடுகிறாளாம்! இரவானதும் இவள் இரவின் சகோதரியாம்; மற்றும் இருக்கும் அக்னி தேவனுக்கும் கூடத் தொடர்பு காட்டுகிறது, இந்த ரிக்வேதம். இந்த வரலாறு ரிக்வேதத்தில் உஷா சுலோகங்கள் என்பதில் அடங்கியுள்ளது. மதுக்குடியையும் தெய்வத்தன்மை-தெய்வப்பணியாக்கியுள்ளனர், மதுவை சோமதேவனாக்கி.

அஸ்வினி தேவர்கள்

அஸ்வினி தேவர்கள் இணைபிரியா இரட்டையர். பெரும் குடியர். தாங்கள் ஊர்சுற்றும்போது மதுக் குடங்களைத் தங்கள் தேரிலேயே சுமந்து செல்வரெனவும், 'சப்ளை' செய்வரெனவும் ரிக் வேதம் விவரிக்கிறது. இவர்களுடைய வண்டியை எருமையும், கழுதையும் இழுத்துச் செல்லுமாம். இவர்களுடைய தங்கை உஷாவாம். இவர்களுக்கும் சூரியனுக்கும் தொடர்புண்டாம். ஆனால் இந்த தொடர்பிலும் உலகம் நம்பமுடியாத விசித்திரக்கூற்று நுழைக்கப்பட்டுள்ளது. அதாவது சூரியன் பெண்ணுருக்கொண்டு இந்த அஸ்வினி தேவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்கிறானாம். சூரியன் மகள்தான் இவர்களுக்கு மனைவி என்கிறது மற்றோரிடத்தில் இந்த மறையவர் மறை. முதல் கூற்றை—அதாவது சூரியனை ஆணாக்கி இரட்டை சகோதரருக்கு மனைவியாக்கிய வரலாற்றை பொய்யாக்குகின்றனர். அல்லது இந்த விசித்திரக் கூற்றை அறிவுலகம் நம்பாதே என்று பின்புத்தி இடித்துக்காட்டி அறிவு கொளுத்தியது போலும். ஆணைப் பெண்ணுருவாக்கி, இரு ஆண்களுக்கு ஒரு மனைவியாக்கிய கூற்றை மறைத்து சூரியனுடைய மகள் சூரியா என்பவளே அஸ்வினி தேவர்களின் துணைவி என்று பின் திருத்த விளக்கம் தந்துளர் பிறிதோரிடத்தில். இந்த இரு கூற்றுக்களும் ரிக் வேதத்தில் இடம் பெற்றுத்தானுள்ளன.

சூரியாவின் இருகணவர் அஸ்வினிகள். இவரை அவ்விருவரும் தாங்கள் செல்லுமிடமெல்லாம் தங்கள் கழுதை அல்லது எருமை பூட்டிய வண்டியில் ஏற்றிச் செல்கின்றனராம். இவர்கள் தேவலோக மருத்துவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறது.

மற்றும் வருணனை தங்களுக்கு மழையும் தண்ணீரும் அளிக்கும் தெய்வமாகக் கருதி வணங்கிவிட்டு, அதே சமயத்தில் அவனைத் தங்கள் இன விரோதியான "அசுர" குலத்தினன் என்கின்றனர், இந்த ஆரிய வேத மேதாவிகள். இது முன்னுக்குப் பின் முரணான— பித்தர் போக்குக் கொள்கையாகவுள்ளது.

இதேபோலத்தான் சூரியனையும் தெய்வமாக்கிக் கொண்டு விட்டனர். அருணோதய பொன்னிற வெளிச்சத்திற்கு சாவித்திரி என்று பெயரிட்டு பெண் தெய்வமாக்கிக் கும்பிட்டு வந்துளர். காயத்திரி ஜபம் என்பதும் காலையில் மனப்பாடம் செய்யப்படும் சமஸ்கிருத சுலோகங்களே—இந்த அருணாதேவியிடம் வரம் கேட்பதே—புகழ்ந்து பாடுவதே. காயத்திரி, சாவித்திரி என்ற பெண் தெய்வ வணக்க நூலாயினும், இதில் பெண்களை இழிவுபடுத்தும் சுலோகங்கள் பலவுள்ளன. மற்றபடி இதில் எந்த 'தெய்வீகமும்' நுழைக்கப்பட்டிருப்பதாகக் காணோம். ரிக்வேதத்தில் விஷ்ணு பெயர் சில்லரை தெய்வப்பட்டியலில்தான் காணப்படுகிறது.

அமுதமுண்டு, பிணி முப்பு சாக்காடற்றவர்கள் தேவர்கள் என்று பிராமண வேத இதிகாசங்களில் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதே சமயத்தில் அஸ்வினி இரட்டையர்களை—ஒரு பெண்ணை பொது மனைவியாக்கிக் கொண்டிருக்கும் சகோதரர்களை, தேவ வைத்தியர்களென்கின்றனர். பிணி மூப்பு சாக்காடற்றவர்களுக்கு வைத்தியர் ஏனோ? இதிலும் மற்றொரு பித்தலாட்டக் கூற்று! இந்த அஸ்வினிகளின் வைத்திய சிறப்புப்பற்றி வண்டி வண்டியாகக் கதை கட்டியுள்ளனர், ஆரிய-வேதப் புலவர்கள். ஆனால் இவர்களுடைய வைத்திய முறை விவரம் இதுவரை யாருக்குமே தெரியாதாம்; அவர்களும் தெரியவைக்கவில்லையாம். வெறுங் காவடி, பால் பொங்கும், பழனியாண்டவர்

அருள் கதையைப் போலத்தானுள்ளது இதுவும் கன்னி யிருட்டு (நாலாம் ஜாமத்தில் விடியல் வெளிச்சத்துக்கு முன்னுள்ள வெளிச்சமும் இருட்டும் கலந்த நிலைமை) என்று நாம் எதைக் கூறுகிறோமோ அதைத்தான் ஆரியர்கள் அஸ்வினி தேவரென்கின்றனர். மற்றொரு கதையும் சொல்லப்படுகிறது இவர்களைப் பற்றி. அதாவது சூரிய குமாரியுடன் இவர்கள் நடத்துவது விடியாத காதல் நாடகமாம். அதாவது அவள் இன்னும் இவர்களைத் திருமணம் செய்து கொள்ளாது பேரம் பேசும் காதலியாகவே இருக்கிறாளாம். எனவே இந்த இரட்டையர்கள் விடிவெளிச்ச நேரத்தில் கண்விழித்து அவளைப் பின்பற்றித் திரிகிறார்களாம். தங்களை மணந்துகொள்ளும்படி அப்பெண்ணிடம் இவர்கள் மன்றாடுவதாக ஒருசாரார் கூற்று. சந்திரனுக்காக சூரியாவிடம் மணத்தூதராகச்சென்று பேரம் பேசிய வண்ணம் இருக்கின்றனரென்பது மற்றொரு சாரார் கூற்று. இந்த விடியாத காதலும்—விடியாத காதல் தூதும் எப்போது விடியுமோ? அந்த ஆரிய "மாயக் கடவுள்" களுக்கே வெளிச்சம்!

கிரேக்க புராணத்திலும் இம்மாதிரி ஓர் கட்டுக் கதையுள்ளது. அதாவது லெட்டிஸ் தேவனின் இரு புத்திரர்கள் சூரியனுடைய மகளை அல்லது சூரியனை சமுத்திரத்திலிருந்து மீட்கப் பாடுபடுகிறார்களாம்.

மற்றும் அஸ்வினிகள் என்பது காலையையும் மாலையையும் குறிப்பிடும் மெற்குறியீ யென்றும், காலை-மாலை நட்சத்திரங்களை அதாவது விடிவெள்ளி —அந்திவெள்ளி நட்சத்திரங்களைக் குறிப்பிடுவதென் றும் அறிஞர்கள் கருத்து. காஸ்டர்—போல்லக்ஸ் என்ற இரு நட்சத்திரங்களைத்தான் அஸ்வினி என்கின்றனர் என்கிறார் வெப்பர் என்ற மேனாட்டு அறிஞர். காலஞ் சென்ற லோகமான்ய திலகரும்; "வேதங்களில் மிருக

சிரிடப நட்சத்திரமும்—துருவ மண்டலமும்'' என்ற ஆராய்ச்சி நூலிலும் இதே கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திரன்

ரிக்வேத ஆரியர்களின் முக்கிய தேவன் இந்திரன். ரிக்வேதத்தில் கால் பகுதிக்குமேல் இந்திரனைப்பற்றிய புகழ்ப்பாடல்களும் அருள் வேட்டல் பாடல்களுமே யாகும். இந்த இந்திரனுடைய திருவிளையாடல்களைப் பற்றித்தான் ஏராளமான கட்டுக்கதைகளை இந்த ஆரிய புராணிகர்கள் உற்பத்திப் பெருக்கம் செய்துள்ளனர். மற்ற தெய்வங்களைவிட இந்த இந்திரனுக்குத்தான் அதிக மனிதத்தன்மை — மனிதப்பண்புகள் — மனித நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தந்து வர்ணித்துள்ளனர். அதாவது காதல் திருவிளையாடல்களில் மனிதரை விட மிஞ்சும் போக்கு இந்த இந்திரன் கொண்டுள்ளான்.

இந்த இந்திரன் தனி ஆரிய சிருஷ்டி அல்ல. அவெஸ்தா என்ற பார்சிப வேத நூலில் இந்திரனை ஓர் ராட்சதனாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவனும் பெரும் மதுக்குடியனே—சோமபானக்காரன்.

இந்த சோமபான போதையால் இவன், மற்ற தேவர்களைவிட அதிக சண்டைக்காரன் என்று பெயர் வாங்கியுள்ளான். குடிகாரன் போக்கு இதுதானே.

இந்த இந்திரனுக்கு 'சோமப்பா'—சோமபானக் குடியனென்றே சிறப்பு இடுகுறிப் பெயரிட்டழைத்தனர். ஆரிய வேதியர்கள். இந்த இந்திரனுடைய தகப்பன் யார் என்பது பற்றி ஆரியப் புலவர்களுக்குள்ளாக சச்சரவாகவுள்ளது. வர்ணன் என்ற மூல தேவன்தான் இவன் என்று சில வேத சுலோகங்களில் உள்ளன—விஷ்தரியின் மகன் என்று மற்றும் சில வேத சுலோகங்களில்

உள்ளது. அக்னியும் இந்திரனும் இரட்டைப் பிறவியாம். விசித்திரக் கூற்றாகவுள்ளது இது. ஏனெனில் இந்திரன் மழை— தண்ணீர்க் கடவுள்; அக்கினி நெருப்புக் கடவுள் என்பது ஆரியக்கூற்று. தண்ணீரும் நெருப்பும் எப்படி இணைந்திருக்குமோ தெரியவில்லை! இந்த இந்திரன் மழைக்கு அதிபதியாம். இவன் மழை பெய்யச் செய்வதுபற்றி பகுத்தறிவுக்கு இயலாத ஓர் புராணக் கதை கூறப்படுகிறது.

விருத்ரன் என்ற மலைப் பாம்பு ஒன்று மேகங்களைச் சிறைப்படுத்தி வைத்துக் கொள்கிறதாம். இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் மலைப் பாம்பை அடக்கி, சிறையை சிதைத்து மேகங்களை விடுதலை செய்து மழை பெய்விக்க வைக்கிறானாம். இங்கேதான் ஆரியப் புலவர்களின் மவ்டீக அறிவு சுடர்விடுகிறது! 'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை' என்ற பழமொழியை அடிப்படையாகக்கொண்டு பின்னப்பட்டக் கட்டுக்கதை இதுவாகிறது. மேகங்கள் மோதி மின்னல் மின்னுகிறது—இடியும் ஏற்படுகிறது. இந்த மோதுதலால் சிதைந்து தாழ்ந்த மேகங்கள்-கருக்கட்டி மழையாகப் பொழிகின்றன. இது அறிவுலகம் கண்கூடாகக் காணும் மெய்மை. மேகங்கள் மலையில் மோதி—தேங்கி—கனத்து மழையாகப் பொழிகின்றன மலைச் சிகரங்களில் மேகங்கள் தங்கியிருப்பதை, விருத்ராசூரன் என்ற பாம்பின் கோட்டையில் மேகங்கள் சிறைபடுத்தப்படுவதாகக் கற்பனைப்படுத்திக் கூறியுள்ளனர்—இயற்கையின் மெய் இரகசியத்தை அறிந்திராத—அறிவு அடிமட்ட நிலவரத்திலிருந்த—மழைக்காக ஹோமப் புகையைத்தூதுவிட்டு ஆகாசவருணனிடம் அண்ணாந்து முறையிட்டு, அருள் வேண்டி ஏங்கித்தவிக்கும் யாக வேதியர்கள். மேலும் இடியைத்தான் வஜ்ராயுதமாக கற்பனை செய்துள்ளனர், இவ்வேதத்தார். எனவே மழைபொழிவதற்கான இயற்கை ஓட்டச் சக்தியைத்

தான் ஆரியர்கள், இந்திரனாக உருவகப்படுத்தி, சுலோகங்கள் தொகுத்து வைத்துக் கொண்டனரென்பது தெளிவாகும். மற்றும் இந்திரன் என்ற பெயரினன் ஆரியப் பாதுகாப்புத் தளபதிகளில் முதல்வனாம். தஸ்யூக்கள் என ஆரியரால் அழைக்கப்படும் பழங்குடி மக்களை ஒழித்துக்கட்டும் போரில், இவன் அடிக்கடி ஈடுபட்டு வந்தான் என்பது தெளிவு. அதாவது **ஆரிய வர்ணத்தைப் பாதுகாப்பவன் கருப்புத் தோல்களை (தஸ்யூக்களை) அடக்குபவன்** என வேத சுலோகம் கூறுகிறது.

எனவே ஆரிய காப்பு "விபீஷண" கும்பலில் இவனும் ஒருவன் என்பது தெளிவு. ஆரியக் காவலரான ராமனை அவதாரமாக்கியதுபோல, ஆரியக் காவலனான இந்த 'அசுரனையும் மழைத் தேவனாக்கிக் கொண்டனர் என்பதும் தெளிவு. இந்த சோம போதைத் தேவனின் சண்டைக் குணம், ஆரியரல்லாதாரை ஒழித்துக்கட்டுவதுடன் நின்றுவிட வில்லை; தன்னைப் பெற்று வளர்த்த சொந்தத் தகப்பனான யஷ்த்ரி என்பவனையே கொன்று தீர்த்து விட்டானாம். ஆரிய மொழியில் கூறவேண்டுமானால் இவன் கொடிய நரகத்திற்குரிய குற்றமான "பித்ரு ஹத்தி" — தந்தையைக் கொலை செய்தவனாகிறான்.

மற்றும் இவன் உஷையின் தேரையும் தாக்கி சிதைத்தானாம்—சூரியன் குதிரைகளையும் மறியல் செய்தானாம் சோமபான போதையின் விபரீத விளையாட்டுகளில் இவ்விரண்டும் முக்கிய "சாம்பிள்" போலும். இதன் உண்மைக் கருத்து என்ன? மேகப் படலங்களாலும் மழைத் தாரைகளாலும் சூரியன் மறைபட்டுப்போவதும்; வெயிலும் வெளிச்சமும் நிலத்தோடு பாயாது போவதுமேயாகும்- பெருந்திண்டிக்காரன், பெருங்குடியன் என்கிற ஆரியரின் சிறப்பு வர்ணன்-

மழையின் வேகத்தையும்—வெள்ளத்தின் அரிப்புச் செயலையும்தான் இவ்விதம் கற்பனை செய்து கூறுகின்றது வேதியமதி. முன் கதையைக்கண்டு அறிவுலகம் எள்ளி நகைத்தது போலும். விருத்ராசூரன்தான் மலையில் மேகங்களைக் கட்டிப் போட்டு மழை பெய்யாது செய்கிறவன் என்று பிற்காலத்தில் ஆரியர் வேறு கதை கூறலாயினர். இதன் உண்மை என்ன? உயர்ந்த மலையில் பனிபடர்ந்து—தண்ணீர் உறைந்து போகிறதல்லவா? இதையே விருத்ராசூரனின் செய்கை என்று வர்ணித்துள்ளனர். இடியும் மின்னலும் ஏற்பட்டால் இந்தப் பனிப்பாறைகள் நெக்குவிட்டும், சூடேறிக் கரைந்தும் தண்ணீராக மாறி நிலத்தூடு பாய்கிறது.

இந்திரன் மழைத் தேவன் என்பது எவ்விதம் பித்தலாட்டமாகிறது என்று பார்ப்போம்.

இந்திரன்—விருத்ராசூரன் கதையில் இடி மாரி பற்றியோ மழையைப் பற்றியோ இல்லை. இந்திரனால் சிறை மீட்கப்பட்ட தண்ணீர், பந்தயக் குதிரைபோல ஓடலாயிற்றென வேத நூல் வர்ணிக்கிறது. மழைத் தாரைகளாவது பந்தயக் குதிரைபோல் நிலத்தூடு ஓடுவதாவது! குதிரை ஆகாயத்திலிருந்தா தலை குப்புற ஓடிவரும்? வஜ்ராயுதம் என்பது உலோகத்தில் (தனிப் பொருள்) செய்யப்பட்டது என்கிறது வேதம். இது இடியைக் குறிப்பிடுகிறதா இல்லையா என்றும் தெளிவாகவில்லை. உலோகம் நிலத்தில் கிடைப்பது; ஆகாயத்திலிருந்து பொழிவதில்லையே. இந்திரன் இடி மழைத் தேவனானால், பாஞ்சன்யா என்று இவர்கள் கூறுகிறார்களே மற்றொரு மழைக்கடவுள், அதன் மதிப்பு மண்ணாகிறது.

எனவே, இது கலப்படமற்ற-பகுத்தறிவுக்கேலாதக் கட்டுக்கதையே யாகிறது.

இதைப்போன்ற கதை மேனாட்டிலுமுள்ளது. அதாவது பனி நாடான வடகோடி வட்டாரங்களில் ரஷ்ய சதுப்பு நிலப்பனி மண்டலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கதை. அந்த தென் ரஷ்ய வட்டாரத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தபோது ஆரியர்கள் இந்த இந்திரன்—விருத்ராசூரன் கதையையும் சுமந்து வந்துள்ளனர். பெரும்பாலும் நடுப்பகலில் மழை நின்றுவிடுகிறதல்லவா? இதைப்பற்றியும் கற்பனைக் கருத்து, ஆரியர் பிள்ளை மதியில் தோன்றியுள்ளது.

அதாவது இந்திரனுக்கு சண்டை அலுப்பு தீர ஓய்வு நேரமாம் நடுப்பகல். இயற்கை சக்தியின் நுணுக்கமறியாத கூற்று இது. நடுப்பகலில் சூரியன் அதிக சூடாக இருப்பதால் மழை மேகங்கள் குளிர்ச்சித் தன்மையை இழந்து சிதைந்து, தண்ணீராக முடியாது போகின்றன. சூரியன் சாய்ந்து சூடும் குறைந்தால், மழை மேகங்கள் மீண்டும் குளிர்ந்து, மழை பெய்கிறது. இதுவான நூலறிஞர்களும் மற்றோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய இயற்கை மெய்ம்மை.

ருத்ரன்

வெறியன்—"பேய்" பிடித்தவன் என்கிறார்களே அவனைப்போன்ற அலங்கோலத் தோற்றமுடையவன். இந்த ருத்ரன் சடைமுடியும் கருநிறமும் கொண்டவனாம்; மற்றும் பயங்கர காட்டுமிருகம் போன்ற மூர்க்கனாம். ஆகாயக் கரடியென்றும், முரட்டுக்காளையென்றும் இவனை வர்ணித்துள்ளனர். இவனுக்குத் திடீர் திடீர் என கோபம் கொதிக்குமாம். அற்பக் காரணத்தாலும் சீற்றம் சீறுமாம். இவன் வீசும் இடி ஆயுதம் ஆரியர்களையும் அவர்களுடைய பசுக்களையும் கொல்லுமாம். எனவே அவ்விதம் கொல்லவேண்டாமென, வேதியர் இத்தேவனிடம் கருணைப் பிச்சை

கேட்டுத் துதிபாடுவராம். இந்த நாசவேலை ருத்திரனை நோய் தீர்க்கும் மருத்துவன் என்றும் கூறி, முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும் வேத சுலோகங்களில் காட்டியுள்ளனர். எளிதில் சீற்றமடையும் இவனிடம் குளிர்ச்சியிருக்கிறதாம். ஆகவே இந்த ருத்திரன் என்பது கார்மேகமேயாகிறது. குளிர்ச்சி பொருந்திய வன் என்றும் குளிர்ச்சியளிப்பவனென்றும், சுத்தப் படுத்துபவன் என்றும், நோய் தீர்க்கும் மருத்துவன் என்றும் (சூட்டினால்தான் பெரும்பாலான நோய்கள் ஏற்படுகிறதென வைத்திய நூலில் கூறப்படுகிறது) வர்ணித்திருப்பதெல்லாம் கருமேகத்தின் குளிர்ந்த தன்மையையும்—குளிர்ச்சி தரும் மழையையும்—சுத்தம் செய்யும்—சூட்டைத் தணிக்கும் மழை நீரையுமே குறிப் பிடுவதாகிறது.

ஒரு சூலில் 180 பிள்ளைகள்

இத்துடன் விடவில்லை ஆரியக் கற்பனை, வெண் மேகங்களைப் பசுவாக்கியுள்ளனர். இந்தக் கருமேக மான ருத்திரனுக்கும் வெண்மேகமான பிரிசினி என்ற பசுவுக்கும் 180 மக்கள் பிறந்தனராம்—இந்த எண்ணிக் கையையும் வேதத்தின் மற்றொரு பகுதி பொய்யாக்கு கிறது.

மாருதர் என்ற பெயரைக்கொண்ட இந்த மக்கள் 21-பேரெனக் குறிப்பிடப்பட்டுளது. மற்றும் வாயு வையும் இந்த மாருததேவர்களின் தகப்பனெனவும் குறிப்பிட்டுள்ளனர். அதாவது ஒரு பெண்ணான பிரிசினி (பசு)க்கு ருத்ரன் வாயு என்ற இரு கணவராம். இப்பிள்ளைகள் எல்லோரும் ஒரே வயதினராம். ஒரே பிரசவத்தில் 180 பிள்ளைகள் பிறந்ததை எந்த அறிவுலகம் நம்பும்? இத்துடன் போகவில்லை. கருமேகமும்—வெண்மேகமும்; வெண்மேகமும்—வாயு,

(காற்று)வும் சேர்ந்து பிள்ளைகள் பெற்ற கதை! இந்த மாருதப் பிள்ளைகள்—தாயும் தகப்பனுமின்றி தானாகப் பிறந்தனவென்றும் மற்றொரு வேதமொழி கூறுகிறது! இந்த விசித்திரக் குழந்தைகளின் பிறப்பின் ரகசியம் வேதவித்துக்களுக்கும் திட்டமாகத் தெரியாதுபோலும்! எனவே இப்படி—அப்படி எப்படியோ பிறந்தனர் என்ற முறையில் கதை கட்டிவிட்டனர். அறிவாளர்கள் விளக்கம் கேட்டுத் திகைக்கவைக்கும் போதெல்லாம் புதுப்புதுக் கதைகளைக் கட்டி தலைதப்ப முற்பட்டிருக்கின்றனர் ஆரியர் என்பது இவற்றால் புலனாகிறது. மழைக்குமுன் ஏற்படும் சூரைக்காற்றையும் மழையோடு சேர்ந்துவரும் புயலையும் — (மண்மாரி - சுழல்காற்று முதலியன) தான் இவர்கள் மாருத தேவர்களாக்கியுள்ளனர். சண்டமாருதம்—புயல்காற்று, மந்தமாருதம்—மென்காற்று என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்த மாருத தேவர்களே பாலும் தேனும் நெய்யும் மழையாகப் பொழிந்ததாக வர்ணித்துள்ளனர். அதாவது 'தேவன்' பொழிந்த மழையை இவ்வாறாக உருவகப்படுத்தி மனத்தளவில் மகிழ்ந்துள்ளனர்.

அக்னி

அக்னி—தீ, இதுதான் வேதியரின் உயிர்த்தெய்வம். வேதியர் என்றால் நெருப்பு மூட்டுபவர்; தீயைத் துணையாகக் கொண்டவர் எனவும் விரிவுரை காணலாம். வேது கொடுத்தல் என்றால் உடல் சூடுண்டாகச் சுடுநீர் அல்லது சுடு தவிட்டு ஒத்தடம் கொடுத்தல், எனவே வேது என்றால் சூடு, ஆகவே வேதி என்றால் சூட்டுடைய தீ-நெருப்பு, அக்கினியாகிறது. இந்த அக்கினியை வாழ்க்கைத் துணையாகவும்; வாழ்க்கைச் சாதனமாகவும் கொண்டவர் வேதியராகின்றனர். மழைக் கடவுளான இந்திரனிடம்—தங்கள் கோரிக்கைகள்

என்ற செய்தியை—மந்திரங்கள் என்பனமூலம் மண்ணுலகிலிருந்து வானுலகுக்கு அனுப்பும் புகையைக் கிளப்புவதும் இந்த அக்கினி தேவனே (ஹோமம்-யாகம் மூலம். எனவே இந்த அக்கினி இன்றேல் ஆரியர் வாழ முடியாது போகுமே! எனவேதான் அக்கினி அவர்களுடைய உயிர்த்தேவன்—உயிர்வாழ வழிசெய்யும் தேவனாகிறான் போலும்? இந்த அக்கினி தேவனின் உருவவர்ணனையைப் பாருங்கள். முதுகுவெண்ணையாம்-(வெண்மைநிறச் சாம்பல்—பூத்துப்போன வெண் சாம்பல்) தலைமயிர் நெருப்பு சுவாலைகள் போன்றதாம்—நெருப்பு சுவாலைகளையே இது குறிக்கிறது. உண்பதோ, மனிதரைப்போல் வாயாலல்ல—நாக்கினாலாம். நெருப்பு சுவாலைகள் பொருள்களில் பற்றி எரிப்பதன் உருவகம் இது. இவனுக்கு உணவு பாலும், வெண்ணையும், வெண்ணையுருக்கிய நெய்யுமாம். ஹோமத்தீயில்—யாகத் தீயில் இந்த வேதியர் ஊற்றுவது இவைதானே. அத்துடன் இந்த அக்னி தேவனும் மற்ற தேவர்களைப் போன்றே சோமபான மதுக் குடியன். இந்த சோமபானம் அக்னி தேவன் நாக்குகளில் ஊற்றப்படுமோ—அல்லது பக்தர்களின் வாயில் ஊற்றப்படுமோ என்பதற்கு வேத நூலில் ஆதாரம் காணோம். இந்த தேவனுக்கு நாடோறும் மூன்று வேலை (காலை-நண்பகல்-மாலை) உணவு தரப்படுகிறதாம்.

புரோகிதர்கள் சுவர்க்கலோகத் தபால் பெட்டிகளா என்று கேள்வி போடுகிறார்களே இக்காலப் பகுத்தறிவாளர்கள்; (கல்யாணம் — கருமாதிச் சடங்குகளில் புரோகிதருக்கு அரிசி பருப்பு காய்கறி உணவுப் பண்டங்கள் அளிப்பது கண்டு சந்தேகத்தால்) இக்கேள்விக்கு ரிக் வேதமும் பதிலளிக்கிறது.—இந்த அக்னி தேவனை மற்ற தேவர்களின் வாயாக்கியுள்ளனர், யாக, ஹோம வேத வித்துக்கள் இந்த அக்னி தேவனின்

நாக்கில் (சுடரில்) உணவுப் பண்டங்களைப் போட்டால், தேவர்களின் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்து, அந்தத் தேவர்கள், பிராமணார்த்தத் திருப்தி ஏப்பம் விட்ச் செய்து விடுமென்பது வேதசித்தாந்தம், நெருப்பிலே கொட்டிய பண்டம் எரிந்து சாம்பலாகிவிடுமே! சாம்பல் தான் தேவர்களின் ஆகாரமோ! இந்த சாம்பலும் ஆகாயத்தில் பறந்து செல்வதைக்காணோமே. ஹோமக் குழியில்தானே கிடக்கிறது,—சவ நிலையில். பின்னர் அதனை வேதியக் கைகளே வாரிக்கொண்டு போய் குளத்திலும் கிணற்றிலும் ஆற்றிலும் கொட்டு கின்றனவே! அல்லது சாம்பலைச் சலித்தெடுத்து நெற் றியிலும் உடலிலும் வேடப்பூச்சாகப் பூசிக்கொள் கிறார்களே!

புரோகிதர்களின் நெற்றியும் வயிறும் மற்ற அங்கங் களும், விசித்திர உணவுப் போக்கு வரத்துச் சாதனமா? சாம்பலானது தேவர்களின் உணவாவதற்கும், அவைகள் வேதியர் நெற்றி, உடல் பூச்சு மூலம் தேவர்களிடம் சென்று சேர்வதற்கும் ஆதாரங்கள் காணோமே வேதங் களில்.

புகை—தூணாம்

புகையின் உண்மை சக்தியை இந்த விஞ்ஞான உலகம் இன்னும் கண்டுபிடிக்கவில்லையே! இதோ வேதம் கூறுகிறது. இந்தப் புகைப்படலம் ஆகாயத் தைத் தாங்கும் தூணாம். அக்னி இந்தப் புகைத் தூணை சிருஷ்டித்து, ஆகாயத்துக்கு முட்டுக்கொடுத்து, அந்த ஆகாயம் இந்த ஆரியர் வாழும் உலகத்தின்மீது விழுந்து நசுக்காது தடுக்கின்றானாம். கல்லையும் மண்ணையும் சுண்ணாம்பையும் கான்கிரீட்டையும் இரும்புக் கம்பங்களையும் தேடித்திரிகிறார்களே இக்

காலக் கட்டிட நிபுணர்கள். இந்த வேத ரகசியத்தை அறிந்து கொண்டிருந்தால் அதாவது புகையைத் தூணாக்கும் முறையை ஆரிய வேதியரிடம் கற்றுக் கொண்டிருந்தால், ஆகாயமெட்டும் மாடிகளையும் எளிதில் கட்டிவிடலாமே! விமானங்களையும் ராக் கெட்டுகளையும் செய்துகொண்டு கால விரயமாக்கும் மேனாட்டு விஞ்ஞானிகளாவது இந்த புகைப் போக்கு வரத்து சாதனத்தின் ரகசியத்தைக் கற்றுக்கொள்ள லாகாதா?

மக்களை முட்டாளாக்குவது

பிறரை முட்டாளாக்குவது மிக மிக எளிது என்றாரே ஒரு ஆங்கில அறிஞர். அதற்கு இந்த வேத ரக்சிய (பித்தலாட்ட—ஏமாற்று வித்தை) வரலாறே மிக மிகப் பொருத்தமான உதாரணமாகிறது!

இந்த வேத அக்னி தேவனின் குணபாவங்களும்—நடைமுறை ஆற்றல்களும் எப்படி விசித்திரமாக உள்ள னவோ, அதே போலத்தான் இவனுடைய பிறப்புப் பற்றிய வரலாறும் விசித்திரமாகவுள்ளது — வேத நூல்படி, இவன் ஆதிதேவனின் மகனென்கிறது ஒரு வேதவரலாறு, மற்றோரிடத்திலோ, வானத்திற்கும் பூமிக்கும் பிறந்தவன் இந்த அக்னி தேவனெனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதிசயப் பிறப்பு

அடடா! இந்திரன் தந்தையைக் கண்டு பிடிக்கும் வரலாறுகளையும் மீறி விட்டது, இந்த அக்னி தேவன் பிறந்த முறைபற்றிய ரகசியம் மனிதர்களுக்குக் குழந் தையும், மிருகங்களுக்குக் குட்டியும், பறவைகளுக்குக் குஞ்சுகளும் பிறக்கும் முறையில் இந்த அக்னி தேவன்

பிறக்கவில்லையாம். இந்த அக்னி தேவனைப் பிறப்பித்த தாயும் தகப்பனும் யார் — எவை தெரியுமா? இந்த ஆரிய வேதியர்கள் கையிலிருக்கும் இரண்டு குச்சிகள். இக்கால நெருப்புக்குச்சிகளல்ல; முற்கால காட்டு மனிதர்கள் தீக்கடையும் குச்சிகள். அதுவும் அக்னி அன்றாடம் பிறப்பிக்கப்படுகிறானாம். இந்த அக்னிக் குழந்தை, அதாவது தினம் வேதியர்கள் இந்த தாயும் தந்தையுமான குச்சிகளைச் சேர்த்து உறைத்தால் அக்னி தேவன் பிறந்து விடுகிறானாம் நொடிப்போதில், இவ்விதம் பிறப்பிக்கப்பட்ட குழந்தை நொடிப்போதில் பெரியவனாகிப் பலன்பட்டு விடுகிறான். இவ்விதம் தீக்கடையும் குச்சிகளைக் கொண்டு மூட்டப்பட்ட நெருப்பு சில மணி நேரத்தில், அதிகம் போனால் இரவு நேரத்திலாயினும் அணைந்து போகிறதே! இது அக்னி தேவனின் அன்றாடச் சாவு போலும்! அன்றாடம் பிறந்து, அன்றாடம் செத்து, அன்றாடம் உயிர் மீட்சி பெறும் விசித்திரன் போலும் இந்த அக்கினி தேவன்! இவனை வருணதேவனோ—பூமி தேவியோ பெறவில்லை என்பதும்; இந்த பூலோக மக்களே சுள்ளி விறகுகளைக் கொண்டு அன்றாடம் பெற்றெடுத்து, பயன்படுத்திக்கொண்டு, மீண்டும் சாக விட்டு விடுகின்றன ரென்பதும், இந்தத் தீக்கடையும் குச்சிகளின் செய்கைபற்றிய வேத சுலோகங்களால் வெட்ட வெளிச்சமாகிறது.

யாகத் தீயே

அக்னி தேவன் என்று ஆரிய வேதியர் குறிப்பிடுவது, யாகத்தீயை மனித உருவில் வர்ணித்துள்ளனர் என்பதே தெளிவுரையாகும். ‘தூமகேது’ என்றால் கெடுதி விளைக்கும்—கெடுதியை முன்னறிவிக்கும் கெட்ட நக்ஷத்திரம் என்பது இப்போது சோதிடரென்போர் கூறுவது. இந்த அக்கினிக்கும் தூமகேது

என்றும் ஆரியர் பெயரிட்டுள்ளனர். எனவே இந்த அக்னி தேவனும் நாசகார தேவனேயாகிறான்.

இந்த அக்னிக்கு வலிமையின் மகன் என்றும் பெயராம் இதற்குக்காரணம் இந்த தீக்கடையும் வேலை அந்த ஆரியர் காலத்தில் மிகவும் சிரமமாக இருந்ததேயாகும். மற்றும் இந்த தேவனைப் பிறப்பிக்க உதவியவர் பத்துப் பெண்கள் என்று வேதநூல் வர்ணிக்கிறது. இந்த பத்து பெண்கள் வேறுயாருமல்ல தீக்கடைவோரின் இரு கைகளிலுள்ள பத்து விரல்களேயாகும்.

புரட்டுக் கதை

உண்மை இதுவாக. இந்த அக்னி வான நீர் மண்டலத்தில் பிறந்தவனெனவும் மற்றொரு கட்டுக்கதையும் இந்த ஆரியநூல் உற்பத்திப் பெருக்கம் செய்துள்ளது. இத்துடன் நிற்கவில்லை, இவனுடைய பிறப்புக்கதை. மேலேழுலகம் எனப்படுவதில் எல்லாவற்றிற்கும்மேலாக வுள்ள முதல் வானுலகில் பிறந்த இவனை இப்போதுள்ள ஏழாவது கடைசி வானுலகுக்கு, மாதரீஸ்வன் என்ற தேவன் கொண்டுவந்து சேர்த்துவிட்டானாம். இந்த முக்கதைகளும், கருத்திலும் நடப்பிலும் முரனாகவும் நம்பத்தகாததாகவுமுள்ளன.

முப்பட்டை

இந்த அக்னி எல்லாவற்றிலும் முப்பட்டைப் பண்பினன் என்றும் ஆரியப்புரோகிதர்கள் பெருமையாகக் கூறிக்கொள்கின்றனர். அதாவது தலையும் மூன்றாம்-உடலும் மூன்றாம் (தேஜஸ்) ஒளியும், மூன்றாம்-பிறப்பு முறையும் மூன்றாம் மூன்று நாமமிடுதல் முப்பட்டை சாம்பல் பூசுதல்; மூன்றுமுறை கற்பூர தீபவொளி காட்டுதல்-மும்முறை தண்ணீரை இறைத்தல் என்ற

முறைகளைப் புரோகிதர்கள் இந்த அக்னி புராண அடிப்படையில்தான் கைக்கொண்டனர் என்பதாகிறது: "மூன்றுபேர் சேர்வது மூதேவி-தகாதது-மூவர் சேர்ந்தால் எதுவும் ஆகாது" என்றும் சில மக்கள் கருதி வருவது அறிந்ததே. மூன்று என்னும் எண்ணையே சிலர் வெறுக்கின்றனர். ஆரியக் கடவுள்களும் அக் கடவுள்களின் வரலாறுகளும் முப்பட்டையாக இருப்பதானதும், இந்த முப்பட்டைத் தேவர்களின் பெயரால் வேதியர்கள் விளைவிக்கும் தொல்லைகளை அனுபவித்தும், கேடுகள் விளைந்ததை அனுபவத்துறையில் கண்டும்தான் சில பொதுமக்கள் இந்த மூன்று என்ற எண்ணையே வெறுக்கின்றனர் என்றும் சிலர் யூகிக்கின்றனர்.

லோகப் புரோகிதனாம்

இந்த அக்னியையும் இரு பிறப்பாளனாக்கியுள்ளனர். இருபிறப்புக்குலத்தார். (பூணூலுக்குமுன் ஒரு பிறப்பு, பூணூலிட்டுக்கொண்டதும் இரண்டாம் பிறப்பு)

யாகங்களின் மூலதேவன் அக்னியாகையால் இவனுக்கும் புரோகிதன், பிராமணன் என்றும் பெயரிட்டு உலகப் புரோகிதத் தொழிலின் தேவப் பிரதிநிதியாக்கியுள்ளனர்.

இந்த யாகமும், ஹோமமும் சமஸ்கிருத ஆரியரின் தனியுரிமையோ, சுகசிருஷ்டியோ அல்ல.

இத்தாலியரும் கிரேக்கரும்கூட நெருப்பில் அர்க்கியம் (பொருள்களை சொரிந்து வணங்குதல்) செய்யும் முறையைக் கைக்கொண்டிருக்கின்றனர்.

புரோகித குரு

பிரகஸ்பதி தேவகுருவாம்; பிராமணஸ்பதி என்றும் இவனுக்குப் பெயர். அக்னியைப் போன்றே இந்த பிரகஸ்பதியும் வீட்டுப் புரோகிதனும் பிராமணப் புரோகிதனும் ஆவான் என்றும் பிரார்த்தனைகளை உற்பத்தி செய்பவனென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பிரகஸ்பதியை பிராமணப் புரோகிதன் என்கின்றனர்; அடுத்தபடி பிரம்மாவை உண்டுபண்ணியவன் இவனே என்கின்றனர். பிற்கால வேதாந்தத் தத்துவத்தில் அடிபடுவது இந்த பிரம்மாவேதானாம்.

சோமதேவன்

(மதுக்கடவுள்) அடுத்தபடி ஆரியரின் முக்கிய தேவன் மதுக்கடவுள். இதிலிருந்து ஆரியர் மதுவைத் தெய்வமாகக் கொண்டாடி பெரும் மதுக்குடியர்களாக இருந்தனர் என்பது புலனாகிறது.

மதுவுண்பவர்தானே மதுவை சிறப்புப் பொருளாகக்கொண்டாடுவது வழக்கம்.

புராணங்கள்

3

புராண கதைகள் தோன்றிய இரகசியம்

பிராமணியத்தை எதிர்த்த அரசர்களை அச்சுறுத்தி அடக்கப் புனையப்பட்ட கட்டுக்கதைகள் :—

பிராமணியத்தில் "பிரம்மன்" முதலிடம் பெற்றுள்ளான். இதற்குக் காரணம் பிராமணர் எமது இனத்துக்கு முக்கியத்துவம் தரவேயாகும்;

மற்றும் 'பிரஜாபதி' என்ற தேவனும் முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த பிரஜாபதி லிங்க வரலாறுபற்றிய கதைகள் அசிங்கியமாக அருவருக்கத் தகுந்ததாகவுள்ளன. பிரஜாபதி என்றால் உலகை உற்பத்திசெய்யும் கடவுளெனப்படுகிறது. இதனை சில இடங்களில் 4-வது தேவனென்று குறிப்பிட்டுள்ளார். மூவுலகின் தந்தையும் சிருஷ்டிகர்த்தாவும் இந்த தேவனென வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதைப்பற்றி கூறப்படும் கோட்பாடுகள் ஒத்துவரவில்லை.

பிராமணர்கள், காலப்போக்கில் அரசியல் நோக்கங்களுக்காக இக்கோட்பாடுகளையெல்லாம் தோற்றுவித்திருக்கவேண்டும். அதாவது தங்கள் சாதியை உயர்த்திக் காட்டவும், சாதி வேற்றுமைகளை நுழைக்கவும் செய்த ஏற்பாடாகவிருக்கும். பிராமண ஆதிக்கம் தலைசாயும் காலத்தில்தான், இந்த சாதிவேற்றுமை அதிகரிக்கப்பட்டு பிராமணர்களை உயர்த்திக் காட்ட தீவிர முயற்சிகள் செய்யப்பட்டன; இதற்காகத்தான் 'பிரமன்' என்ற தேவனைக் கற்பித்து முதற் தேவனாக்கியுள்ளனர். பிற்கால வேதநூல்களில் இந்த பிரமனைப் பற்றி குறிப்பே கிடையாது.

மனுவின் காலத்தில்தான் பிரமன் முக்கியமாக்கப் பட்டுள்ளான். அதாவது சாதி வேற்றுமைகளை உண்டாக்க பிரமனைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். பிராமணருக்கு உயர்வு தரவே பிரா்மணரின் பெயரடியாகப் பிரமன் கற்பிக்கப்பட்டு, விஷ்ணுவுக்கும் சிவனுக்கும், தகப்பனும் மேலானவனும் என்று காட்டியுள்ளனர். பிரமனே தன் உடலிலிருந்து உலகை சிருஷ்டித்தானென புனைந்துள்ளனர்.

மதிப்பாரில்லை

மற்றும் இந்தப் பிரமன் பொன் முட்டையிலிருந்து பிறந்தானாம் ஆனால் இந்தப் பிரமனை யாரும் வணங்குவதோ மதிப்பதோ இல்லை. மக்களுக்கு உலகனுபவமும் பகுத்தறிவும் வளர வளர, இந்தப் பூசாரிகளின் கொள்கைகளில் நம்பிக்கைக் குறையலாயிற்று. மற்றும் பல குழுவினர் தலைதூக்கி ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒவ்வொரு கடவுளை முக்கியமும் முதன்மையுமாக்கிக் கொண்டனர். ஆரியக் கோட்பாடுகளும் மதிப்பிழந்தன. வேதக்கடவுளுக்குப் போட்டியாக எண்ணற்ற கடவுள்கள் தோற்றுவிக்கப்பட்டன. மக்களைப் பிராமணியத்துக்கு ஆட்படுத்தவே பக்தி-பூசை-சடங்குகள் மந்திர தந்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. வேதத்திற்கு வெகுநாட்களுக்குப் பின்பே சிவனும் விஷ்ணுவும் பிராமண மதத்தில் இடம் பெற்றனர்.

சிவன் என்ற கடவுளின் பெயர் வேதங்களிலில்லை. அன்புடையவன், 'புனிதன்' என்ற அர்த்தத்தில்தான் சிவன் என்ற பெயர் கையாளப்பட்டுள்ளது. அக்கினியே சிவன் என்றும் மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஷ்ணுவிலும் வேதகால விஷ்ணுவிற்கும் பிற்கால விஷ்ணுவிற்கும் வேற்றுமை காணப்படுகிறது. இதுவும்

இனச் சிறப்புக்காட்டும் நோக்கத்துடன் கற்பனை செய்யப்பட்டதே யாகிறது.

விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் இவைகள் நிகழ்ந்தகாலம் எவை என நிர்ணயமாகத் தெரியவில்லை. இந்த அவதார வரலாறுகள் எல்லாம் பிராமணீய சிறப்பு நோக்கத்துடன் தான் இருக்கின்றன. **பிராமண மதத்தை எதிர்த்த அரசர்களை ஒடுக்க கற்பனை செய்யப்பட்ட கதைகள்தான் அவதாரம்.**

ஏதாவது ஓரரசனின் அடக்குமுறைகளிலிருந்து மக்களைக் காக்கத்தான் விஷ்ணு 'அவதாரம்' செய்திருக்கிறார். எனவே பிராமணீயத்தை அரச குலத்தினர் எதிர்க்கும் போதெல்லாம் - பிராமணீயத்துக்கு ஆபத்து நேரிடும் போதெல்லாம் இந்த அவதாரக் கதைகள் தோன்றியிருக்கவேண்டுமென எண்ணச் செய்கிறது.

மகாபாரதமும், இராமாயணமும் பிராமணீயத்தை எதிர்த்த அரச மரபினரை அச்சுறுத்தி ஒடுக்கப் **புனையப்பட்டவையாகும்.**

எப்படியெனில் இந்த அரச மரபினர் ஒடுக்கப்படுவதற்கு முன்பே இந்தக் கதைகள் வழக்கில் இருந்திருக்கின்றன. பிற்காலத்தில்தான் இக்கதைகளில்வரும் இராமனையும் கிருஷ்ணனையும் பிராமணர்கள் 'அவதார'ங்களாக்கிவிட்டனர்.

வேதங்கள் மதிப்பிழக்கவே பூசைச்—**சடங்குகளைப்** பிராமணர்கள் தோற்றுவித்து அவற்றைத் தாங்களே செய்யவேண்டுமென ஏற்பாடும் செய்து கொண்டனர். இந்த சடங்குகள் செய்யும் உரிமை பிறருக்குப் போகக்கூடாதென்றுதான், சமஸ்கிருத மந்தி

ரங்களை பிறர் படிக்கக்கூடாது, ஒப்புவிக்கக் கூடா தென்று தெய்வ சாப பயம் காட்டி அச்சுறுத்தித்தடைப் படுத்தி, அவற்றைத் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டனர்.

மற்றும் ஓர் தந்திரம் செய்தனர். அதாவது பழங் குடிகள் வணங்கியவற்றை எல்லாம் பிராமண மதத் திலும் சேர்த்துக்கொண்டு, அவர்களே பூசாரிகளாயினர்.

மற்றும் இந்த பூசைச் சடங்குகளுக்கு மதிப்புத் தருவதற்காக, சுவர்க்கம்—நரகங்களையும் கற்பனை செய்தனர்' சாதி உயர்வு தாழ்வு கற்பித்தும் பல்வேறு பிறவிகள் கற்பித்தும் பிராமணசாதியே உயர்ந்ததென்று கூறியும், உயர்ந்த சாதியை மறுபிறப்பில் தானடைய முடியுமென்றும், இதற்காகப் பூசைகள் சடங்குகள் செய்யவேண்டுமென்று கூறியும் தங்கள் கொள்கை களுக்கு ஆக்கம் தேடிக்கொண்டனர். பிதுர்கள்-மூதா தைகள் பூஜை என்பது பிராமணர்களுக்கு மதிப்புத் தேட கையாளும் முறையே. இதற்காகத்தான் யமன் என்ற தேவனும் கற்பிக்கப்பட்டான். பூலோகத்தில் வசித்த முதல் மனிதனே செத்தபின் யமதர்ம ராஜனா னான் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

மோட்ச—நரகம் பித்தலாட்டம்

மோட்சமடைய தவம் செய்யவேண்டுமென்ற கோட்பாடும் சூழ்ச்சியாகவே இருக்கிறது. எப்படி யெனில், இந்த தவம் செய்வதில் விதிக்கப்பட்டுள்ள கடுமையான விதிகளை நிறைவேற்றி, தவத்தில் முழு வெற்றிபெற்றவர்கள் யாரும் காணோம். இந்தப் பித்த லாட்டத்தை மறைக்கவே பிற்காலத்தில் பக்திமுறை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

கபிலம்—புத்தம்

இவற்றை எல்லாம் ஆட்சேபிக்கத்தான் மீமாம்சம், கபிலம் முதலிய தோன்றின. **கபிலம் என்பது பிராமணீயப் பித்தலாட்டங்களை வெட்டவெளிச்சமாக்கும் கோட்பாடுகளைக்கொண்ட இயக்கம்.** இக்கோட்பாடுகள் பிராமண மதத்தினரின் கடவுள் கொள்கைக்கே வெடிவைப்பதாகவுள்ளன. **பவுத்தமோ பிராமண மதக் கோட்பாடுகளை அடியோடு பொய்யாக்கும்நோக்கம் கொண்டது.**

நெடுங்காலமாக மோட்ச — நரகத்தில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. **புத்த மதத்தின் செல்வாக்கைக் குறைக்கவே பார்ப்பனர்கள் காம லீலைகள் மிகுந்த கிருஷ்ணாவதாரக் கதையை மக்களிடையே அதிகம் பிரசாரம் செய்தனர்.** மற்றும் இன வேறுபாடுகளும் அதிகரிக்கப்பட்டன. பவுத்தமதத்தால் செல்வாக்கிழந்த பிராமண மதத்திற்குப் புத்துயிரளிக்கத்தான் சங்கராச்சாரி பாடுபட்டார். மற்றும் சைவ—வைணவ மடங்கள் தோற்றுவிக்கப்பட்டதும் பவுத்த மடங்களுக்குப் போட்டியேயாகும். சங்கராச்சாரியார் காலத்திலும் அதற்குப் பின்னரும்தான் சாதிப்பிரிவுகள் அதிகரித்தன. இந்த சாதிப் பிரிவினைகள் தொல்லையானவை என்றும், மானக்கேடானவையென்றும் ஹிந்துக்கள் உணர்வதாகக் காணோம். ஆனால் பிராமணர்கள் கருத்தோ தங்கள், இனம் ஒன்றுதான் உண்மையான சுத்தமான சாதி; மற்ற சாதியாரெல்லாம் கலப்புகள் என்பதாகும்.

"இப்போது பிராமணர்களின் மதிப்பு விரைந்து நசித்து வருகிறது. உலகத் தொடர்பு அதிகமற்ற சில கிராமந்திரங்களிலும், நகரங்களில் மூடக்கொள்கைகளில் நம்பிக்கைக் கொண்டவர்கள் வட்டாரங்களிலும் மாத்

திரமே இவர்கள் கொஞ்சம் மதிக்கப்படுகின்றனர்" என்று ஷெரிங் என்பவர் குறிப்பிடுகிறார்.

(மேலே குறிப்பிட்டவை என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்ற பேரகராதியில் காணப்படும் கருத்துக்களாகும்.)

விஷ்ணு அவதாரம்

பரசுராமன், க்ஷத்திரியர்களை (ஆரியர்களுக்கு எதிராக இருந்த அரசர்களை) எல்லாம் கொன்று, அவர்களுடைய நாடுகளைக் கவர்ந்து, அவற்றைப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தான். அதன்பின் தன் இறுதிக்காலத்தைக் கழிக்க சிறு நிலத்தைத் தந்துதவும்படி அந்தப் பார்ப்பனர்களைக் கேட்டானாம். ஆனால் அந்த பார்ப்பனர்கள் பரசுராமன் கேட்ட சிறு நிலமும் கொடுக்க மறுத்து விட்டானாம். இதைக் கண்டு சீற்றமடைந்த பரசுராமன் அப்பார்ப்பனர்களைப் பழிவாங்கத் திட்டமிட்டானாம். பிறகு வருணனை அடைந்தான். தான் யாரென்பதையும், தான் வந்த காரியத்தையும் வருணன் இடம் சொல்லி அந்தப் பார்ப்பனர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் தண்ணீரில்லாது போகச்செய்ய உதவிபுரியும்படி கேட்டான். வருணனும் இணங்கினான். பரசுராமன் எய்யும் அம்பு எவ்வளவு தூரம் பாய்கிறதோ அவ்வளவு தூரம் கடல் கொள்ளச் செய்யவேண்டுமென்பது ஏற்பாடு ஆயிற்று. பரசுராமன் அம்பு எய்வதற்கு முன்னிரவு அவனுடைய வில்லின் நாண் பழுதாக்கப்பட்டு விட்டது. காலையில் எய்யப்பட்ட அம்பு அதிக விசை கொண்டு பாயாது இப்போது உள்ள மலையாள நாட்டளவுக்குப் பாய்ந்து விழுந்தது. எனவே, மலையாளக் கரைப் பகுதிக்கப்பாலிருந்த நாடெல்லாம் கடல் கொள்ளப்பட்டு விட்டதாம்.

(இது கால்வின்-புராண ஆராய்ச்சி)

ஏராளமான பார்ப்பனர் கும்பகர்ணனுக்கு ஆகாரம்

கும்பகர்ணன் தவழும் குழந்தையாக விருந்தபோது தன் கைகளை நீட்டி அக்கையில் அகப்பட்டவைகளை எல்லாம் விழுங்கிவிட்டான். ஒரு சமயம் இந்திரனுடைய காமக் கிழத்திகளின் 5000 பெண்கள், 7000 ரிஷிபத்னிகள், ஏராளமான பிராமணர்கள், பசுக்கள் ஆகியவற்றை விழுங்கி விட்டதாக இராமாயண வரலாறு கூறுகிறது.

(கால்வின்—புராண ஆராய்ச்சி)

சேது-தமிழ் மன்னன் கட்டியது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள சேது (பாலம் இராமாயணத்தில் வரும் அனுமானும் அவன் படைகளும் கட்டியதாகக் கூறப்படுகிறது. ஆயினும் சரித்திர ஆதாரமான ஓர் வரலாறு உள்ளது; அதாவது மதுரை மன்னனிடம் தோற்ற மறவர்குல மன்னன் ஒருவனே இப்பாலத்தை அமைத்து, அவனும் அவனுடைய படைகளும் மதுரை மண்ணை விட்டுத் தப்பி இலங்கைக்குச் சென்றனர் என்பதாக.

(கால்வின்—புராண ஆராய்ச்சி)

தெய்வலோக இறக்குமதிப் பித்தலாட்டம்

சிறந்த பொருள்கள், கலைகள், ஏதாவது இருந்தால் அவை தெய்வ லோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டவையென்றும், தெய்வவாக்கென்றும், கடவுள் அருள் பிரசாதமென்றும் கூறுவது ஹிந்துக்கள் (பிராமணர்) வழக்கம்.

(சர். வில்லியம் ஜோன்ஸ்)

அமெரிக்க இந்தியர் கூர்மாவதாரம்

அமெரிக்க, இரோக்ங் இந்தியர்களும் ஆமையைப் பற்றி ஓர் புராண வரலாறு கூறுகின்றனர்.

ஆதிகாலத்தில் ஆறு ஆண்கள் ஆகாச மண்டலத்திலிருந்தனர். ஆனால் பெண்கள் இல்லை. இன வளர்ச்சிக்காக ஓர் பெண்ணைத் தேடினர். தேவலோகத்தில் ஓர் பெண்ணிருப்பதாகக் கேள்விப்பட்டனர். ஒருவனை அங்கு அனுப்பத் தீர்மானித்தனர். ஆனால் அவ்வளவுதூரம் பறக்க முடியவில்லை. அவன் கருடனின் உதவியை நாடினான்; கருடன் அந்த ஆளைத் தேவலோகம் கொண்டு சேர்த்தான். அங்கு அவன் அந்தப் பெண்ணை மயக்கி வசப்படுத்தினான். இந்த நடவடிக்கைகளை அறிந்த பரமார்த்மா சீற்றமடைந்து அப்பெண்ணையும், அவனையும் சொர்க்க லோகத்தில் இருந்து தள்ளிவிட்டார். அவர்கள் கீழே விழுவதைக் கண்ட ஓர் ஆமை அவனைத்தாங்கிக் கொண்டது.

மீன்களும், கடல் பூச்சிகளும் கடலடியிலிருந்த மண்ணை எடுத்து வந்து ஆமையைச் சுற்றி போட்டு மூடி விட்டன. இவ்விதம் ஆன மண் கண்டமே உலகமாயிற்று; அப்பெண்ணுக்குப் பிறந்தவர்களே மனிதர்கள்.

(கால்வின்—புராண ஆராய்ச்சி)

பன்றித்தலை லட்சுமி

விஷ்ணு, பன்றி உருக்கொண்டது (வராகவதாரம்) பற்றி ஓர் சித்திரமுள்ளது. விஷ்ணுவின் உருவத்துடன் லட்சுமிக்கு 4-தலைகள். ஒரு தலை பன்றித்தலை. 8 ஆயுதங்கள் ஏந்திய எட்டுக் கைகள்—இப்பெண்ணுருவத்தைச்சுற்றி பல பன்றிகள் வில்லேந்தியபடியுள்ளன.

(கால்வின்—புராண வரலாறு)

கிரேக்க மன்னர் படையெடுப்பு வரலாறே இராமாயணம்

இராமாயணம், கிரேக்கரில் திரேஸிசால் அல்லது பச்சுங் கதையே என விளக்குகிறார். சர். வில்லியம் ஜோன்ஸ். இந்த பஞ்சுரங் என்ற கிரேக்கவீரன் பெரும் படையுடன் இந்தியா முதலிய நாடுகள்மீது படையெடுத்து வந்தான். இந்தப் படைஎடுப்பின் வரலாற்றுக்கோ அல்லது அவ்வரலாற்றின் ஒரு பகுதியை ஒட்டிப் புனையப்பட்ட வரலாறாகவோ இராமாயணம் இருக்கவேண்டுமென்கிறார் இவர்.

பெரியாரவர்களின் கருத்துகளுக்கு பார்ப்பனப் பேரறிஞர்களின் ஒப்பம்

4

முன்ஷி— பிர்லா— ராதாகிருஷ்ணன்— வெங்கட்டராம சாஸ்திரியார் ஆராய்ச்சி நூலில் காணும் உண்மைகள். "விடுதலையின்" விளக்கம்:—

ஆரியர் இயல்பு

ஆரியர் என்பவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு நாடோ, ஊரோ, குறிப்பிட்டமொழியோ, கொள்கை கோட்பாடுகளோ கிடையாது. அவர்கள் நாடோடியாக வீருந்து பல நாட்டினரின் கொள்கை— கோட்பாடுகள்— மொழிகள் ஆகியவற்றிலிருந்து— தங்கள் சுயநலத்திற்கு ஏற்றவற்றைத் தொகுத்துக்கொண்டு தங்களைத் தனிச் சிறப்பினமாகக் கூறிக்கொள்கின்றனர். இந்த "திருட்டுச்சொத்தின்" வண்டவாளத்தை பிறர் சந்திக்கு இழுக்காதிருப்பதற்காக தெய்வீகம்—தெய்வத்தின் அருள் மொழிகள், தெய்வீகத்தின் மக்கள் என்று பொய்வாரிஸ் பிரசாரம் செய்து தங்களுக்குச் சிறப்புத்தேடிக் கொண்டனர். மற்றும் தாங்களே உயர் சாதியார்-மேல் இனத்தார் என்றும் மற்றவர்கள் எல்லாம் தங்களுடைய அடிமைகள்— தாசி புத்திரர்கள்—தாசர்கள் என்றும் கூறி—அதற்கான ஆதாரங்களை சமஸ்கிருத வேதங்கள் சாஸ்திரங்கள், புராணங்கள் எனப்படும், நூல்களில் எழுதி வைத்துக்கொண்டு பிறமக்களை ஏமாற்றி அதிகாரம் செலுத்தி சமுதாயத்தின் பெயரால்—மதத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்தி சுரண்டிப்பிழைத்து வருகின்றனர். அறிவுக்கொவ்வாத இந்தக் கோட்பாடுகளையும் சுரண்டல்களையும் ஒழித்துக்கட்டி இந்த வேத

புராணக் கும்பல்களின் ஆக்கிரமிப்புப் பிடிப்பிலிருந்தும் சுரண்டலிலிருந்தும், அவர்களால் நேர்ந்துள்ள மானக் கேடான நிலைமையிலிருந்தும் திராவிட மக்கள் மீட்சி பெற்று தன்மான—தன்னறிவு—தன்னியக்க மக்களாக வாழ்ந்து உயர் நிலைமை பெறவேண்டும்.

என்பதாக தன்மான இயக்கத் தந்தை பெரியாரவர் களும், திராவிடர் கழகத்தினரும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக திராவிட மக்களிடையே பிரசாரம் செய்து மக்கள் நல்லறிவு பெற—பகுத்தறிவா ளர்களாகச் செய்து வருகின்றனர்.

இதைக் கண்டு பார்ப்பனர்கள், பெரியாரவர்கள் செய்து வரும் பிரசாரம் வெறும் கற்பனை என்றும், ஆதாரமற்றதென்றும் எதிர்ப் பிரசாரம் செய்து, மக்களின் அறிவுக் கண்ணில் மண் தூவ முயற்சித்து வருவதும்—அறிந்ததே. அண்மையில் காங்கிரசு ஆட்சி மூலவர்களும் கூட இந்தக் குருட்டுக் கோட்பாடு வேதாந் தப்பிரசாரம் செய்வதில் ஈடுபட்டு, தங்களுடைய அரசியல் ஆதிக்கச் செல்வாக்கைப் பயன்படுத்தித் திராவிட மக்களை இழிவு படுத்தும் ஆரியக் கோட்பாடு களுக்கும் புராண இதிகாச கட்டுக் கதைகளுக்கும் ஆக்கம் தேட முற்பட்டிருப்பதும் அறிந்ததே.

பெரியார் அவர்களும் மேற்படி கருத்துக்களை, பகுத்தறிவு கொண்டு கணித்தறிந்துதான் கூறிவருகிறார். வேதம்- மத புராணங்களிலுள்ள, மனிதத்தன்மைக்கும், பண்புக்கும், நடைமுறைகளுக்கும், நியாயத்துக்கும், நேர்மைக்கும் தகுதியற்ற கோட்பாடுகளையும், நடை முறைகளையும் கண்டுதான் அவைகளின் தகுதியற்றத் தன்மையை அம்பலப்படுத்தி வருகிறார். ஆனால் இது இவர் மாத்திரம் கற்பனை செய்து கூறுவதாக பார்ப்ப

ளர்களும், வைதிகர்களும் செய்து வரும் பிரசாரம் முற்றும் பொய்; சுயநலப் பித்தலாட்டம் என்பதற்கு உலக வரலாற்று ஏடுகளில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

மேனாட்டுப் பேரறிஞர்கள் மாத்திரமின்றி, தமிழ் நாட்டு அறிவாளர்களும்-பார்ப்பனப் பிரமுகர்களும் வங்காளத்தில் தினேஷ்சந்திரசென் போன்ற சரித்திர—சமுதாய ஆராய்ச்சிப் பேரறிஞர்களும் தக்க ஆதாரங்கள் தந்துள்ளனர்-தந்துவருகின்றனர்.

முன்ஷி குழுவினர் நூல்

முன்னர் டில்லி சர்க்கார் உணவு மந்திரியாகவும், இப்போது அய்க்கிய மாகாணக் கவர்னராக இருப்பவரும், வடமொழிப்புலமையாளரும், சரித்திர ஆராய்ச்சியாளரும் பார்ப்பனருமான **திரு. கே. எம். முன்ஷியைத்** தலைவராகவும், மற்றும் பெரும் ஆலை முதலாளியான **ஜி. டி. பிர்லா** வைத் துணைத் தலைவராகவும்; ஆந்திர பார்ப்பனரும் உலகப் புகழ் பெற்ற தத்துவ சாஸ்திரியும் இப்போது இந்திய சர்க்கார் துணை ஜனாதிபதியாக இருப்பவருமான **டாக்டர் ராதாகிருஷ்ணன்**-சென்னைப் பார்ப்பனர் மகா சபைத் தலைவரும், சென்னை அட்வகேட் ஜெனரலாக முன்னர் வேலை பார்த்தவருமான திருவாளர் **டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி**—மற்றும் சில வடக்கத்திக் கலைஞர்களையும் உறுப்பினர்களாகவும்—செயலாளர்களாகவும் கொண்ட **பாரத இதிகாச சமீதி** என்றொரு கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருத-வேதம்-பிராமண மதம்- ஆகியவற்றிற்கு உயிரளிப்பதே இக் கழகத்தின் குறிக்கோள் என்பது அக்கழக அமைப்பே சுட்டிக் காட்டும்.

இக்கழகத்தார் "**இந்திய மக்களின் கலாச்சாரமும் வரலாறும்**" என்ற பெயரில் ஓர் ஆராய்ச்சி நூல் ஆங்கில

மொழியில் வெளியிட்டுள்ளனர். முதல் தொகுப்பு இப்போது வெளிவந்துள்ளது. "வேதகாலம்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆராய்ச்சிக்கருத்துக்கள், பெரியாரவர்களின் கருத்துக்களை முழு அளவுக்கு ஆதரிப்பதாகவுள்ளன. பார்ப்பனர்களை தலைவரா கவும், அங்கத்தினர்களாகவும், கொண்ட கழகம்— பார்ப்பன ஆராய்ச்சி அறிஞர்களைக்கொண்டு ஆராய்ந்து அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப வடி கட்டியும்—திருத்தியும் வெளியிட்டுள்ள நூலில்-அதுவும் இந்திய சர்க்காரின் சரித்திர ஆதார ஏடாக மதிப்புப் பெறும் சரித்திர நிகண்டில் (என்சைக்ளோ பீடியா)— பெரியாரவர்களுடைய கருத்துகளுக்கும் அவர் கூறி வரும் மெய்மைகளுக்கும் சரித்திரப் பூர்வமான ஆதாரங் கள் காணப்படுகின்றன. இந்நூலுக்குத் திரு. கே. எம். முன்ஷியே முன்னணிச் சிறப்புரையும் தந்திருக்கிறார். சமஸ்கிருத-வேத நூல் காப்பாளர்களும், ஆராய்ச்சியா ளர்களுமான பார்ப்பன பேரறிஞர்கள் தொகுத்துள்ள இந்நூலில் பெரியாரவர்கள் கூறும் மெய்மைகளுக்கு ஆதாரமாகத் தரப்பட்டுள்ள சில முக்கிய கருத்துக்களை மாத்திரம் தொகுத்தளிக்கிறோம். பகுத்தறிவுலகத்தின் நேர்மை—நியாயத்தை பொதுமக்கள் கண்டு தெளிவ டைய வேண்டும். மேலும் சுயநலக் கும்பல்களின் பித்த லாட்டப் பிரசாரம், சுயநலவேடம் ஆகியவற்றை அறிந்து மெய்யறிவு பெற்று தன்னறிவு-தன் சக்தியைப் பயன் படுத்தி, திராவிட மக்கள் தங்கள் நல்வாழ்க்கைக்குத் தாங்களே நல்வழி வகுத்துக்கொள்ள வேண்டும். மதத் தின் பெயரால், தெய்வத்தின் சமுதாயத்தின் பெயரால், விதி, பிறவியின் பெயரால், கூறப்படும் உயர்வு—தாழ்வு பொய்க் கூற்றுகளை ஒதுக்கித்தள்ளி, எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற உயர் நோக்கத் துடன் தான் இக்கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

புராணங்கள் கற்பனையே

"புராணங்களும்-- இதிகாசங்களும் மக்களின் மெய்ச்சரித்திரமல்ல. இவைகள் மக்கள் வரலாற்றை அறிவதற்கோ, சரித்திர உண்மைகளை அறிவதற்கோ ஆதாரமாகாது, இவைகள் வெறும் மத- இலக்கியத் தொகுப்புகளே" என்று திரு. முன்ஷி—இந்நூலின் முன்னுரையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். (பக்கம் 8)

எனவே வேத – இதிகாச புராணங்கள், இந்தி யாவில் வசித்த முற்கால மக்கள் வரலாறு என்பது பொய்யாகிறது. இந்நாட்டு மக்களுக்குரியதல்லாத கற்பனைக் கோட்பாடு கட்டு மூட்டைகளே வேத புராணங்கள் என்ற மெய்யும் உறுதிப்படுகிறது. வைதீகக் கோட்பாடுகளுக்கு சரித்திர அடிப்படை இல்லை என்றும் திரு. முன்ஷியார் வெட்ட வெளிச்ச மாக்குகிறார்.

மற்றும் ஆரியர்கள் அனாதி காலமக்கள் (கடவுள் புத்திரர்) சிறந்த நாகரீகம் படைத்தவர்கள் என்று கூறப் படும் கூற்றை இந்நூலுக்கு முன்னுரை தந்துள்ள பேராசிரியர் ஆர். சி. மஜூம்தார் என்பவரே பொய்ப் படுத்துகிறார்.

அதாவது "ஆரியர்கள் சிந்து வெளியில் குடியேறு வதற்கு முன்பா – பின்பா நாகரீக மக்களாயினர் என்று நிர்ணயிப்பது கடினம்" என்று கூறி, மாக்கள் நிலையி லும், நாடோடிகளாகவுமிருந்த ஆரியர் சிந்து வெளியில் குடியேறி அங்கிருந்த பழங்குடி மக்களுடன் கலந்து வாழ்ந்தபின் தான் அறிவு வளர்ந்த மக்களாயினர் என்ற உண்மையை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

உபநிஷத்துகளும் புராணங்களும்

மற்றும் வேதகாலத்தையும் — உபனிஷத்துகள், சூத்திரங்கள் ஆகியவற்றின் காலத்தையும் திட்டமாக நிர்ணயிக்க முடியவில்லை என்கிறார். மற்றும் வேத வித்துகளெனப்படும் உபனிஷத்துகளுக்கும் பிற்கால புராண இதிகாச கதைகளுக்கும் தொடர்பு காணவியல வில்லை என்றும் கி. மு. 7-வது 8-9 நூற்றாண்டுகளென சுமாராக அதுவும் யூகத்தால்தான் கணித்து இந்நூலில் குறிப்பிட்டிருப்பதாகவும் ஒப்புக்கொள்கிறார்.

இந்த நூல் தனிப்பட்ட ஒருவர் தொகுப்பு அன்றென்றும் பலர் ஆராய்ந்து தேர்ந்தெடுத்து சேர்ந்த தொகுப்பென்றும் இந்த முன்னுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நூல் **"நீதிபதிகளின்" கூட்டுத் தீர்ப்பு** போன்றதேயாகும். அதாவது மறுக்க முடியாத ஆதாரங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டதாகிறது. அதுவும் வேதகாப்பாளர் எனப்படும் பார்ப்பன அறிஞர்களின் தீர்ப்பு நகலாகிறது.

மற்றும் இந்த நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருத்துக்களுக்கு ஆதாரமாக, பேராசிரியர் ராதாகிருஷ்ணனும் (ஆந்திர பார்ப்பனர் – பந்துலு) மற்றும் வட இந்தியா – மேனாட்டு ஆராய்ச்சியாளரும் எழுதிய நூல்களும், சர்க்கார் வசமுள்ள கல்வெட்டு ஆராய்ச்சி ஏடுகளுமான சுமார் நூற்றைம்பது ஏடுகளின் பெயர்ப் பட்டியலும் இந்த நூலில் தரப்பட்டுள்ளது.

ரிக்வேதம் முதலிய ஆரியமத நூல்கள் சுமார் 3000 ஆண்டுகளுக்குமுன் ஆக்கப்பட்டவை என்று இந்நூல் கணித்துக் கூறுகிறது.

வேதங்கள்

வேதங்கள் இந்திய நாட்டு அரசியல வரலாற்றை அறிய துணையாகவில்லை, மத- கலாசார வரலாறுகளே காணப்படுகின்றன, எனவே மக்களின் பழைய வரலாறு யூகத்தால் தான் அறியவேண்டியுள்ளது - இந்த யூகக் கருத்துக்களோ பலர் பலவாறாக வெளியிட்டுள்ளனர். அவை பலவகைச் சந்தேகங்களுக்கும் இடமளிக்கின்றன.

பிற்கால சரித்திரக் குறிப்புகளிலும் புராணங்கள் ஊடுருவி மெய்வரலாற்றைக் கணித்தறியவியலாது செய்துள்ளன. ஆந்திரர் ஆட்சி முடிவுக்குமுன் 3000 ஆண்டுகளின் நாட்டு வரலாறு, சிலைகள், கல்வெட்டுகள் ஆகியவற்றைச் கொண்டே யூகிக்க வேண்டியுள்ளது''

என்று இந்நூல் கருத்துத் தெரிவிக்கிறது. எனவே இந்த புராண வரலாறுகளும் வேதக்கூற்றுகளும் பிராமணீயக் கருத்துக்களும் சரித்திர ஆதாரமற்றவை என்பதாகிறது.

அதாவது, சாதாரண நாவல்கள் கட்டுக்கதைகள் என்றுதான் தீர்மானிக்கச் செய்கிறது. ஆரிய மதக் கூற்றுக்கு ஆதாரமாக இருந்த சரித்திர ஏடுகள் நாசமாகி விட்டதாகவும் — கடலுண்டுவிட்டதாகவும் கூறப்படும் கூற்றுகளும் வெறும் "புராணப் புளுகு"களே வாகின்றனவென்பது இந்நூலில் சுமார் 100 பக்கங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள கருத்துக்களால் எண்ணச் செய்கிறது.

என்சைக்ளோ பிரிட்டானிக்காவின் விளக்கம்

வேதம் என்றால் அறிவு-ஞானம் என்பதே பொருள். இந்த வேதங்கள் சுருதிகளைக் கொண்டவை. சுருதி என்றால் கேட்கக்கூடியது என்றே பொருள்.

(இசைக் கருவிகள் இப்போது இசை சுருதி-(சுதி) கூட்டப்படுவது அறிந்ததே.) பிராமணமத பிரமாணங்களை (கொள்கைகளை)க் கொண்டதே இது. இந்த வேதம் நான்கு.

1. ரிக்வேதம்.
2. சாமவேதம்.
3. யஜுர்வேதம்.
4. அதர்வவேதம்.

இவைகளில் பல கடவுள்களின் (தேவர்கள்) பெயர்கள் காணப்படுகின்றன.

பிராமணன் என்றால் தலைமைப் பூசாரி. வேதச் சடங்குகளில் தலைமை வகித்து கண்காணிப்பது இவர்கள் பொறுப்பு. இவர்களுக்குத் தனி வேதநூல் கிடையாது. மற்ற முப்பிரிவு பூசாரிகளின் வேதங்களை அறிந்து அதற்கான நடைமுறைகளைக் கவனிப்பதே இவர்களுக்கு வேலை. பூசாரிகளில் பிராமணர் நான்காம் பிரிவினர். பிராமணர்களே பிரமாணங்களைத் தோற்றுவித்துக் கொண்டனர்.

இந்தப் பிரமாணங்கள் அரண்யகா உபநிஷத்துகள் என்ற பிரிவினதாகும். அரண்யகா என்றால் காட்டுக்கு சம்பந்தமான நிகழ்ச்சி முறைகள் என்று அர்த்தம். அதாவது வனவாசிகள் (சந்நியாசம், துறவு கொண்டவர்கள்) அறிந்துகொள்ளவேண்டிய அல்லது படிக்க

வேண்டிய மத நூல் மதச் சடங்குகளே இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. உபநிஷத்து என்பது தத்துவநூல், அதாவது கோட்பாடு விளக்க நூல். இது யூகக் கருத்துக்களையே பெரும்பான்மை யாகக் கொண்டது.

வேத வரிவடிவம்

இந்த வேதங்கள் பிற்காலத்தில்தான் வரிவடிவில் எழுதப்பட்டன. அதற்குமுன் வாய்ப்பாட்டாகவே இருந்துவந்தன. எனவே வாய்ப்பாட்டில், பரம்பரைக்குப் பரம்பரை பற்பல வேறுபாடுகள் ஏற்பட்டன. அவ்வக் காலத்தவர் தத்தமது விருப்பு வாய்ப்புக்கேற்ப, பற்பல சுலோகங்களைத் தொகுத்துச் சேர்த்துவிட்டனர்.

இவ்வித இடைச்செருகல்கள் ஒன்றுக்கொன்று வேற்றுமை கொண்டுமுள்ளன. இவைகளுக்கு சகா அல்லது உட்பிரிவு எனப் பெயர்கொடுத்து வேதங் களுடன் சேர்த்துவிட்டனர். இந்த இடைச்செருகல் ஒரு காலத்தில் ஏராளமாக இருந்தன. ஆயினும் காலப் போக்கில் இவற்றில் சிலவே உயிர்பெற்று நீடித் திருந்தன. பிற்காலத்தில், வியாகர்ணங்கள் அல்லது விரிவுரைகளும் தோன்றின. எனவே எது சரியான வேத சாகித்தியம் என்றோ, எது சரியான கருத்து என்றோ பிற்காலத்தவர்கள் அறியமுடியாதபடி குழப்ப மடைய வேண்டியதாயிற்று. மற்றும் சடங்குகளின் பெயராலும் பற்பல சாகித்தியங்கள் தோன்றின. வேத மொழிகளும் உருமாற்றமடைந்தன. பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பிரிவுகள் வேதாகமங்கள் என்ற பெயரில் வழங்கப்பட்டன. சோதிடம், நாட்டியம், இலக் கணம், இசைக்கலை முதலியவையும் பிற்காலத்து வேதங்களோடு சேர்க்கப்பட்டன.

இந்த நான்கு வேதங்களும் ஒன்றன்பின்னொன்றாய் காலப்போக்கில் தொகுக்கப்பட்டனவென்றே அவற்றின் மொழி—நடை நிலவரங்களால் அறியக்கிடக்கிறது. அதாவது இந்நான்கிலும் சொல்—வாசக அமைப்புகள் மாறுபட்டுள்ளன.

சமஸ்கிருத இலக்கியம் பிற்காலத்தில் செய்யப் பட்டதே. இந்த இலக்கியம் எப்போது ஏற்பட்டதென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை.

வேதக் கோட்பாடுகளை பொதுமக்களுக்குக் கற்பிக் கும் நோக்கத்துடன் இந்த இலக்கியத்துறை தோற்று விக்கப்பட்டிருக்கவேண்டும்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் பல்வேறு மொழிகளிருந்தனவென்று தெரிகிறது. இம் மொழிகள் சமஸ்கிருத மொழிக்குப் பெரிதும் மாறு பட்டவை.

கவுதம புத்தர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் தமது கோட்பாடுகளைப் பரப்ப மகத (பீகார்) நாட்டு மொழி யையே கையாண்டிருக்கிறார். இந்தோ ஆரியர்கள், பல பிரிவினராக இந்தியாவுக்குள் நுழைந்தபோது இந்தி யாவில் ஒன்றுக்கொன்று சற்று மாறுபட்ட பலமொழிகள் இருந்திருக்கின்றன.

ஆரிய மொழி ஆதிக்கம் தணிந்ததும் இம்மொழிகள் மீண்டும் புத்துயிர் பெற்று வழக்கிற்கு வந்திருக்க வேண்டும்.

இதில் ஒரு முக்கிய விஷயம் கவனிக்க வேண்டும். நாட்டு மொழிகளுக்கு கலை, அவ்வவ்மொழியில் இலக் கியம் கற்பிக்கப்படுவது உலக நாடுகளில் நடக்கும்

வழக்கம். ஆனால் சமஸ்கிருதம் நாட்டு மக்களிடையே இடம் பெறவில்லை. நாட்டு மொழிகள் சமஸ்கிருதத்தி லிருந்து ஒதுங்கி தனித்து வளம் பெற்றிருந்தன. இதற் குக்காரணம் என்ன வென்றால் புத்தமத காலத்தில்தான் சமஸ்கிருத இலக்கண இலக்கியம் தொகுக்கப்பட்டது என்பதாகும்.

அக்காலத்தில் பவுத்த மதத்தினர் நாட்டு மொழி (பாலி) வளத்திலும் இலக்கியத்திலும் அதிகக் கவனம் செலுத்தி நாட்டு மொழிக்குப் பொது மக்களிடையே அதிக செல்வாக்கும் ஆதரவும் பெறச் செய்தனர். (இவை என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்காவில் காண்பவை.)

ஆதி மனிதர்

ஆரியர்கள், தாங்கள் தான் முதல் முதல் 'கடவு'ளிட மிருந்து உற்பத்தியானதாகவும், 'பிரம்மா' தங்கள் மூதாதை யென்றும், பிரம்மாவின் அடியாகத்தான் அவருடைய நேர்வழி சந்ததியாரான தங்களுக்கு பிராம ணரென்று இன பட்டப்பெயர் கிடைத்தது. என்றும் உரிமை கொள்கின்றனர், பார்ப்பனர். இந்தக் கூற்றை யும் பொய்யாக்குகின்றது, முன்ஷி-பிர்லா—ராதாகிருஷ் ணன்-வெங்கட்ராம சாஸ்திரியார்களைக் காப்பாளர்க ளாகக் கொண்ட இந்த "**பாரதிய இதிகாச சமீதி**" என்ற பார்ப்பனச் சமூகம் தொகுத்துள்ள இந்த நூல்.

தென்னிந்தியாவின் கீழ்க்கரை வட்டாரங் களின் சீதோஷ்ண நிலைமையையும் மண் கண்ட வரலாற்றையும், வடமதுரை (ராம னாதபுரம் மாவட்டம்)யில் கிடைத்துள்ள கட்டிடம் முது மக்கள் தாழிப் பொருள்கள் ஆகியவற்றையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து,

ஆதிமனிதர் தென்னிந்தியாவில்தான் முதல் முதல் தோன்றி; பின்னர் நாளடைவில் (பனியுக முடிவில்) வடக்கு முகமாகப் பஞ்சாப் முதலியவைகளுக்குச் சென்றனர், என்று இந்நூல் (பக்கம் 132) கணித்துக் கூறுகிறது. எனவே,

ஆரியப் பார்ப்பனர், கடவுளின் நேர் வார்சுதாரர்கள் என்பது பொய்யாகிறது. மற்றும் தாங்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்ததால் தலைமைச் சிறப்புக் குரியவரென்றும் மற்றவர்கள் பிரமாவின் காலிலும் உடலிலும் இருந்து பிறந்தவர்களாகையால் தங்களை விடத் தாழ்ந்த பிறவிகளென்றும், பார்ப்பனர் கூறும் கூற்றும் கந்தப் புளுகென்பதும் இதனால் வெட்ட வெளிச்சமாகிறது.

தமிழின் தொன்மை

மொழித்துறையில் இந்நூலாசிரியர்களின் ஆராய்ச்சி —ஆழப்பாயவில்லை போலும்—அல்லது தங்கள் வட மொழிக்கு சிறப்புத் தர எண்ணினர் போலும். தமிழ் தொன்மை மொழியல்ல — அதாவது "தமிழுக்கு எழுத் துருவம் முற்காலத்தில் கிடையாது. அசோகர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் 'பிரம்மி எழுத்துக்கள் தான் இந்நாட்டில் முதல் வரிவடிவம், தமிழ் தெலுங்கு கன்னட மலையாள எழுத்துக்களும், பிற வடக்கத்தி மொழி எழுத்துக்களும் இந்த பிரம்மி எழுத்துக்களின் அடிப்படையில் சித்தரித்துக் கொள்ளப்பட்டவை" என்று தீட்டியுள்ளார். இக்கூற்றும் ஆதாரமற்ற தென்பது, தமிழ் நாட்டிலுள்ள பழைய கல்வெட்டு களும் புதை பொருள் கண்டுபிடிப்புகளும் தீர்ப்புக் கூறும்.

அசோகர் காலத்தில் மாத்திரமல்ல—புத்தர் காலத்திலும் திராவிட மொழிக்கு எழுத்துருவமுள்ள தென்பதற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் பற்பல உள்ளன. சிந்துவில் காணப்படும் மோகஞ்சதாரோ கல்வெட்டுகளிலும் ஆதாரமிருக்கின்றன.

'பிரம்மி' என்பது தமிழ் எழுத்து உருவத்தைத் தழுவிய வடமொழி என்று கூறலாமே தவிர, தமிழ் மொழி வடமொழிகளின் உருவத்தைச் சுவீகரித்துக் கொண்டதென சாதிப்பது, ஒரு சில குழுவினரின் சுயநல வாதமேயாகும்—அதாவது தென்னாட்டார் அநாகரீகர்கள், எழுத்தறிவற்றவர்கள் என்று சாதிக்கச் செய்யும் மூடுமந்திரமேயாகலாம்.

வட்டெழுத்து

தமிழின் ஆதி எழுத்துக்களுக்கு வட்டெழுத்து என்பர். 1837-ல் ஓர் ஆங்கிலப் புலவர் இந்திய எழுத்துக்களை ஆராய்ந்து உருவம் நிர்ணயித்ததாகவும், அதன் பின்தான் இந்திய மொழிகளின் உருவம் தீர்மானமாக நிர்ணயிக்கப்பட்டதாகவும் இந்நூலில் காணப்படுகிறது. இதிலிருந்து தமிழுக்கும் பிரம்மி எழுத்து சார்பான உருவம் தீட்டி ஆதிதமிழுருவமே மறைக்கப்பட்டிருக்கலாமெனவும் எண்ண இடமளிக்கிறது. வள்ளுவர் காலம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னென்பர். அப்போதே வள்ளுவர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு குறளை எழுதி வைத்தாரென்பது மெய்மை. எனவே தமிழ்மொழி அசோகர் காலத்தில்தான் வரிவடிவம் பெற்றதென இந்நூல் குறிப்பிடுவது தவறாகும். அசோகர் காலத்திற்குப் பின்போ அல்லது 1837-க்குப் பின்போ தமிழ் புது உருவம் பெற்றதென்றால் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளப்படலாம். இந்தப் புது உருவமும் தனித் தமிழ் உருவத்திற்கு ஏற்பட்ட மாற்றமல்ல. சில

வைஷ்ணவ நூல்கள் எழுதப்பட்டுள்ள கிரந்தமொழி என்பதைத்தான் இவர்கள் தமிழ் என்று கருதிக் கொண்டு, பிரம்மிமொழியடியாக வந்ததென்று சாதிக் கின்றனர் போலும். இந்த கிரந்த எழுத்துக்களே ஓரளவுக்கு வடமொழி உருவிலும் உச்சரிப்பிலுமுள்ளன.

சமஸ்கிருதம் மக்களின் ஆதரவு பெற்ற தொன்மை மொழியல்ல என்பதற்கு இந்நூலே சான்று தருகிறது.

அதாவது, "குப்தர் ஆட்சிக் காலத்திற்கு முன் னிருந்த கல்வெட்டுகள் 1600 கிடைத்துள்ளன. இவை களில் எழுதப்பட்டுள்ளவைகளில் 95 சதவிகிதத்திற்கு மேல் பிராக்கிருத மொழியிலுள்ளன. (பிராக்கிருதம் திராவிட மொழியிலிருந்து உண்டானதென சில மேனாட்டு ஆராய்ச்சியாளர் கருத்து) சமஸ்கிருதம் அவ்வளவு காணோம்" என்கின்றனர்.

ஆகவே குப்தர் ஆட்சியிலேயே சமஸ்கிருதம் செத்த மொழி என்பதும், சமஸ்கிருதமும் வேதங்களும் மதிப் பற்றுப் போயின வென்பதும், இலக்கிய உலகமும் சமஸ்கிருதத்தை மதிக்கவில்லை என்பதும் தெளிவு படுகிறது.

இதே மூச்சில் மற்றொரு உண்மையையும் இவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அதாவது வட இந்தியாவில் ஆரிய மொழிகளும் நாகரீகமும் அதிகமாக ஆதிக்கம் கொண்டிருந்தாலும், தென்னிந்தியாவில் ஆரிய நாகரீக மும் மொழியும் அதிகம் பரவவில்லை யென்கின்றனர். எனவே வடமொழியிலிருந்து தென்மொழி யுண்டான தாகக் கூறுவதும் ஆதாரமற்றதாகிறது.

ஆயினும் வடமொழியாளர்கள் சும்மா இருக்க வில்லை என்றும், தமிழ் மொழியில் சமுதாயத் துறை

களில் பங்கு கொண்டு அவற்றை ஆதரித்து கைக் கொண்டவர்களைப் போல் நடித்து இடையிடையே ஆரியப் பண்புகளையும் வடமொழி இலக்கணங் களையும் கருத்துகளையும் தென்னாட்டு மக்களிடையே —சமுதாய சம்பிரதாயங்களிடையே—மொழி இலக் கியத்துறைகளிலே புகுத்தி விட்டனர் என்பதை இந்நூலாசிரியர்களும் ஒப்புக்கொள்கின்றனர். அதாவது தென்னாட்டு - மொழி பழக்க வழக்க கோட்பாடுகள், வடக்கத்தி முறைகளினால் பிற்காலத்தில் பெரும் மாறுதலுற்றன வென்கின்றனர். தென்னாட்டு மொழி வகைகள் ஓரளவுக்கு மாறுதலுற்றுள்ளனவே யன்றி அடியோடு மறைந்துவிடவில்லை என்று இவர்கள் ஒப்புக்கொள்வதிலிருந்து தமிழகத்திற்குத் தனிமொழி யும் வரிவடிவும் நாகரீகமும் இருத்தல் வேண்டுமென் பதும் உறுதிப்படுகிறது.

வடக்கில் தமிழ்

திராவிடர்கள் ஒரு காலத்தில் மத்திய இந்தியா விலும் — வடயிந்தியாவிலும் — மேற்கிந்தியாவிலும்— கிழக்கிந்தியாவிலும் ஓரளவுக்குப் பரந்து வாழ்ந் தனர் என்பதற்கு இந்த வட்டாரங்களிலேயே ஆதாரங்களுள்ளன. பலுஜிஸ்தானிலுள்ள 'பிராச்யீ' மொழி திராவிடமொழியே. மற்றும் வடஇந்தியா வில் பல ஊர்களின் பெயர் திராவிடப் பெயர் களாகவுள்ளன. மற்றும் ஆரிய வேதங்களிலும் திரா விடச் சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. எனவே ஆரிய மொழியும் திராவிட மொழியைத் தழுவி மாற்ற மடைந்து திராவிடமொழிகளிலும் கலந்து இப்போதைய திராவிட மொழிகளின் புது அமைப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்"

என்று இந்நூல் சுட்டிக் காட்டுகிறது. (பக்கம் 155) எனவே சமஸ்கிருதமே திராவிட மொழியைத் தழுவி

உருமாற்றமடைந்தது என்பது ஒட்புக்கொள்ளப்பட்டதாகிறது.

இந்தத் திராவிடப் போர்வை போர்த்த சமஸ்கிருத மொழிப் புலவர்கள் தான், தமிழ் மொழியில், வடமொழிப் பண்புகளை அதிகம் நுழைத்து தெலுங்கு கன்னட மலையாள மொழிகளை உற்பத்தி செய்துத் திராவிடத் தாய்மொழியைப் பாகப்பிரிவினை செய்து விட்டனரென்பதும் புலனாகிறது. மற்றும் இப்போதையத் தமிழையும் பிற்கால உற்பத்தி என்றும் காட்ட முயற்சித்துளர்; அதாவது செந்தமிழ் என்ற பழந்தமிழ் திராவிட மொழியிலிருந்து உண்டான தென்கின்றனர், இந்நூலாசிரியர்கள். ஆனால் அந்தத் தாய்த் திராவிட மொழியென்பது யாதென இவர்கள் திட்டவட்டமாக அறுதியிட்டுக் காட்டவுமில்லை—காணவுமில்லை.

தமிழ், தாய்மொழியல்லவென்று மாத்திரம் சாதிக்க முற்பட்டுளர், சமஸ்கிருத ஹிந்தி காதலர்களான இந்த இதிகாசக் கழகத்தினர்.

தமிழ் மொழி

அடுத்தபடியாக தமிழ் என்பது கி. மு. முதல் நூற்றாண்டில் "Damiz" என்றும் அதற்குமுன் 'Dramiza' என்றும் இருந்ததாக இவர்களே ஒப்புக்கொண்டு, தமிழ் 'வடமொழி சார்பு பிற்கால சிருஷ்டி' என்று முற்கூறிய கூற்றை இந்நூலாசிரியர்களே மறுக்கின்றனர். இது பல ஆசிரியர்களின் கட்டுரைத் தொகுப்பாகையால் பல கருத்து வேற்றுமைகளிருக்கலாமென, முன்னுரையிலும் ஒப்புக்கொண்டுளர்.

"Drawila" – "Dramida" "Dravida" என்றும் கிறிஸ்துவ சகாப்தத்திற்கு முன் மாற்றமடைந்திருக்கலா

மென்கிறது இந்நூல். (பக்கம் 156) 'திராவிடர் ஏது' 'ஆரியர் ஏது' என்று வாதிப்பவர்கள் கூற்றை இந்நூலாசிரியர்கள் ஆதாரங்களுடன் மறுக்கின்றனர்.

வேத மொழிக்கு உதவி

வேதமொழியான சமஸ்கிருதம் வளம்பெற உதவியது திராவிட மொழிச் சொற்கள் என்றும், திராவிட உச்சரிப்புகளும் வேதங்களில் அதிகமுள்ளன என்றும், ஹிந்து நாகரீகத்திற்கு திராவிடர் ஏராளமாக உதவியுள்ளனரென்று இந்நூலில் விவரிக்கிறது.

எனவே, திராவிடர் அநாகரீகர்-காட்டுமிராண்டிகள் ராட்சதர்கள்-வானரங்கள்-கரடிகள் என்று இராமாயண இதிகாசங்களில் வர்ணித்திருப்பது துவேஷத்தால்—அதாவது சாதாரணமான மக்கள் தமது எதிராளியைத் திட்டும்போது எவ்விதம் வர்ணிப்பார்களோ, அவ்விதமும், எவ்விதச் சொற்களைக் கையாள்வார்களோ, அதே சொற்களே வேதங்களிலும் புராணங்களிலும் ஆரியர்கள். தங்கள் எதிரிகளான திராவிடர்கள் விஷயத்தில் கையாண்டிருக்கின்றனர் என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆரியரைவிட திராவிடர்களே கலையறிவும், சிறந்த பண்புகளும் மிகுதியாகக் கொண்டிருந்தனர் என்றும் தீர்மானிக்கின்றனர். (பக்கம் 156-157)

மொகன்ஜதாரோ, ஹரப்பா வட்டாரங்களில் வாழ்ந்த ஆரியருக்கு முன்னைய மக்கள்—அக்கால நாடோடி ஆரியர்களைவிட சிறந்த கலாசார அறிஞர்கள் என்று இந்நூல் தீர்ப்பளிக்கிறது. மற்றும் திராவிடர்கள் இயற்கைச் சக்தியைத்தான் தாயாக வணங்கினர் என்கின்றனர் திராவிடர்களுடைய கோட்பாடுகள் உலகவாழ்க்கையைப்பற்றி ஆழ்ந்த நுணுக்கக் கருத்துக்கொண்டிருந்தனவென்றும், ஆரியர்கள் வெறும் ஆகாயத்தையே அண்

ணாந்து பார்த்து ஆகாயத்தையே பிரார்த்தித்து; அதாவது ஆகாயத்திடம் உதவிகோரி முறையிட்டு வந்தனர் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (பக்கம் 158)

இதிலிருந்து திராவிட மக்கள் உலக வாழ்க்கை யின்பத்தைத்தான் பெரிதும் விழைந்து, அதற்கான உலக வழிபாடு முறைகளையும் கொள்கைகளையும் கைக்கொண்டு வந்தனரென்பதும்; ஆரியரே வானுலகத்தையும் மோட்ச நரகத்தையும் கற்பனை செய்துக் கொண்டு அந்த வானுலக அருளை எதிர்பார்த்து ஏங்கித் தவித்தனரென்பதும் புலனாகிறது. தெளிவுறக் கூறிமிடத்து, திராவிட மக்கள் உலக நல்வாழ்வுக்கோட் பாட்டினராகிய தங்கள் சொந்த உடலுழைப்பில்—அறிவுழைப்பில் நம்பிக்கைக் கொண்டு ஆக்கத் துறைகளில் ஈடுபட்டு, கலைவளம் பெற்றிருந்தனரென்பதும், ஆரியர் உடலுழைப்பையும்–அறிவுழைப்பையும் விடுத்து கற்பனையில் இன்பத்தையடைய எண்ணி, அதற்கான கோட்பாடுகளைக் கற்பித்துக் கொண்டு, பிறர் உழைப்பில் தங்கள் உடல் வளர்ச்சிக்கு வழி செய்து கொண்டன ரென்பதும், இவ்விதம் பிறருழைப்பைப் பெற வானுலகக் கோட்பாடுகளைப் பரப்பியும், அச்சுறுத்தும் சொற்கள் பொதிந்த வேத—சமஸ்கிருத அடுக்கு மொழிகளை ஒப்புவித்தும் வந்தன ரென்பதும் தெளிவுபடுகிறது.

Termilai — Trmmili — Dramiza — என்று மாற்றங்கள் பெற்ற சொல்லே பிற்காலத்தில் தமிழ் (Tamil) ஆயிற்றெனவும் இவர்கள் விரிவுரை காண்கின்றனர். (பக்கம் 1; 8)

கிரேக்கர் படையெடுத்து வந்தபோது, தென் சிந்து வட்டாரத்தில் அரபிதை (Arabitai) என்ற மக்கள்

வசித்தனரென்றும், இவர்கள் கி. மு. 4-வது நூற்றாண்டில் வசித்த திராவிட மொழியாளரே என்றும் 'அரவலு' என்று தமிழரைத் தெலுங்கர்கள் குறிப்பிடுவது இதற்கு ஆதாரமாக உள்ளதாகவும் இந்நூலில் விளக்கம் தரப்படுகிறது. (பக்கம் 159)

பிற அறிஞர்களின் ஆதாரங்கள்

பிஷப் கால்டுவெல் எழுதிய வரலாற்றில் பழந்தமிழர்கள், நாடு நகரங்களில் வசித்துச் சிறந்த படிப்பறிவு மிக்கவர்களாகவும்; எழுத்தும் வரி வடிவும் கற்று, இறகு கொண்டு ஓலையில் எழுதி வந்ததாகவும், நீதிபதிகளும் நியாயவாதிகளுமில்லாமலேயே தங்களுக்குள் மக்களாட்சி நடத்தி வந்ததாகவும் எழுதியிருக்கிறார்.

திரு. பி. டி. சீனிவாசய்யங்காரும் திராவிட மக்கள் பழங்காலத் தமிழர்கள் ஆரியருக்கு முன்பே சிறந்த நாகரீகக் கலாச்சார அறிவாளர்களாகத் திகழ்ந்தனர் என்று ஆதாரங்கள் தந்திருக்கிறார்.

பார்ப்பனர் பூசாரிகளான இரகசியம்

ஆரியர்களின் ஆகம நிகம (வேதம்) கோட்பாடுகளெல்லாம் ஆகாய வணக்கத்துக்கானவையேயாகும். அதாவது நெருப்புப் புகையின் மூலம் ஆகாயக்கடவுளின் அருள் வேண்டி நின்றனர். திராவிடர்கள் நடத்தியதோ பூசைகள். இது இவ்வுலக வாழ்க்கையைத் தழுவிய வழிபாடு முறையே. **பூ—அணிதல்-பூசுதல் என்ற அடிப்படையாக வந்ததே பூசை.** இம்முறைகள் அறிவுக்கும் நடப்புக்கும் ஒத்தனவாக விருந்தன. பிற்காலத்தில் ஆரிய—திராவிட கோட்பாடுகள் கலப்பட முறையால் ஹிந்து மதம் தோற்றுவிக்கப்பட்டது. உண்மை ஆரியர்கள் என்று கூறிக்கொள்ளும் பார்ப்

பனர்களும் கற்றவர்களும் திராவிடர்களின் பூசை முறை களைக் கைப்பற்றித் தமக்கு முழு உரிமையாக்கிக் கொண்டனர். இதற்குமுன் ஆரியர்களிடையே இந்தப் பூசை முறை கிடையாது. பிற்காலத்தில்தான் திராவிட முறைகளை கற்றுக் கொண்டு பூசாரிகளாகிப் பிழைப் புக்கு வழி செய்துக் கொண்டனர். ஆரிய முறைகளான ஹோமம் முதலியன இந்தப் பார்ப்பனர்—க்ஷத்திரியர் என்பவர்களிடையே, பெயரளவில்தான் இருந்து வருகின்றன.

பூசை முறைகள்

மகாபாரதத்தில் வரும் பகவத் கீதை கிறிஸ்து வாழ்ந்த காலத்தில்தான் தொகுக்கப்பட்டிருக்க வேண்டு மென இந்நூல் ஆராய்ச்சிகளில் காணக்கிடக்கிறது. கீதையில்தான் இந்த பூசையைப்பற்றி முதல்முதல் குறிப்பிடப்பட்டுளது. (பக்கம் 161) எனவே, பிச்சைக்கு வந்தவர்கள் பெண்ணுக்கு மாப்பிள்ளையான கதை போல் ஆரியப் பார்ப்பனரும் திராவிடப் பூசை முறை களை அறிந்துகொள்ள வந்தவர்கள் அந்தப் பூசாரித் தொழிலையே தமக்குப் பரம்பரைப் பாத்தியமாக்கிக் கொண்டு பூசை நடத்தத் தனியிடங்கள்—கோயில்கள் அமைக்கச் செய்து அந்த இடத்தை அமைத்துக் கொடுத்தத் திராவிட மக்களும் அந்த இடத்துக்குள் அண்டாதபடி; 'கடவுளை' அண்டத்தகாதவர்களாகவும், கடவுள் உருவத்தைத் தீண்டத் தகாதவர்களாகவும் ஆக்கி, சர்வ பாத்தியக் கடவுள் தரகர்களாகி விட்டனர். ஆரிய தீப்புகை விளக்க நூலான வேதப் பாடலும், இந்தப் பூசைக்கான பாடலொன்றைச் சமஸ்கிருத மொழியில் தொகுத்து நுழைத்துக்கொண்டு விட்டனர். திராவிடர் அமைத்துத் தந்த சிற்பங்களைக் கடவுளின் உருவங்களாக்கி அவற்றைக்காண அந்தத் திராவிட ரிடமே கைக்காசு பெறலாயினர். இதேபோல் மக்கள்

வணங்கிய இயற்கைச் சக்திகளுக்கு ஆரியர்கள் சமஸ்கிருத சொற்களில் புனைப் பெயர்களளித்துத் தங்கள் கடவுள்களாக்கிக்கொண்டு பூசை நடத்திப் பிழைக்கலாயினர். முன்னர் அந்த சக்திகளை வணங்கி வந்த மக்களும் பார்ப்பனர் கற்பித்த அந்த சக்திகளின் உருவங்களை நேரிடையாக அணுகாதபடி செய்துவிட்டனர். இவ்வகையில் ஆரிய வழிபாடுமுறையைக் கைவிட்ட பார்ப்பனர்கள், பிற மக்களின் வழிபாடு முறைகளை ஆக்கிரமித்து, தங்களுடைய முழுஉரிமைச்சொத்தாக்கிக் கொண்டனர் என்பது இந்நூலில் காணும் ஆராய்ச்சி மெய்ம்மைகளால்—அறியக் கிடக்கிறது.

"இந்தியர் கலாச்சாரத்தில் முக்கால் பங்கு, ஆரியருக்கு முன்னைய மக்களின் கலாச்சாரப் பண்புகளாக இருக்கின்றன. மற்றும் இந்துக்களின் உணவு வகையும், ஆதி ஆரியர்கள் உண்ட உணவுக்கும் மாறுபட்டுள்ளது. ஆரியர்கள் கம்பளி உடையணிந்தவர்கள். இந்தியர்களோ பருத்தியுடையும் வேட்டியும் அணிகின்றனர்.

திராவிட முறைகளே

மற்றும் கொள்கை நடைமுறைகளும் பெரும் அளவுக்குத் திராவிட முறைகளை தழுவியிருக்கின்றன." (164)

என்று இந்நூலில் சுட்டிக் காட்டியிருப்பதால்; ஆரியர் திராவிடரை விட சிறந்த அறிவாளிகள் என்றோ நாகரீகக் கலா வல்லவர்களென்றோகூறுவது ஆதாரமற்றதாகிறது. திராவிடக் கலாச்சார பழக்க வழக்க முறைகளைத்தான் ஆரியர் சுவீகரித்துக்கொண்டு தங்கள் கோட்பாடுகளுக்கேற்றபடி மேல் மூச்சு மாற்றங்கள் செய்து தங்களுடைய சொந்தம் ஆக்கிக்கொண்டனர் என்பதே ஆராய்ச்சித்தீர்ப்பாகிறது. பிற்காலசமஸ்கிருதம்

பெரும் அளவுக்குத் திராவிடமொழிச் சார்பினதாகவும், வேத மொழிக்கு அதிகம் மாறுபட்டதாகவு மிருப்பதால் இப்போதைய சமஸ்கிருதம் திராவிட மொழியிலிருந்து ஆக்கிக்கொண்ட இருபிறப்பு மொழியேயாகும்; தனித் தாய்மொழி என்றோ ஜீவமொழி யென்றோ பார்ப்பனர் கூறுவது போல் 'தெய்வமொழி என்றோ கூறுவதற் கில்லை. இந்த 'சுவீகாரத்தை மறைக்கத்தான் அந்த சமஸ்கிருதத்தை திராவிடர்கள் படிக்கக் கூடாதென்றும் படித்தால் "தெய்வக் கோபமும் தோஷமும் பாபமும்" ஏற்பட்டுவிடுமென்றும் பயமுறுத்தி; அதன் வண்டவா ளத்தை மறைத்து வந்தனரெனவும் எண்ணச் செய்கிறது. **சிந்து மொழி எழுத்துக்கள் இந்தியாவில் பிறந்து வளர்ந்த தனிமொழி** எழுத்துக்களென்கின்றார் திரு. இராமச்சந்திர தீட்சதர். சிந்து மொழியென்பது சிந்து சமவெளியில் ஆரியருக்கு முன் வாழ்ந்த மக்கள் மொழி ஆரியருக்கு முன் தமிழரே அங்கு வாழ்ந்தனரென்பது மோகஞ்சதாரோ கல்வெட்டுகளால் அறியக் கிடக்கிறது.

எண்ணும் எழுத்தும்

எழுத்து மாத்திரமல்ல எண்ணும் திராவிட அடிப் படையாகக் கொண்டதுதானென இந்நூலாசிரியர் விளக் குகிறார்.

'எட்டு' என்பதை அடிப்படையாகக் கொண்டதே. எண். எண்-எண்ணுதல், திராவிடமொழி. இது வட மொழிகளிலும் மற்ற திராவிட மொழிகளிலும் பொதுப்படையாகவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

புராணங்கள் உற்பத்தி ரகசியம்

"ஆரியர்களுக்கு முன்னிருந்த ஆஸ்ட்ரிக்குகள்; திராவிடர்கள் ஆகியவர்களிடையே வழங்கி வந்த வீர

வரலாற்றுக் கதைகளையே ஆரியர்கள் பிற்காலத்தில் கைக்கொண்டு, பல்வேறு மாறுபாடுகளுடனும் ஆரியக் கடவுள்களின் பெயர்களையும் ஊர் நாடுகள் ஆகிய வற்றின் பெயர்களையும் கொடுத்து ஆரிய மொழியில் எழுதிக்கொண்டுவிட்டனர்.

இவ்விதமாக ஆரியக் கடவுள்கள், முனிவர்கள், அரசர்கள் ஆகியவர்கள் பெயரில் மாற்றியமைக்கப்பட்ட பழைய திராவிடக்கதைகளே புராணங்களில் காணப் படுவன.'' என்று இந்நூலில் காணப்படுகிறது. (165)

இராமாயணம்

இராமாயணம், வெவ்வேறு மூன்று கதைகளைக் கொண்டு புனையப்பட்ட கதம்பமெனப் புலனாகிறது. இதற்கு சரித்திர அடிப்படை இல்லை. மற்றும் இம் மூன்று கதைகளும் வெவ்வேறு காலங்களில் புனையப் பட்டுப் பின்னர் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அயோத்தியா காண்ட வரலாறு—சீதை கவரப்பட்டதும் மீட்சியும்; கிஷ்கிந்தா காண்ட வரலாறு ஆகியவைகள் தனித்தனி வரலாறுகளெனத் தெரிகிறது. கிழக்கிந்தி யாவில், ஆஸ்ட்ரிக் மக்களின் கதையடிப்படையில் இது புனையப்பட்டு, பின்னர் இந்து நாகரிக விவரங்களுடன் காவியமாக்கப்பட்டதென்கின்றனர்.

மகாபாரதம்

மகாபாரதம் மேற்கு அய்க்ய மாகாணம், கிழக்குப் பஞ்சாப் வட்டாரத்தில் நடந்ததாகக் குறிப்பிடப்படு கிறது. இதில் ஆரிய வரலாறுகளும் ஆரியர், ஆரியரல் லாதார், கலப்பட மக்கள் வரலாறுகளும் காணப்படு கின்றன. ரிஷிகளெனப்படும் வேதியரின் வழி காட்டுதல் மீதே இந்த ஆரியர்—ஆரியரல்லாதார் கலப்பட இனவழ

லாற்றுக் கதையான சமஸ்கிருத பாரதம் புனையப்பட்டுள்ளது. எனவே இந்தப் புராணக் கதைகள் எல்லாம் ஆரியருக்கு முன்பு இந்நாட்டில் வாழ்ந்த பழங்குடி மக்களான திராவிடர் முதலியவர்களின் கதைகளை அடிப்படையாகக் கொண்டும், பழங்கதைகளிலுள்ள சாதாரண கதாநாயகர்களை தெய்வீக புருஷர்களாக சித்தரித்துக் காட்டியும், ஆரிய புராணக் கதைகள் இட்டுக்கட்டப்பட்டன வென்பது தெளிவுபடுகிறது என்று இந்நாலே விளக்குகிறது.

"இது பரதர்களின் போர் வரலாறு. இது ஒரேவித அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. இதில் பற்பல கதைகள் ஊடுருவியுள்ளன. இக்கதையை வியாசர் தொகுத்ததென்பர். **வியாசர் என்றால் தொகுப்பாளர் என்றே பொருள்** (கட்டுரைகள் தற்போது 'வியாசம்' என்று பள்ளிக்கூடங்களில் குறிப்பிடப்படுவது அறிந்ததே.)

குருகுலத்தார்—பாஞ்சாலர் என்ற இரு அண்டை நாட்டினருக்குள் நிகழ்ந்த போர் வரலாறுகளே இக்கதையாக இருக்கலாம் என்று கருதுகிறார் வாசென் என்பவர். இந்தோ-ஜெர்மானிய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாக (ஆரியர் இந்தியாவுக்குவருவதற்கு முன்) இருக்கலாமென்கிறார். டாக்டர் எ. ஹால்ட்ஸ்மன். ஆனால் எது உண்மை என்று இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

வியாசர், இந்த பாரதக் கதையைப் பாடுவதற்கு முன் குறிப்பிட்ட முகவுரையில், நானும் எனது சீடர்களும் 8800 ஸ்லோகங்களை அறிவோம் என்று குறிப்

பிட்டுள்ளார். இவ்விதம் ஆறிந்த பின்னர் அதைத் தொடர்ந்து பரதர்களைப்பற்றிய பாரதம் பாடினார் எனப்படுகிறது. ஆகவே "பாரதம்" தனிப் புராணம் என்றே எண்ணச் செய்கிறது. இவற்றில் கூறப்பட்டுள்ள வரலாறுகள் பலவும், ஒன்றுக்கொன்று சம்பந்த மற்றனவாகவும், தொடர்பற்றனவாகவும், கருத்து வேறுபாடுகள் கொண்டனவாகவுமுள்ளன. ஆகவே இதில் இடைச்செறுகல் அதிகம் பிற்காலத்தில் இடம் பெற்றிருக்க வேண்டுமென்று புலனாகிறது.

அதாவது பிராமணர்கள், தங்கள் தங்கள், இன-சாதி சுயநலக்கருத்தினால், பிற்காலத்தில் அவ்வப்போது பல கதைகளைத் தொடுத்து இந்தப் பாரதத்துடன் சேர்த்து விட்டனர்"
(என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா)

'ஆரியன்' என்பது ஓரினத்தைக் குறிப்பதல்ல. ஒரு மொழியின் பெயரே என்கிறார் மாக்ஸ்முல்லர். இதிலிருந்து ஆரியர் தாய்ப் (அடிப்படை) பெயரில்லாத குழுவினர் என்பதாகிறது. இந்தியா ஆரியரின் தாயகமல்லவென்றே எல்லாத் துறை ஆராய்ச்சிகளிலும் திட்டவட்டமாக அறியக்கிடக்கிறது. ஆரியருக்குமுன் இந்தியாவெங்கும் திராவிட மொழியே வழங்கி வந்ததென்பதற்கு, பலுஜிஸ்தானத்தில் ஒரு பகுதியினர் தமிழ்மொழி பேசுவதும் மற்றொரு சான்றாகும்.

அசுரர் பற்றிய உண்மை

அசுரர் என்றால் கெட்ட குணங்களைக் கொண்டவர்களென ராமாயணம் முதலிய சில புராணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இது துவேஷத்தால் கூறப்

படுவதேயாகும். தேவர்களைவிட அசுரர்களே நாகரீகத்தில் சிறந்தவர்களாக இருந்தனர் என்று ஆரியர் மத நூலான "பிரமாணங்கள்" என்பதில் பலவிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மற்றும் வேதங்களிலும் பல புராணங்களிலும் தேவர்களின் அண்ணன்மாரே அசுரர் எனக் காணப்படுகிறது.

வேதம்-பாடல் திரட்டு

ரிக்வேதம் வீரர் வரலாறோ சரித்திர வரலாறோ அல்ல. கடவுளுக்குப் பலியிடும்போது வேதியக்குழுவினர் பாடிவந்த பாடல்களின் தொகுப்பே இந்த ரிக் வேதம் என்பது. சாமவேதமோ வெறும் இசைப்பாடல்; யஜுர்வேதம் "மந்திர"ங்களின்(ஆள் பெயர்)தொகுப்பு:-யாகத்தின்போது உச்சரிக்கப்படுவன.

அதர்வண வேதம் சாதாரண மக்கள் கொண்டிருந்த கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் எடுத்துக் காட்டுவது. பிற்காலத்தில் இது பிராமண மதத்தில் சேர்க்கப்பட்டதாகும். ஆரிய வேத மதம் நீண்டகாலம் நீடித்திருக்கவில்லை என்றும், பின்னர் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்ப பலவித மாறுபாடுகளைக்கொண்டு இறுதியில் இந்து மதத்தில் கலந்துவிட்டதென்றும் தெரிகிறது.

ஆரிய மதப்பிரசாரகர்கள்

ஆரியர்கள் (பார்ப்பனர்) திராவிட மக்களைக் கொண்டே திராவிடர்களை ஒடுக்கும் தந்திரத்தை மேற்கொள்ளுபவர்களென்றும். ஆரியர்களுக்கு உதவியாகவும் ஆரியர்(பார்ப்பனர்)சிறப்புப்பெறத் துணைவர்களாகவும்

பார்ப்பனர்களின் தாசானுதாசர்களாகவும் அடியார்க்கு அடியார்களாகவும் இருந்த திராவிடர்களே, ஆழ்வார்களாகவும் நாயன்மார்களாகவும் ஆக்கப்பட்டனர் என்றும் 'விடுதலை'யிலும் பெரியாரவர்களும் பன்முறை எடுத்துக் காட்டியிருப்பது நினைவிருக்கலாம்.

இந்த உண்மையை இந்த நூலாசிரியர்களும் ஆமோதிக்கின்றனர். அதாவது "இராமனும் கிருஷ்ணனும் ஆரிய மதத்தைத் தென்னாட்டிலும் கிழக்கு வட்டாரங்களிலும் பரப்ப உதவி புரிந்ததால்தான் இவர்கள் பிற்காலத்தில் அவதார புருஷர்களாக பார்ப்பனரால் ஆக்கப்பட்டனர் என்கின்றனர். கிருஷ்ணனும் ஒரு அசுரனே (சூத்திரனே) என்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஒரு அசுரன் (சூத்திரன்) கடவுள் அவதாரமாக்கப்பட்டது ஆரியமதப் பிரசாரகனானதால்தான் என்பது தெளிவாகிறது. இதேபோல் இராமனும் பார்ப்பனன் அல்ல. அரசகுலத் தலைவன். இவனும் ஆரிய மதத்தைத் தென்னாட்டில் பரப்ப ஆரியப் பார்ப்பனரென்ற முனிவர்களுக்கு உதவி புரிந்ததால்தான் அவதார புருஷனாக்கப்பட்டான். பிராமணர்களுக்குதவியாகவும் முன்னணியாகவும் சென்று க்ஷத்திரியர் என்ற ஆரிய அரசகுலத்தார் தென்னாட்டில் வாள் முனையால் ஆரியத்தைப் பரப்பினர். இந்த க்ஷத்திரியரைத் தொடர்ந்துவந்த பார்ப்பனர்—முனிவர் பின்னர் தென்னாட்டில் தங்கி ஆரிய கலாச்சாரத்தைத் தென்னாட்டு மக்களிடையே பரப்பினர். (பக்கம் 314)

ஆரிய அரசர்களின் ஆதரவும் பாதுகாப்பும் இல்லாதிருந்தால் பிராமணங்களுக்கு (பிராமணர் மத ஏடுகள்) சக்தியற்றுப் போயிருக்கும். ராமன் போன்றார்களின் படையெடுப்பினால்தான் பிராமணமதம் தென்னாட்டில் வேர்பற்ற வழி ஏற்பட்டது. இந்த ஆரியக் கலாச்சாரத்தை இராமன் தென்னாட்டில் பரப்பி நடத்திய படை எடுப்புபற்றிய வரலாறே இராமாயணம். (பக்கம் 315)

உடன்பிறப்பு துரோக நாடகம்

தென்னாட்டில் ஆரிய கலாச்சாரத்தைப் பரப்பவந்த பார்ப்பனர்களில் (முனிவர்) முக்கியமானவர் அகஸ்தியர். இவர் இராமர் படையெடுப்புக்கு பல்லாண்டுகளுக்கு முன்பே தென்னாட்டை அடைந்து இராமர் படையெடுப்புக்கு வழிகோலியவர் என ஆராய்ச்சி நூல்கள் பகருகின்றன. **இராமாயணம் நெடுக உடன் பிறந்தார் துரோக நாடகமாகத்தானுள்ளது.** அதாவது திராவிட வீரர்களைக்கொண்டே திராவிட வீரர்கள் ஒழிக்கப்பட்டுள்ளனர்.

அண்ணன் தம்பிகளான வாலியையும் சுக்ரீவனையும் மோதவிட்டு, வாலியை ஒழித்துக்கட்டி சுக்ரீவனைத் தனக்குத் தாசனாக்கிக்கொண்டான் ஆரியப் பிரசாரகனான இராமன்.

அடுத்தபடி வாலியின்—(சுக்ரீவன் ஆக்கிரமித்துக் கொண்ட திராவிட மக்கள்) படையைக்கொண்டே இலங்கைமீது படையெடுப்பு நடந்தது. இலங்கையிலும் தம்பி விபீஷணனைத் தனக்கு துரோகக் கையாக்கிக் கொண்டு இராமன், இராவண மாவீரனை ஒழித்தான். அண்ணனை அயலான் ஒழிக்க உதவி புரிந்ததற்காக அந்த விபீஷணனுக்கு 'ஆழ்வார்' என்ற பட்டமளித்தனர் பர்ர்ப்பன மதத் தரகர்கள். ஆழ்வாரென்றால் என்ன அர்த்தம் என்று தெளிவுபடவில்லை. பக்தியில் ஆழ்ந்தவர்களென்கின்றனர் வைஷ்ணவர்கள். **பிராமண மதக்கோட்பாடுகளில் தமிழ்நாட்டை ஆழ்த்தியவர்கள் என்பது ஒருவாறாகப் பொருந்துமெனலாம்.**

பாகவதம்

வைஷ்ணவ மதத்தரகர்களின் உயிர்நூல் பாகவதம் என்பது இராமாயணமும் பாரதமும் வெறும் சண்ட

வரலாறுகளானதுபோல், இந்தப் பாகவதம் நெடுக கிருஷ்ணனின் காதல் விளையாட்டு விவரங்களைக் கொண்ட நூலாகவுள்ளது. உலக நலனுக்காக-மக்கள் முன்னேற்றத்துக்காக இந்த நூலில் என்ன சீர்திருத்தக் கொள்கைகள் உள்ளனவென்பது புலனாகவில்லை. ஆயினும் வேத மதத்தார்களின் துறவுக்கொள்கையை செல்லாக்காசாக்கி, இல்லறச் சிறப்பை மக்கள் உணரத் தீட்டப்பட்ட நூல் பாகவதம் எனின் ஒருவாறாகப் பொருந்தும், இந்தக் கிருஷ்ணனைப்பற்றிய வரலாறுகளும் ஒன்றுக்கொன்று இணைந்ததாகவில்லை.

துவாரகைக் கிருஷ்ணன் வேறு, பாகவதக் கிருஷ்ணன் வேறு, பாரதக் கிருஷ்ணன் வேறு என்றே ஆராய்ச்சியில் அறியக்கிடக்கிறது. கிருஷ்ணனும் ஒரு அசுரனே-அதாவது ஆரியனல்லாதவன். ஆரியருக்கு, முன்குடிகளான மக்களைச் சேர்ந்தவனெனவும் இந்நூலாசிரியர் கருதுகிறார். கிருஷ்ணன் ஆரியப் பார்ப்பனன் அல்லன் என்பதுதெளிவு ஏனெனில் அவன் யாதவர் குலத்தினன்.

அவதாரமா ?

ஆரியனல்லாதக் கிருஷ்ணன் ஆரிய வேதியரால் எப்படி அவதார புருஷன் ஆக்கப்பட்டான் எனக் கேள்வி எழுகிறது. இவனும் "விபீஷண"னாகி, ஆரிய மதப்பிரசாரங்களுக்கு—ஆரிய வேதக் கோட்பாடுகளை-பிராமண மதக் கொள்கைகளை இந்நாட்டில் பரப்பும் போர் நடத்தியதால்தான் இவனும் "அவதார"மாக்கப் பட்டான் என்பதும் இந்நூலில் காணக்கிடக்கிறது.

"கிருஷ்ணன், துவாரகையை யடைந்து இயற்கை வணக்கமுறையைப் பரப்பி வந்தான்" என்றும் இந் நூலில் குறிப்பிட்டுள்ளது, (299) இதிலிருந்து இந்த கிருஷ்ணன் வேறு, பாரதக் கிருஷ்ணன் வேறு; என்று

சந்தேகிக்கச் செய்கிறது. பாரதம் நடப்பதற்கு முன்பே கிருஷ்ணன் அவதாரமாக்கப்பட்டிருப்பதாகவும் இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.

பாகவதத்தையும்—கிருஷ்ணன் இயற்கை மதப் பிரசாரகன் என்பதையும் கவனிக்குமிடத்து, இந்தத் துவாரகைக் கிருஷ்ணன் பிராமண மத எதிர்ப்பாள னாகவுமிருக்கலாமெனச் சந்தேகிக்கச் செய்கிறது அப்படி யிருக்க இவன் அவதார புருஷனாக்கப்பட்டதன் ரகசியம் என்ன?

பிராமண மத எதிர்ப்பாளரான புத்தரை, எப்படி விஷ்ணுவின் அவதாரமென உரிமை கொண்டாடுகிறார் களோ அதே போலத்தான் இந்தக் கிருஷ்ணனின் "அவதார" ரகசியமும் இருக்கவேண்டுமென எண்ணச் செய்கிறது.

அப்படியாயின் கீதை, யாரால்; எப்போது உண்டா யிற்றெனக் கேள்வி பிறக்கலாம்.

கீதையின் முன்னுரையில் (துவக்க அத்தியா யத்தில்) ஒரு முனிவர் தன் சீடனுக்கு இந்தக் கீதையைச் சொல்லுவது போல அமைந்துள்ளது. எனவே இந்த முனிவர் அல்லது வேறொருவர் பிற்காலத்தில் இந்தக் கீதையை எழுதி, பாரதத்துடன் சேர்த்திருக்க வேண்டு மென, கீதையின் முதல் அத்தியாயம் எண்ணச் செய்கிறது.

கண்ணன் திருவிளையாடலும் பொய்

பாகவதத்திலுள்ள தெய்வீகங்களையும் இந்த முன்ஷியார் ஆராய்ச்சி நூல் பொய்யாக்குகிறது.

அதாவது சிறு குழந்தையான கிருஷ்ணன், கங்கை ஆற்றிலிருந்த பல தலைகளைக் கொண்ட பாம்புடன் சண்டை போட்டு அடக்கி அதை அதன் குடும்பத்துடன் விரட்டினான் என்கிறது பாகவதக்கதை. வைதீகக் குழுவினரான இக்கழகத்தார் தொகுத்துள்ள இந்த "வேதகால" ஆராய்ச்சி நூலில்; "கிருஷ்ணன் பிறந்த சில ஆண்டுகளில் நரிகளின் தொல்லைக்குப்பயந்து யாதவர்கள் கோகுலத்தை விட்டு பிருந்தாவனத்துக்குக் குடியேறினர். அங்கிருந்த நாகசாதித் தலைவனான காளிங்கன் என்பவனை கிருஷ்ணன் அடக்கி, அக் காளிங்கனையும் அவனுடைய இனத்தாரையும் வேறிடத்துக்குச் செல்லச் செய்து யாதவர்களை அங்குக் குடியேறச்செய்தான். (280) மற்றும் அங்குற்றதும் மக்கள் இந்திரயாக முறையைக் கைவிடச் செய்து இயற்கை வணக்க முறையைக் கைக்கொள்ளச் செய்தான்" என்றுள்ளது.

கிருஷ்ணனை அவதாரமாக்கியது மகாபாரதத்திற்கு முன்பே நிகழ்ந்திருப்பதாக இந்நூல் கருதுகிறது. (299)

பார்ப்பனர்- அரசமரபினர் சச்சரவு

பார்ப்பனர்களை விட, நாடாளும் குலத்தோர் (க்ஷத்திரியர்) உயர்ந்தவர் எனக் காட்டத்தான் புராணக் கதைகள் தீட்டப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால் இக்கதைகளைத் தீட்டியோர் முனிவர் என்ற ஆரியப்பார்ப்பன—வேதிய குலத்தவராதலின், ஆளும் மரபினர் சிறப்பைக் கூறுவதுபோல்; அச்சிறப்பின் மறைவிலே ஆரிய மதக்கோட்பாடுகளையும், வேதியர் சிறப்புக்களையும் நுழைத்தனர் என்பதே பொருத்தமாகும். ஏனெனில் "அரசன் எவ்வழியோ அவ்வழிக் குடிகள்" என்ற மெய்ம் மொழிப்படி, அரசர் வரலாறுகள் மூலம் ஆரியக்கொள்கைகளை, திராவிட மக்களிடையே பரப்பினர் என்பதே உண்மையாகலாம்.

மற்றும், இம்மகாபாரதம் உண்மை சரித்திர வரலாறா என்பதையும் இந்த நூலாசிரியர்கள் சந்தேகிக்கின்றனர். பிற்கால வேத நூல்களில் மகாபாரதம் பற்றிய குறிப்பு இல்லை என்றும்; இப்போது கிடைக்கப்பெறும் மகாபாரதம் பிற்காலத் தொகுப்பு என்றும்; இவர்களும் ஒப்புக்கொள்கின்றனர். இராமன் கிருஷ்ணனைப்பற்றிய வரலாறு யாதாயினும் ஆரிய கலாச்சாரத்தை இந்தியாவெங்கும் பரப்ப; இந்தியாவில் ஆரியர் குடியேற வழி செய்த, ஆரியப் போர் வீரர்கள் இவர்கள் என்பதில் சந்தேகமில்லை என்கிறது இந்நூல்(பக்கம்315)

பரசுராமன்

மேற்குக் கரையோரங்களில் முக்கியமாக பம்பாய், கொங்கணம், மராட்டா, துளுவம், கேரள வட்டாரங்களில் ஆரியத்தைப் பரப்பியவன் பரசுராமன்.

கி. மு. 6-4வது நூற்றாண்டு வாக்கில்— அதாவது பாணினி—காத்யாயனா என்ற சமஸ்கிருத இலக்கணப் புலவர்கள் காலத்தில் தான் தென்னாட்டாருடன் தொடர்பு கொண்டதாகத் தெரிகிறதென்கிறார் இந்நூலாசிரியர். எனவே இராமாயண—புராண காலங்களில் இலங்கைவரை ஆரியர் ஆதிக்கம் கொண்டதாக இராமாயணப் புலவர்கள் கூறுவது ஆதாரமற்றதாகிறது. இராமாயணமும் கட்டுரைக் கதையாகிறது.

ராட்சதர்— அசுரர், தைத்தியர், தானவர், நாகர் ஆகிய இனத்தவர் ஆரியப் படையெடுப்பைத் தடுத்துக் கடும் போர் நடத்திய மக்கள் வேதகால ஆரியரும் இவர்களை மனிதர்களாகத்தான் வர்ணித்துளர். பின்னர் புராணக்கதைகளைப் புனைந்தவர்களே. இனத் துவேஷத்தால் இழிவு தொனிக்கும் முறையிலும் பல் பொருள் சொற்களிலும் வர்ணித்துளர் என இவ்வாராய்ச்சி நூலில் காணப்படுகிறது.

மந்திரம் என்றால் தேவனைத் துதி செய்யாது அத் தேவனிடம் வரம் கேட்கும் பாக்கள்' என்று யாஸ்கா என்பவர்: எழுதியிருக்கிறார் (பக்கம் 34)

ரிக் வேத பாக்களைத் தொகுத்தவர்கள் புரோகிதர்களே என்றும், அந்த உரிமை யிருந்ததென்றும் இந்நூலில் காண்கிறது. எனவே வேதங்கள் என்பன புரோகிதர்களின் கைச் சரக்கு எழுத்துச் சித்திரங்களேயாகின்றன.

மற்றும் வேத ஆரியர்கள் எல்லோரும் ஒரு மாதிரியான மொழி பேசவில்லை என்பதும் விளக்கப்படுகிறது.

பணம்பறிக்க பயமுறுத்தும் பாக்கள்

மந்திரங்கள் என்பன புரோகிதர்கள் பணக்காரர்களிடமிருந்த பணத்தைப் பிடுங்கி பார்ப்பனருக்குக் கொடுக்கக் கையாண்ட பயமுறுத்தல் பாடல்கள் என்று இந்நூலில் விளக்கம் தரப்பட்டுள்ளது. (பக்கம் 342)

இதனால்தான் வேதப் பாடல்களில் கடுமையான காரசாரமான சொற்கள் புகுத்தப்பட்டுள்ளனவாம்.

இவ்விதம் பணக்காரர்களை அச்சுறுத்திப் பிடுங்கப்படும் பணம் பார்ப்பனர்க்கேயாகும்; ஏழைகளுக்குத் தரப்படவில்லை என்றும் ஏழைகளிடம் உண்மையான பரிவு; அனுதாபம் காட்டும் பண்புகள் ரிக்வேதத்தில் இல்லை என்றும் இந்நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மற்றும் வேதப் பாடல்கள் எல்லாம் வெறும் சடங்குமுறைப் பாடல் தொகுப்பேயென்கின்றனர்.

தெய்வத்தைப் புகழ்ந்து தலைதடவி அருள்பிச்சைக் கேட்பதே வேதத்தின் குறிக்கோள்.

யமதர்ம ராஜனைப்பற்றியோ மோட்ச நரகத்தைப் பற்றியோ ஆதி வேதத்தில் குறிப்புக் காணோம் என்பதால், இவை பிற்காலத்துப் பார்ப்பன புரோகிதர்களின் பிழைப்புக்காகப் புனையப்பட்ட கட்டுக்கதையாகிறது.

நாலாயிரப் பிரபந்தம்-நாயன்மார் பாடல்கள் ஆகியவற்றிலுள்ளதுபோன்றே இந்த ரிக் வேதத்திலும் காதல் துறைப் பாடங்களும் கலந்துள்ளன. தெளிவுறக் கூறுமிடத்து மத சம்பந்தமற்றப் பாட்டுகளும் ரிக் வேதத்தில் அதிகமுள்ளன.

ரிக்வேதத்தில் பிறவிச் சாதிப்பிரிவுபற்றி யாதொரு குறிப்பும் காணோம். மனுதர்ம சாஸ்திரம்—கீதை முதலியவற்றில்தான் பிறவிச் சாதிச் செய்திகள் காணப்படுகின்றன. எனவே பிற்கால பிராமண மதத்தினர்களின் கற்பனையே இந்த சாதி வேறுபாடு என்பது வெட்டவெளிச்சமாகிறது. ஆரியர்களும் நரபலி கோட்பாட்டினராக இருந்துளர். ஆயினும் பிற்காலத்தில் மனிதர்களுக்குப் பதிலாக மிருகங்களைப் பலியிட்டனர்.

மற்றும் ஆரியர்கள் ஒரே கடவுள் கொள்கை கொண்டவர்களல்லர் ஒவ்வொரு குடும்பமும் தத்தமக்கு ஒவ்வொரு தெய்வத்தைக் கற்பனைசெய்து கொண்டும், தத்தமது விருப்பப்படி ஏதோ சந்தப் பாடல்களைப் பாடியும் அந்த தெய்வத்திடம் தங்கள் வறுமை நீங்க வரமிரந்து வந்துளர். ரிக்வேதமும் ஒரு தனி முதல் கடவுள் கொள்கை கொண்டதல்ல.

எது கடவுள் ?

ஒவ்வொரு ரிஷி என்பவரும், ஒவ்வொரு தெய்வத்தை உண்டுபண்ணிக்கொண்டனர், ரிஷிகளுக்குள்

சச்சரவும் கருத்து வேற்றுமையும் ஏற்படும்போதெல்லாம் ஒவ்வொரு புதுத்தெய்வம் உற்பத்தி செய்யப்பட்டுவிடும். ஒவ்வொருவரும் மற்றவரின் தெய்வத்தைக் குறைகூறி—வசைபாடி இழிவுபடுத்திப் பேசி சச்சரவு இட்டுக்கொள்வர். இவ்விதம் ரிஷிகளுக்குள் ஏற்பட்ட சண்டையே தெய்வங்களுக்குள் ஏற்பட்ட சண்டையாக புராணங்களில் கற்பனை செய்யப்பட்டுள்ளது. இவற்றால் ரிக்வேதம் உண்டான வரலாறும் எப்படியென்று காணமுடியாதுள்ளது என்று இந்நூல் குறிப்பிடுகிறது. இதிலிருந்து இந்த ரிக்வேதம் ஒரு வேதவியாசராலோ—கடவுளாலோ ஆக்கப்பட்டதென பார்ப்பனர் கூறுவது ஆதாரமற்றதாகிறது. **பற்பல காலங்களில் பற்பல தலைமுறைகளில் பற்பலர் தத்தமது விருப்புக்கும் அறிவுக்குமேற் ஆக்கிய பிரார்த்தனைப் பாடல்களின் தொகுப்பே இந்த வேதங்கள்** என்பது தெளிவு.

புரோகிதர்களுக்கே தெரியாது

புரோகிதர் எல்லாக்கடவுள்களையும்(விஸ்வதேவர்களை) பிரார்த்திப்பதிலிருந்து இந்தப் புரோகிதருக்கு கடவுளின் நிலவரமின்னதென்பதே தெரியாதென்பது புலனாகிறதென்கிறார் மாக்டனால்டு என்பவர்.

இப்போதைய புரோகிதர்களும் இதே போன்றுதானே ஆயிரம் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி அர்ச்சனையும் பூசையும் நடத்துகின்றனர். இதிலிருந்து இவர்கள் தனி முதற் கடவுளில் நம்பிக்கையற்றவர்களாகின்றனர். இவ்வித அவநம்பிக்கைதான் மதச்சண்டைகளுக்கு மூல காரணமாகிறது. மெய்யறிவு பொறாமையே அவநம்பிக்கைக்குக் காரணம்.

அறிஞரல்ல

எனவே மதச்சண்டை நடத்திய மத ஆச்சாரியர்களும் குருக்களும்—பிறரும் மெய்யறிஞர்கள் அல்ல—ஒரு தனிக்கடவுள் கொள்கையினரல்ல; அந்தத் தனிப்பெரும் கடவுளின் அருள் பெற்றவருமல்ல; அந்தக் கடவுளின் தன்மையையும் உணர்ந்தவர்களோ அறிந்தவர்களோ அல்ல என்பது தெளிவாகிறது. இன்னும் தெளிவுறக் கூறுமிடத்து ஆஸ்திகர் என்று கூறிக்கொண்டு பல தெய்வ வணக்கம் செய்பவர்களை, கடவுளின் உண்மையறியாதவர்கள். அவர்கள் மொழியின்படி அவர்களே நாஸ்திகர்களாகின்றனர். ஏனெனில் ஒரு தனிக் கடவுள் நம்பிக்கை இல்லாததால்தான் பல தெய்வங்களைப் பிரார்த்தித்திருக்கின்றனர்!

அவரவர்களுடைய விருப்பு வெறுப்புப்படி கடவுள்களும். அவரவர்கள் வாய் போனபடி மந்திரப் பாட்டுகளும் உற்பத்திப் பெருக்கம் செய்து வந்திருப்பதாலும், ஒருவர் தெய்வத்தில் மற்றவருக்கு நம்பிக்கையில்லாததாலும், **இந்த 'தெய்வம்' என்பதே வெறும் கற்பனைப் பித்தலாட்டமாகிறது.** மற்றும் மந்திரம் என்று எதனைக் கூறுகிறார்களோ அதில் எந்தவித மகிமையும் கிடையாது. ஒருவரைத் திட்டுவதில் எவ்வளவு "தெய்வீக சக்தி"யுள்ளதோ அவ்வளவு தெய்வீக சக்திதான், இந்த ஆள்மிரட்டல்; பணக்காரர்கள் பணத்தைக் கரைக்கச் சொல்லும் சொல்லடுக்குகளிலுமுள்ளதென்பது வெட்ட வெளிச்சமாகிறது.

தலைவர்களே!

மணிச் சுருக்கமாகக் கூறுமிடத்து இந்த மந்திரமென்பது பணம் பறிப்பதற்கான ஆள் மிரட்டல்—

அடுக்குச் சொற்களேயாகும். மற்றும் இப்போது ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தலைவரிருப்பது போல், படைக்குத் தளபதியிருப்பதுபோல் இந்தப் பார்ப்பனீய தெய்வங்களும் பல்வேறு பிரிவுகட்சி ஆரிய முனிவர்களின் கற்பனைத் தலைவர்களேயாவர். மற்றும் கண்காணும் தலைவரைக் குறிப்பிடாது, கண்காணாத கற்பனைத் தலைவர்களை இவர்கள் குறிப்பிட்டிருப்ப தானது, இவர்கள் மூட நம்பிக்கையில் முழுக்க முழுக்க மூழ்கியிருந்த-அறிவுவளம் பெறாத அநாகரீகர்கள் என்பதும்-கண்காணாதவற்றை எண்ணிப் பயப்படும் சிறு பிள்ளை மனப்பான்மையினரென்பதும் புலனாகிறது.

பிள்ளைமனக் கற்பனை

அதாவது சிறு குழந்தைகள் "பூச்சாண்டி" யை எண்ணிப் பயப்படுவது போலும். "பூச்சாண்டி"யெனக் கூறிப் பயமுறுத்துவது போலும். இந்த வேத மதத்தினரும் "பூச் சாண்டித் தெய்வங்களை" கற்பனை செய்து கொண்டுள்ளனர்.

குழந்தைகளின் "பூச்சாண்டி" என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மைதான் இந்த வேத தெய்வங்களுமென்பதும் தெளிவுபடுகிறது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல இந்த வேதியர்களின் பயங்கொள்ளி மனதிலும்—தன்னம்பிக்கையற்ற உள்ளத்திலும், வளம்பெறாத பிள்ளை மதியிலும் கற்பனை செய்யப் பட்டவைகளே தெய்வங்களாகின்றன. எனவே இந்தத் தெய்வங்கள் என்பனவெல்லாம் வெறும் "மாயை" — மனமயக்கத்தால் கற்பனை செய்துகொண்டவை என்பதே பகுத்தறிவு காணும் தீர்ப்பு.

இந்த ரிக்வேதப் புலவர்களின் கண்முன்னர் எப்போதும் சோமபானமும், சோம மூலிகைச் செடியும் (கஞ்சா போன்றது) இருக்குமாம். சோமயாகம் தான் ஆரியர்களின் முக்கிய யாகம். மதுக்குடித் திருவிழா இந்த சோமயாகம் போலும்! ரிக்வேதத்தில் ஒன்பதாவது பகுதி முழுவதும் இந்த சோமபான மகிமை—உற்பத்தி முறை பற்றிய வர்ணனைப் பாடல்களையே கொண்டிருக்கிறது. சோமரச செடியின் மொக்கு, கொழுந்து, காம்பு முதலியவற்றை இடித்துச் சாறெடுத்து வடிகட்டிச் சுத்தமாக்கிப் பாலும் தண்ணீரும் கலந்து இனிப்பாக்கிக் குடிப்பாரம் பாலுடனும், மோருடனும், கஞ்சியுடனும் கலந்து தினம் மூன்று வேளை தவறாது உன்பராம்.

அமிர்தம்

மூவா மருந்து-சாவா மருந்து-தேவாமிர்தம் என்று சொல்வதெல்லாம் இந்த சோமபான (மதுபான)மேயாகும். இது தேவபானம்—தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சாகாத் தன்மையை யளிப்பதாம்! இதற்கு அமிர்தம் — சாவா மருந்து என்றும் பெயர்''கவிஞர்களுக்குக் கற்பனைச் சக்தியை வளர்ப்பதும் இதுவே'' என இந்த முன்ஷியார் நூலிலும் விளக்கம் தரப்பட்டுள்ளது. (பக்கம் 375)

இந்த சோமபான தேவனுக்கு வனஸ்பதி என்றும் பெயராம்.

மக்கள் பழக்க வ[illegible]கள்

ஆரிய தேவ வர்ணனை [illegible] நூலுக்கவனித்தா[illegible] மக்களுக்குள்ள கோபம்-தா[illegible]-அன்பு-அழுகை-பகை-உணவு-குடி பழக்க வழக்க[illegible]கள் ஆகிய பலவும் ஆரி[illegible]

வேதியர் வேதத்தில் பல்வேறு தேவர்களாக உருவகப் படுத்தப்பட்டிருப்பது புலனாகும்.

இத்துடன் மண், மரம், செடி, கொடி, கல், மலை, காடு, ஆறு, காற்று, தண்ணீர், தீ, அங்கங்கள் ஆகிய யாவும் தேவ கணங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

ராட்சதர்கள் எனக் குறிப்பிட்டிருப்பது தஸ்யூகள் தாசர்கள் எனப்படும் இந்தியப் பழங்குடி மக்களையே யாகும் என்று இந்த முன்ஷி நூலே ஒப்புக்கொள்கிறது. அசுரர்கள் பெயர் ரிக்வேதத்தின் பிற்பகுதியில் காணப் படுகிறதாம்.

உண்மைகள்

ரிக்வேத புராணக்கோட்பாடுகளை நுணுகிப் பார்த்தால் கீழ்க்கண்ட உண்மைகள் அறியக் கிடக் கின்றன—

(1) முக்கிய இயற்கைக் கோள்களையே — உயிரும் உடலுமுள்ளனவாக உருவகப்படுத்திக்கொண்டு ஆரியர்கள் வணங்கி வந்தனர்.

(2) மரம் செடி கொடிகளையும் தெய்வங்களாக வணங்கினர்.

(3) இந்திரனைக் காளையாகவும், சூரியனைக் குதிரையாகவும் ஆரியவேதம் உருவகப்படுத்தியிருப்ப தால் இவர்கள் மிருகங்களை இந்திரன்–சந்திரன்–சூரியன் எனப்பெயரிட்டு' தெய்வமாக்கிக் கும்பிட்டனர் என்பதும் தெளிவாகிறது.

(4) நாசம் விளைவிக்கும் சூறாவளி–இடி மின்னல் முதலியவற்றைப் பயங்கர தேவராகக் கருதி, ஆரியர்

அருள் வேண்டி வந்தனர்—பாதுகாக்கும்படி மன்றாடியிருக்கின்றனர்.

(5) ஆரியர்கள் குறிப்பிடும் வானுலகத்தெய்வம்—தேவர் என்பனவெல்லாம் உண்மையில் கிடையாதென்பதும், இவ்வுலகில் காணும் பொருள்களையும் மனிதர்—மிருகங்களுக்குள்ள பண்புகளையும், மிருகம் மரம் செடி கொடிகளையும், மழை–காற்று—வெயில்—தண்ணீர்—நெருப்பு–மண்–மலை–காடு முதலியவற்றையுமே தேவராக ஆரியர்தம் மனத்தில் எண்ணமிட்டுக் கொண்டனரென்பதும் வெள்ளிடைமலையாக விளக்கமாகிறது.

காட்டுமிராண்டித் தெய்வங்கள்

இயற்கைப் பொருள்களுக்கு மனித உடலுருவம் தந்து தேவர்களாக்கியதுடன் விட்டுப் போகவில்லை இந்த ஆரியக்கோட்பாடு. மனிதராக்கப்பட்டால் மனிதர்களுடைய நடவடிக்கைகள், விருப்பு—வெறுப்புப் பண்புகள் ஆகிய எல்லாம் சேர்க்கப்படத்தானே வேண்டும் என்று எண்ணினர் போலும். அவ்விதமே சேர்த்தனர். ஆனால் இவ்விதச் சேர்க்கையில் சிறப்புப்பண்புகளை விட, மனிதர்களின் தகாப் பண்புகள், இழி குணங்கள்—கேடான நடவடிக்கைகள் ஆகியவைகளையே தேவர்களுக்கு விசேஷ லட்சணமாக்கியுள்ளனர். இதன் உட்கருத்தும் நோக்கமும் என்ன? தேவர்களை நையாண்டி செய்வதா? தேவர்களே இம்மாதிரி கெட்டப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தால், அத்தேவர்களை வணங்கும் அம்மக்களின் ஒழுக்கத்திலும் சந்தேகப்படத் தானே வேண்டும்? ஒழுக்கக் கேடர்களுக்கு ஆதரவு தேட–பாதுகாப்பளிக்க இம்மாதிரி கற்பனை செய்தனர் போலும் என்று கருதத்தானே வேண்டியிருக்கிறது? இது ஓரளவுக்கு உண்மையாகலாம். நாடோடிகளாகத் திரிந்த அக்கால ஆரிய மக்களின் பழக்க வழக்கங்கள்

அநாகரிக காட்டுமிராண்டித் தன்மையில்தான் இருக்கும் பக்குவப்படாத-பதன் படுத்தப்படாத இயற்கையுருவ முட்செடிகளாகத்தான் தோன்றியிருக்கும், அக்கால ஆரியர்களின் பண்படாப் பழக்க வழக்க நடைமுறைக் கோட்பாடுகள். சிறந்த நாகரீகமுற்றியிருந்த திராவிடப் பெருங்குடி மக்கள் இந்த அநாகரீக ஆரிய மக்களைக் கண்டு எள்ளி நகையாடியும் இருப்பர்—கண்டித்தும் இருப்பர்—தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்தும் இருக்கலாம். இத்தகைய கண்டன — தீண்டப்படாத நிலைமையிலிருந்து தப்பத் தங்கள் தேவர்களை சாட்சியாக—ஆதாரமாக ஆக்கி, தங்களுடைய பழக்க வழக்கத் தகாப் போக்குகளுக்கு ஆதரவுதேட முற்பட்டுமிருக்கலாம் அவ்வாரியக் குழுவினர். அதாவது தங்களுடைய தேவர்களிடமே இந்தப் பண்புகள் உள்ளனவென கட்டிக்காட்டி தங்களுடைய சம்பிரதாயக் கோட்பாடுகளுக்கு சப்பைக் கட்டுக்கட்ட முற்பட்டனர் போலும்!

இது ஆரியர் இந்தியாவுக்கு வந்த துவக்கக்காலத்திற்கு ஏற்றவாதமாகலாம். ஆனால் பிற்காலத்தில்—அறிவும் மக்கள் உலகம் நாகரீகச் சிறப்புற்ற—அறிவு பண்பட்ட நிலைமையிலும் இத் தகாப்பண்புக் கடவுள்கள் எதற்கு எனக் கேள்வி எழுகிறது.

“வீசுவாசக்காரனுக்கு வெந்நீரும் சோறும், கண்டுமுண்டுக்காரனுக்குத்தயிரும் சோறும்” என்று உள்ளதே தமிழ் மக்களிடையே ஒரு பழமொழி—இந்தக்கோட்பாட்டுக்கு இந்த ஆரியக் கடவுள்கள் தகுந்த உதாரணமாக்கப்பட்டுள்ளன.

போக்கிரிகளைக்கண்டு அஞ்சித்தானே மக்களும் அடங்குவர். பணமும் பண்டமும் லஞ்சமாகத் தருவர். சாதுவைக் கண்டால் யாரும் மதிக்கமாட்டார்களே—ஆதரிக்கமாட்டார்களே—உதவி புரிய மாட்டார்களே—

உலகறிந்ததாயிற்றே இது. இந்த உட்கருத்தின்மீது தான் ஆரிய வேதியரும் பிற்காலத்தில்—பிற மக்களை—முக்கியமாகத் திராவிடமக்களை வணங்கச்செய்ய-தங்கள் தெய்வங்களுக்கு இந்தப் 'போக்கிரி' இலட்சணங்களைச் சூட்டிக்கொண்டுளர் என்பது விளக்கமாகிறது. இந்தத் துஷ்ட தெய்வங்களின் பெயரை—போக்கிரி நடவடிக்கைகளைச் சொல்லி மக்களை மிரட்டியும்—பயப்படச் செய்தும் பணம் கறந்து சுகவாழ்வு வாழ நம்பகரமான வழி இதுவெனக் கொண்டனர் என்றும் துலக்கமாகிறது.

"தோத்திரங்கள் மூலம்-புகழ் பாடுவதன் மூலம்—பணமும் பண்டமும் பிரசாதமும் காணிக்கைகளாகத் தருவதன் மூலம்தான் இந்தத் தெய்வங்கள் திருப்தியடைந்து மகிழ்ச்சியடைந்து கருணை காட்டும்—வரமருளும்" என்ற கோட்பாட்டைத் தோற்றுவித்தனர். இது உலகறிந்த உண்மையும் யாரும் நம்பக்கூடிய நடப்புச் செயலுமாக உள்ளது.

மக்களிடையே—சுற்றத்தாரிடையே அன்பும் ஆதரவும் கூட்டுறவும் ஏற்பட பணமும்—பண்டமும் தருதல் அறிந்ததே—அரசாங்க அதிகாரிகளை வசப்படுத்தவும் இம்முறை கையாளப்படுகிறதல்லவா? எனவே "மனிதர் தலையெழுத்தை நிர்ணயிக்கும்-மனிதர்கள் வாழ்க்கையை நிர்வகிக்கும் தலைமை அதிகாரிகளாக" இந்தத் தேவர்களைச் சித்தரித்துக்காட்டி பூசை போடவும்; காணிக்கை செலுத்தவும் செய்தனர்.

கல்லிலும், மண்ணிலும், மரத்திலும், செம்பிலுமாகிய இந்தத் தேவ உருவங்கள் உண்ணவா போகின்றன! – புனைந்தால்தான் என்னபலன்! அவற்றிற்கு இந்த வேதப்புரோகிதப் பூசாரிகளும் தங்களை, தேவப் பிரதிநிதிகளாகவும் — பூதேவர்களாகவும் கற்பித்துக்

காட்டி—தேவருக்குச் சமர்ப்பித்தவற்றைத் தமக்காக்கிக் கொண்டனர். "தாயும் மகளும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வெவ்வேறுதானே" என்று வாதிப்பரே! தமிழ் மக்கள்—உலகறிவோடு இந்த வாதத்தை ஆரியப் பூசுரர்கள் பொய்யாக்க முற்பட்டு வெற்றியும் பெற்றனர். தமது வாயும் வயிறுமே தேவர்களின் வாயும் வயிறும் என்று பாமர மக்கள் நம்பும்படி செய்தனர். இவ்வித நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகக் காட்டுக்கரடி உறுமல் குரல், சமஸ்கிருத மந்திரங்கள் என்ற கரடுமுரடு உச்சரிப்பு – கழுத்தறுபடும் ஆடு அலறுவதுபோல ஒலிக்கும் – வெறி பிடித்தவன் கத்துவது போல் குரலெழுப்பும் சொல்லடுக்குப் பாட்டுகளையும் தொடுத்துக்கொண்டனர், அத்துடன் தெய்வச் சாபம் தெய்வக் கோபம் என்றும், மிரட்டல் வாக்கியங்களைக் கற்பனை செய்து கூறி, தங்கள் கோட்பாடுகளை எதிர்ப்பவர்களையும் வாயடக்கினர். பகுத்தறிவு—ஆய்வறிவு—விஞ்ஞான அறிவு வளம் பெற்றுள்ள இக்காலத்திலும் இந்த மவ்டீகக் கோட்பாடுகளை நம்புவோர் ஏராளமாயிருக்கும்போது, அறிவு வளம்பெறாத இளஞ்செடி நிலவரத்திலிருந்த அக்கால (ஆரிய அடிநாள்) தெய்வ—மந்திர மாய" மிரட்டுகளை நம்பியதில் ஆச்சரியம் இல்லையே!

தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கான இந்தப் புரோகிதப் பூசாரிக் கங்காணித்தொழிலைத் தங்களுக்குப் பரம்பரைச் சொத்தாக்கிக் கொள்ளத்தான் "மற்ற மக்களின் தாய்மொழிப் பாட்டுகளை ஒதுக்கி—மற்ற மக்கள் அறியாத-புரிந்துகொள்ள முடியாத—அறியவும் புரிந்து கொள்ளவும் இயலாதபடி தடுப்புக் கோட்டைக்குள் வைத்துக் கொண்ட சமஸ்கிருதமொழி சொல்லடுக்குகளைப் பூசை மந்திரங்களாக்கிக் கொண்டனர். திராவிடர் அம்மந்திரங்களை அறிந்தால் "பாவம்" என்றும் "**நர்கப் பிராப்தி**" என்றும் பயமுறுத்தி" பிறர்

இந்தச் சொல்லடுக்குகளின் அர்த்தத்தை அறியாதபடி செய்து விட்டனர். பிற்காலத்தில் இம்மந்திரங்களை திராவிடர்களும் அறிந்து கொண்டனர். திராவிடப் பெருங்குடி மன்னனான இராவணனும் இந்த வேதங் களை அறிந்திருந்தானென இராமாயணத்தில் வால் மீகியே தீட்டிவைத்திருக்கிறார். இவ்விதம் திராவிட மக்கள் அறிந்ததால், வேதியரின் பிழைப்பில் மண் விழுந்தது போலும்! எனவேதான் மனு (அ) தர்ம சாஸ்திரத்தில் சூத்திரர், முக்கியமாகப் பெண்கள் (இவ் விருவரும் அடிமைகளாக இருக்கவேண்டியவர்கள்) வேதத்தைப் படிக்கக்கூடாது, வேதப்பாட்டுகளைப் பாடக்கூடாதென தடைச்சட்ட விதியைச் சேர்த்துளர்.

இந்தத் தடைச்சட்ட விதிகளை மீறுபவர்களுக்குத் தண்டனையும் நிர்ணயித்து—தங்கள் கையாட்களான மன்னர்களைக் கொண்டு தண்டித்து வந்தனர். இந்தத் தண்டனைகளில் முக்கியமானவை நாக்கறுத்தல்—காதிலே கொதிக்கும் உலோகக் குழம்பை வார்த்தல் எனத் தெரிகிறது.

மேலே கூறிய கோட்பாடுகளுக்கு ஆதாரங்கள் முன்ஷி பிர்லா-ராதாகிருஷ்ணன்-வெங்கட்ராம சாஸ்திரி தொகுப்பு நூலான இந்த ஆராய்ச்சி நூலிலும் பார்க்கக் காணப்படுகின்றன.

சாப்பாட்டுத் தேவர்கள்

"பிராமணா போஜனப் பிரியா" என்ற வாசகம் எப்போது யாரால் எதனால் ஏற்பட்டதென்ற வரலாறு இதுவரை புலனாகவில்லை இந்த மொழிக்கு ஆதாரம் இந்த முன்ஷி ஆராய்ச்சி நூல் காட்டுகிறது.

அதாவது **தேவரின் கருணையை—அருளைப் பெற சிறந்தவழி—உபாயம் அத்தேவருக்கு நல்ல**

சாப்பாடு படைப்பது தான் என்ற வேதக் கோட்பாட்டைச்சுட்டிக் காட்டியுள்ளர் முன்னீக்கள்

இத்துடன் நன்றி செலுத்தலாகா காணிக்கைகள்-அர்க்கியங்களும் தரப்பட்டனவாம்.

மற்றும் மக்கள் உள்ளத்தில் பார்ப்பனர் தேவரடியார்—ஆண்டவனுக்கு அடிமை என்ற உணர்ச்சியும் ஏற்படுத்தப்பட்டது இதன் விளைவாக மக்கள் தங்களிடமிருந்த பண்டம் பொருள்களை ஆண்டவனுக்கே உரிமையாக்கிவிடச் செய்யும் துறவுப்பான்மையும் ஏற்படச் செய்யப்பட்டது.

பணப்பறி

முற்றிய பக்தியின் சிறப்பு தம்மிடமுள்ள சொத்துக்களைத் துறத்தல் என்ற கோட்பாடு நுழைக்கப்பட்டது. துறக்கப்பட்ட இந்தச் சொத்துக்கள் யாருக்கு? பணக்காரர்களை மிரட்டிப் பணம் பறித்து- பார்ப்பனருக்குத் தருவதே சமஸ்கிருத வேத மந்திரங்களின் குறிக்கோளென இந்நூலாசிரியர்களே முன் பகுதியில் கருத்துத் தெரிவித்துளரே. பறிக்கப்பட்ட பணம் பார்ப்பனப் புரோகிதர்களுக்கே தரப்படுமென்றும், பிறஇன ஏழை எளியவர்களுக்கல்ல வென்றும், ரிக் வேதம் ஏழைகள்பால் கருணை காட்டுவதுபற்றி யாதொன்றும் குறிப்பிடவில்லை என்றும் இந்த வேதகால ஆராய்ச்சி நூலே விளக்கம் தந்துள்ளது. எனவே துறவுகொண்டவர்களின் செத்துக்களும் தேவனுக்கு அதாவது தேவரின் வார்சுதாரரான பூதேவர்களுக்கு—உரிமையாகிவிடும். எனவே இதுவும் புரோகிதர் சுகவாழ்வுத் தந்திரமேயாகிறது.

இவ்விதம் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதால் சிறந்த பேரின்பம் கிடைக்கும். என்று ரிக் வேதத்திலும்

திட்டி வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் அந்த இன்பம்— இந்த மண்ணுலகமானிடவுடலிலே—இந்த வாழ்க்கை நிலவரத்திலே காணவியலாததெனவும் கூறி —செத்தபின் அதாவது இந்தவுடல் மண்ணோடுமண்ணாகிய பின் அடையும் இன்பமே "மோட்சம்" என்றும் கூறி தங்கள் சுயநல-சுகவாழ்வு துறைக்குப் பாதுகாப்பும் —தட்டிக் கழிக்கச் சாக்குப் போக்குத் தந்திரமும்— அந்த வேத விதிகளில் சேர்த்துக்கொண்டுள்ளனர்.

யாகம் ஏமாற்று வித்தை

ஆண்டவனுக்கு அர்ப்பணித்தப் — பொருள்கள் எல்லாவற்றையும் வேதியர்களே உண்டு ஏப்பம் விட்டால், அவற்றைக்கொடுத்த பாமர-மவுடீக மக்களும் கூடச் சந்தேகிப்பரே! பசித்த வயிறாவது இவ்விதம் எண்ணவும்-துணிவுடன் கேட்கவும் தூண்டிவிடலாம். எனவே, காணிக்கை அளித்த பக்தர்கள்காண ஏதாவது தந்திரம் செய்யவேண்டுமென்ற நோக்கத்தால்தான் ஹோமம், யாகம் என்ற பெயரில் நெருப்பு வளர்த்து, சில பண்டங்களை அதில் சொரிந்து-அவற்றைத் தேவர்களுக்கு அனுப்பிவிட்டதாகக் கண் துடைப்பு நாடகம்-கண் கட்டு வித்தை நடத்தி வந்துள்ளனர். பெரும் பகுதிப் பண்டங்களை அவர்கள் உரிமையாக்கிக் கொள்வதற்கும் பண்டங்களைத் தந்த மக்கள் ஆட்சேபிப்பரே என்ற உட்கருத்தால் பிரசாதம் என்ற பெயரில் சிறு பகுதியை அப்பக்தர்களுக்கு கிள்ளிக் கொடுப்பர்— சுண்டைக்காய் அளவில், இவ்விதம் கிள்ளிக்கொடுக்கும் பண்டத்துக்கு "அவிர்ப் பாகம்"— (தேவ அவிசு— தேவப் பிரசாதம்) என்றும் பற்பல பெயர்களும் இட்டனர்.

இந்தத் தேவப் பிரசாதத்தை— பட்டினி வயிற்றுடன்- பட்டினி மயக்க நிலவரத்தில், பக்தியோடுவாங்கி —பக்தியோடு விழுங்கிவிடவேண்டும்— மருந்தை விழுங்

குவது போல்; மனவேறுபாடு—முகவேறுபாடு கொண்டால் "தெய்வக் கோபம்...........சாபம்............பாபம் நரகம்" என்ற அடுக்குச் சொற்களைக்கொண்டு அச்சுறுத்தல் ஒத்திகை நாடகம் நடக்கும்.

தேவரைத் திருப்திப்படுத்தும் உணவை அவர்களிடம் சேர்ப்பதற்காகத்தான் யாகங்கள் என வேத நூல் விளக்கம் தருகிறது. அதாவது இந்த யாகத்தீயின் மூலம் தேவர்களுக்குச் சாப்பாடனுப்புகிறார்களாம்.

சூரியனுக்குப் பிரியமான உணவு சூரியனின் வாகனம் என்று எண்ணமிட்டு அஸ்வமேத யாகம் செய்கின்றனராம். தேவர்களைக் கொழுக்க வைக்க இப்பூலோக மக்களை உண்ணா விரதமிருக்கச் செய்து அவர்கள் பொருளை வாங்கிக்கொள்வது போல, சூரியனின் குதிரைகளுக்கு சக்தி யூட்டவும் இந்த யாகம் செய்யப்படுவதாகவும் எண்ணப்படுகிறது. இந்த யாகத்தின்போது பாடப்படும் சுலோகங்கள் பிற்காலத்தில் பற்பலரால் ஆக்கப்பட்டுள்ளன மனிதருக்குப் பிரியமான உணவைத் தேவருக்கும் அளித்து மகிழ்விக்கத்தான் மனிதர் சாப்பிடும் சாப்பாடும் யாகத்தீ மூலம் அனுப்பப்படுகிறதாம்.

அதிலும் சுயநலம்

மன்னர்கள் ஆட்சி ஏற்பட்டபின், இந்த யாகங்கள் அதிகரித்தன; நாட்டு நலத்துக்கென்றும் மன்னர் பெருவாழ்வுக்கென்றும் யாகங்கள் கற்பனை செய்யப்பட்டன. மற்றும் இந்த அஸ்வமேத யாகம் என்புதை மன்னர்கள் ஏன் செய்கிறார்கள்? எவ்வகையில் செய்கிறார்கள்? இதனை நுணுகிப் பாருங்கள். அசுவமேத யாகம் செய்வதன் நோக்கம் பல நாடுகளுக்கு மன்னர் மன்னன் (சக்ரவர்த்தி) ஆவதாகும். இது மன்னரின் வெறும் நாட்டாசைக் குறிக்கோள் மாத்திரம் கொண்டதென

எண்ணுவதற்கில்லை. இந்த யாகத்தைச் செய்பவர்— செய்யத் தூண்டுபவர் வேதியர்கள்.

எனவே இந்த யாகத்தில், இந்த வேதியர்களின் நலமும் முக்கிய குறிக்கோளாக இருக்கத்தான்வேண்டும். யாகத்தால் ஏராளமான பண்டமும் பணமும் இந்த யாக வேதியருக்குக் கிடைப்பது மேலளவுபலன். ஆனால் அடிப்படை நோக்கம்—காரணம் வேறொன்று இருக்கத்தான் வேண்டும். அதாவது இராமாயண—பாரத நோக்கமே இதிலுமுள்ளது. அதாவது—ஆரியத்தை—வேத மதக் கோட்பாடுகளை—பார்ப்பனீயத்தை, வேத குலத்தாரின் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களை ஒடுக்குவதும் மன்னர்களைக் கொண்டு வேதியர் எதிரிகளை அடக்கி, வேதக் கோட்பாடுகளுக்கு அடிமையாக்குவதும் இதன் உள்நோக்கமெனத் தெளிவாகிறது.

உபநிஷத்துகள்

உபநிஷத்துகள் என்ற சொல்லுக்கு அர்த்தம், ஒருவருடைய பக்கத்திலமர்ந்து கேட்கக் கூடிய விஷயங்கள் என்பதாகும். இதனை வேதாந்தம், வேதத்தின் முடிவு என்பர்.

வேதம் கற்றபின் கற்கக்கூடியவை என்றும், வேதக்கருத்துக்களைக் கொண்டவை என்றும் இதற்கு விரிவுரை கூறுகின்றனர்.

வேதத்திற்கும் இந்த உபநிஷத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று இந்நூல் சுட்டிக் காட்டுகிறது (பக்கம் 468) எனவே பிற்காலத்தில் வேதத்திற்கு முடிவு—அதாவது வேதங்கள் மதிப்பாரற்றுப் போன போது, இந்த உபநிஷத்துக்களை வேதியர்கள் உற்பத்தி செய்திருக்கவேண்டும் என்பதும்—இவைகளும் புராணக் கதைகளின் இனத்தைச் சேர்ந்தவையே என்றும்

எண்ணச் செய்கிறது. இதற்குமுன் ஆரிய வேதியர் கைக்கொண்டிருந்த வேதச் சடங்குகளை எதிர்க்கும் கருத்துக்களும் இந்த உபநிஷத்துக்களில் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுவதால், வேதக் கோட்பாடுகள் செல்லாக்காசான காலத்தில், நாட்டு மக்களின் கருத்துக்களைத் தழுவி இந்த உபநிஷத்துக்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டவை என்பது தெளிவாகிறது.

அக்காலத்திலும் எதிர்ப்பு

மற்றும் க்ஷத்ரியர்கள் (அரசமரபினர்) இந்த உபநிஷத் கோட்பாடுகளில் அதிக பங்கு கொண்டனரெனத் தெரிவதால் இது வேதிய எதிர்ப்புக்கோட்பாட்டியல் நூலாகவும் இருக்கவேண்டும் என்பதும்; பார்ப்பனீய ஆதிக்கத்தை அக்காலத்து மன்னர்களும் எதிர்த்து, தங்களைச் சிறப்பித்துக்கொள்ளும் தன்மானவுணர்ச்சியும் கொண்டிருந்தனரெனவும் எண்ணச் செய்கிறது. சாதி வேற்றுமைக் கோட்பாடுகளை—மனித சக்திக்குப் புறம்பான கொள்கைகளை ஒதுக்கியும் இந்த உபநிஷத் கொள்கைகள் இருப்பதானது, பழைய வேதிய மதத்திற்குப் பிற்காலத்தில் கடும் எதிர்ப்பு இருந்ததென்பதற்கு ஆதாரமாகிறது. புராணங்களும் இதேபோல் வேத மதத்தையும் ஆரிய வேதியர் ஆதிக்கத்தையும் எதிர்த்தும், அரசமரபினர் சிறப்பையும் ஆதிக்கத்தையும் சிறப்பித்தும் தொகுக்கப்பட்ட கதைகளெனவும் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இப்போது உள்ள அச்சுப்பிரதிகளான உபநிஷத்துகளிலும், இதிகாசங்களிலும், புராணங்கள் என்பவற்றிலும் வேதத்தையும் வேதியரையும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பகுதிகளும் சாதி வேறுபாட்டுப் பகுதிகளும் பிற்கால இடைச்செருகல் வேலையாக இருக்கலாமென்பது மேற்காட்டிய கருத்தால் அறியக்கிடக்கிறது.

இந்துமதத்தில் 20-கோடி மக்களாக இருந்து என்ன பயன்?

5

திருச்சியில் பெரியார் பேருரை

"புராணங்களை ஒழிக்கும் வகையாக புராணங்களையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் எரிப்பதற்கு 15-20 ஆண்டுகளுக்கு முன்பே திட்டம் கூறினோம்" என்பதாகவும், "இன்று ஒருபடி முன்னேறி விக்கிரகங்களை உடைக்கத் தீர்மானித்தோம்" என்பதாகவும், தந்தை பெரியார் அவர்கள் திருச்சி தேவர் ஆலில் 29-3-53ந் தேதி நடைபெற்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறியதோடு, ஏன் திராவிடர்கழகம் இம்முடிவுக்கு வந்ததென்பதையும் தெளிவு படுத்தியதின் சுருக்கம் :

பேரன்புமிக்க தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே! இக்கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இதற்கு முன் பேசிய சைதாப்பேட்டை தோழர் கு. மாணிக்கம் சாதாரணமாக ஓரளவுக்கு எளிய தன்மையில் புராணங்களைப்பற்றியும் அவைகளில் பொதிந்துள்ள ஆபாசங்களைப்பற்றியும் தெளிவாய் எடுத்துச் சொன்னார்.

இன்றைய இந்தக் கூட்டத்துக்குப் "பெண்கள் வரக்கூடாது" என்று விளம்பர அறிக்கையில் போட்டு விடலாம் என்றுகூட நினைத்தேன். ஏன்எனில் நமது கடவுள்கள் விஷயமாக அவ்வளவு ஆபாசங்களைப்

புராணங்கள் கொண்டுள்ளன. அக்காலத்தில் ஆபாசங்களைப் புகுத்தாமல் புராணம் எழுதவே முடியாதோ என்னவோ! சிலருக்கு கொக்கோகம் முதலிய காமதூர விஷயங்கள்தான் பிடிக்குமென்பார்கள். அதைப்போல நாகரீகமற்ற காட்டுமிராண்டிக்காலத்தில் புராணங்களை எழுதியவர்கள் ஆபாசங்களைப்பற்றிச் சிறிதும் வெட்கப்படாமல் (கம்பனைப்போல் என்று வைத்துக்கொள்ளுங்களேன்.) தங்கள் மனதில் நினைத்ததையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். காலதேச வர்த்தமானத்தையொட்டி அந்தக் காலத்திற்கு ஏற்றவாறு அவர்கள் எழுதியிருக்கலாம் என்று கருதினாலும் அந்தப் பரம்பரையர்களுக்கு இன்றுள்ள மதவெறி காரணமாக அவைகளில் உள்ள ஆபாசங்கள் அனைத்தையும் பொது மக்களுக்கு வெளியிடாமலிருக்க முடியவில்லை. மேலும் இந்தப்புராணங்கள் முதலியவைகளை நினைத்தவர்கள், தங்கள் தங்கள் விருப்பத்துக்கும், இஷ்டத்திற்கும், ஆபாசங்களுக்கும் ஏற்ற மாதிரியில் எழுதி எழுதி முன்னுக்குப்பின் முரணாகப் போகுமே என்றுகூடக் கவலைப்படாமல் சேர்த்துக்கொண்டே வந்துவிட்டார்கள். இப்போது இங்கு "வேத சாஸ்திர புராண கடவுள்" என்பதான ஒரு பொருள்பற்றி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏன்என்றால் நமக்குத் தெரிந்த சங்கதிகளை, நம்முடைய அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டிய வரையில் நமக்குத் தோன்றிய கருத்துக்களை, இன்றையதினம் மக்கள் எதையெதை தங்கள் வேதமாகவும் தெய்வமாகவும் கருதிக்கொண்டு இருக்கிறார்களோ அவைகள் எல்லாம் பித்தலாட்டங்கள், மக்களை ஏமாற்றுவதற்கும், அடக்கியாளுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்ச்சியான முறைகள், என்பதைப் பல ஆராய்ச்சி நிபுணர்கள் ஆதாரங்கள், ஆராய்ச்சிக் கருத்துக்கள் முதலியவைகளை எடுத்துக் காட்டிச் சொல்லலாம் என்பதாகத்தான் இந்தக்கூட்டம் கூட்ட நானும் சம்மதித்தேன். எங்களுடைய கருத்தை

மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறவர்களல்ல நாங்கள். நாங்கள் சொல்லுகிற கருத்துகளைப்பற்றி மக்கள் சிந்தித்துப்பார்த்து, சரியென்றுபட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாக நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். மறுத்துக் கூறுகிறவர்கள் முன்வருவதை நான் வரவேற்கிறேன்.

திராவிடர் கழகம்

ஆனால் திராவிடர் கழகம் ஒன்றுதான் இத்துறையில் பல ஆண்டுகளாக வேலை செய்துக்கொண்டு வருகிறது. அதற்கு முன்பு ஜஸ்டிஸ் கட்சி என்ற பேரால் இருந்து வந்த இந்தக் கழகம் சமூகத்துறையில் புகாமல் அரசியலில் மாத்திரம் வேலை செய்து வந்தது என்றாலும் அதனால் மக்களுக்கு அது சமயம் ஓரளவுக்கு ஆரசியல் உணர்ச்சி வந்தது. ஜஸ்டிஸ் கட்சியும் 18 வருட காலத்தில் ஆட்சியில் மக்களுக்கு என்னென்ன சாதிக்கக் கூடுமோ அதையெல்லாம் செய்தது. அதன் மூர்த்தண்யமான சமயத்தில்தான் காங்கிரஸ்கட்சியும் புது துறையில் புகுந்தது. ஜஸ்டிஸ் கட்சிக்கு முன்பே காங்கிரஸ் கட்சி இருந்து வந்தது எனினும் அது அப்போதெல்லாம் பார்ப்பனர்களுக்குச் செல்வாக்கும், ஆதிக்கமும், உத்தியோகமும் கிடைக்கப்பாடுபடும் ஒரு கட்சியாகவே இருந்து வந்தது. அதன் மூலம் வெள்ளைக்காரனிடமிருந்து உத்தியோகமும், பதவியும், அதிகாரமும், கொழுத்த சம்பளமும் பார்ப்பனர்களுக்குக் கிடைப்பதற்காகவே காங்கிரஸ் கட்சி இருந்து வந்தது. போட்டியாக ஜஸ்டிஸ் கட்சி தோன்றியவுடன்தான் அவர்கள் தமது போக்கை மாற்றிக் கொண்டார்கள். நானும் அந்த மாறுதல் காங்கிரசுடனிருந்தேதான் போராடினேன். அந்த அனுபவம் காரணமாகவே சில காரியங்களையேனும் சாதிக்க விரும்பியே சில நாளி

லேயே காங்கிரசிலிருந்து வெளியேறினேன். அரசியலில் உழைப்பது மட்டும் பயன் அளிக்காது. உத்தியோகத்தால் மட்டும் மக்களுக்குப் பயனில்லை, அதுவும் உத்தியோகம் எத்தன்மைத்தான மக்களையும் மதிமயக்கமடையச்செய்யத்தான் செய்யும். அதனால் அஸ்திவாரத்தைத் திருத்தி அமைக்க நாம் சமுதாயத்துறையில் பணியாற்றுவதென முடிவு செய்துக் கொண்டே இறங்கினேன். சமுதாயம் என்றால் இந்து மத சமுதாயம், இந்துமத சமுதாயம் என்றால் அதாவது புராண சமுதாயம்தான் ஆகவே இங்கு நான் சமுதாயம் என்னும்போது "இந்து" சமுதாயத்தையேக் குறிப்பிடுகிறேன்.

1925-ம் ஆண்டில்

1925-ம் ஆண்டின் துவக்கத்தில்தான், நான் காங்கிரசிலிருந்து வெளிப்படையாகப் பிரிந்தேன், அரசியலின் பேரால் அப்போது காங்கிரஸ் மூலம் பார்ப்பனர்கள் செய்து வந்த பித்தலாட்டங்களை நான் நன்றாய் உணர்ந்ததால் அவைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி ஒரு வருடம் பணியாற்றினேன். ஓரளவு பயனுமடைந்தேன். எனினும் பொதுத் தேர்தல் 1926-ல் நடைபெற்றபொது ஜஸ்டிஸ் கட்சித் தோற்றுப் போய் விடவே, பின்பு சமுதாயம், மதம், புராணங்கள் இவைகளின் பேரால்தான் பார்ப்பனர்கள் இவ்வளவு அதிகாரமும், செல்வாக்கும் பெற முடிகின்றன என்பதை ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து மக்களிடையே அதுபற்றித் தீவிரப்பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினேன். அந்த எண்ணத்துடனே தான் சுயமரியாதை இயக்கத்தையும் ஆரம்பித்து 'குடிஅரசு' பத்திரிகையிலும் தொடர்ச்சியாக அவை சம்பந்தமான பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வந்தேன். சாதாரண மக்களுக்குப் புரியும்படியாகவும், அரசியல் வாதிகளும் ஓரளவு ஆதரவு

அளிக்கும் வகையிலும் படிப்படியாக எழுதிவந்தேன். காலப் போக்கில் இயக்கம் வளர்ந்தது. இப்போது அதாவது சமீப காலத்திலே அது திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றம் பெற்றவுடன் 'அரசியல்' தொடர்பையே அறுத்துக் கொண்டேன். தேர்தல், பதவி, கவுரவப் பட்டம் இவைகளை லட்சியம் செய்யாது அவைகளைத் துறக்கக்கூடிய 'தியாகங்களை'ச் செய்யக் கூடியவர்களையே கழகத்தில் சேர்த்துக் கொண்டேன் பட்டம் பதவி இவைகளை ஒதுக்கி உதவும் தியாக மனப்பான்மை, நாணயம், யோக்கியம் இவை உடையவர்களையே கொண்டதாக திராவிடர் கழகத்தை நாளாவட்டத்தில் திருத்தி அமைத்தேன்.

ஆங்கிலத்தில் வழங்கப்படும்— **Honesty is the Best Policy**— என்னும் பழமொழியே அதாவது நாணயம் என்ற சொல் 'யோக்கியதையினால் வளர்ச்சியடையும்' ஒரு திட்டத்தைக் குறிப்பதேயாகும். தியாகம் என்பது சுயநலத்திற்கு பலனை எதிர்பாராது, லட்சியம் செய்யாது, இன்னல்களுக்கும் தயாராகி, தொண்டாற்றுவது என்பதாகும். இந்த இரண்டு தன்மையும் திராவிடர் கழகத்தில் முக்கிய இடம்பெறச் செய்து இதற்கு மாறுபட்ட சுயநலக்காரர்களைக் கழகத்திலிருந்து ஓடும்படி செய்தேன். அதனாலேயே தான் நம் கழகம் இந்த உயர் நிலையை அடைய முடிந்தது.

மரியாதையும் மதிப்பும்

அன்றியும், அதனாலேயே நமது புரட்சிகரமான கருத்துகளுக்கும், பேச்சுக்களுக்கும் ஏகமாக ஆமோதிப்பு கிடைக்காவிடினும் எதிர்ப்பு இல்லாதபடி, நம்கருத்தைத் தவறு என்றோ, நடத்தையை அயோக்கியம் என்றோ எவரும் கூறாதபடி இயக்கத்தை மிக ஜாக்கிரதையாக வெற்றிகரமாக நடத்திவர—இருத்திவர முடிந்தது.

இதனாலேயேதான் நாட்டிலும் ஒரு அளவு மரியாதை யும் மதிப்பும் நம் கழகத்திற்கு-இருந்து வருகிறது. அதி காரிகளிடமும் எதிர்க்கட்சியார்களிடமும் மதிப்பிருந்து வரும் வகையில் பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனமாக நமது கழகத்தைக் கருதும்படியாகச் செய்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கெல்லாம் அது பதவியில் இருக்கும் வரையில்தான்; பதவி போய்விடின் யாரும் அக்கட்சியிலிரார். காரணம் காங்கிரசில் பதவிப்பித்தர் கள்—பணப்பித்தர்கள் தவிர மற்றவர்களுக்கு இடமில் லாமற் போய்விட்டது. ஆதலால் காங்கிரஸ் கட்சி பதவியில் இருக்கிறது, நமக்குப் பதவி கிடைக்கும் என்ப தற்காக அதில் பலரும் இருக்கிறார்களே அன்றி அதன் திட்டத்துக்காக அல்ல. அதில் திட்டமும் எதுவும் இல்லை. பதவி அதிகார மோகம் காரணமாகவே கட்சியில் திறமைக் குறைவோ அதனால் நாணயக் குறைவோ ஏற்படும்போதெல்லாம் அவை வெளியே தெரியாதவாறு திரையிட்டு மறைக்கப்பட்டுவருகின்றன.

வேறு கட்சிகள்

நாட்டில் வேறு கட்சிகள் எதுவுமில்லையா என்றால் கம்யூனிஸ்ட் கட்சி என்பதாக ஒரு கட்சி இருக்கிறது. என்றாலும் அதிலும் வசதிக்காக – வாழ்வுக்காக அதில் பெரும்பாலோர் இருப்பதால், அதோடு பார்ப்பன ஆதிக் கமும் அதில் தலைசிறந்து இருப்பதால், அவர்களின் நிலைமை இப்போது மக்களுக்கு நன்றாய் வெளியாகி விட்ட அக்கட்சியின் நிலையைக் கவனித்தால் இன்று அதன் முக்கியஸ்தர்களுக்குப் பலனளிப்பதாக இருக் கிறதே அன்றி, பாமர ஏழை தாழ்த்தப்பட்டோர்; சேரிவாழ் மக்கள் இவர்களுக்கு அதில் பலனேதும் கிடைக்க வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. தாழ்த்தப் பட்டவர்களும் சேரிவாழ் மக்களும் சமூக உயர்நிலைக்குத் திருந்தவோ அல்லது பிற மக்களுடன் சமநிலை அடை

யவோ அக்கட்சியினரிடம் திட்டம் வசதி இல்லை. அதற்கேற்பவே அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் சமீப காலத்தில் தலைதூக்கும் வகையிலும் அதன் வேலைகள் தோன்றவில்லை. ஆகவே; உருப்படியாக இருப்பது திராவிடர்கழகம் ஒன்றுதான். இந்துமகாசபை இருக்கிறது; தமிழரசுபோன்ற பல கழகத்தினர் இருக்கிறார்கள். ஆனால் தமிழரசுக் கழகத்தினர் தமிழ்நாடு பிரிவினை என்றதுமே அவர்களுக்கு ஒரு தரும சங்கடம்—தொல்லை ஏற்பட்டிருக்கிறது! ஆகவே பிழைப்புக்கு ஒரு வாய்ப்பாகவே தமிழரசுக் கழகமும் இந்துமகா சபையும் இருந்து வருகின்றன. பிரஜாகட்சி, சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி முதலியன எல்லாம். அதிலிருப்பவர்கள் தத்தமக்குப் பதவி வாய்ப்புக்காக ஏற்படுத்திக்கொண்டவைகளே தவிர அடிப்படையில் காங்கிரசுக்கு மாறுபட்ட தனித்த ஒரு லட்சியம்—நோக்கம் கொண்டன அல்ல. தேர்தல் காலங்களில் வோட்டு வேட்டைக்கு சுயலாபத்துக்கு கட்சிகள் இருக்கின்றன; அதற்கே பயன்படுகின்றனவே தவிர உருவான—நிலையான கட்சிகள் கிடையாது. எந்தக் கட்சியான் பேரைச் சொன்னாலும் "ஆகா! அவனப்படியா?" என்று மக்கள் சொல்லிப்போகும் வகையிலிருக்கிறது.

மக்கள் மதிப்பதேன் ?

நாம் மக்களிடை விழிப்பையும் உணர்ச்சியையும் ஊட்டுவதால் நம்மை மதிக்கிறார்களா இல்லையா என்றில்லாவிடினும், அவர்களுக்குள் ஏமாற்றப்படாத வகைக்கு நம் செயல்கள் பலனளித்து வந்துள்ளன. ஆக நாம் இவ்வித வசதிகளை மட்டும் கொண்டு பயனில்லை என்பதாலே, காரியம் ஏதேனும் சாதிக்க, நம்மீது மக்கள் கொண்டுள்ள உறுதி-நம்பிக்கை இவைகளைக் கருதும் போது எதையாவது சிந்திக்கவேண்டியவர்களாகிறோம்.

சிந்தித்து ஏதேனும் செய்தும் வருகிறோம். அவ்விதம் செயலாற்றியதன் பயனாக சென்ற சில வருடங்களில் முன்னேற்றமும் கண்டு வருகிறோம். இந்த முன்னேற்றத்தை தீவிரமாக்கவேண்டும். இது காரணமாகவே இன்றைய அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கிறோம். இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்கு அரசியல் துறையில் இருந்து ஒதுங்கியிருந்து பின்னர் பார்க்கலாம் என்று கருத்துக்கொண்டிருக்கிறோம்.

புராண ஒழிவு

புராணங்களை ஒழிக்கும் வகையாக புராணங்களையும், மனுதர்ம சாஸ்திரத்தையும் எரிப்பதற்கும் 15–20 ஆண்டுகளுக்கு முன்பே திட்டம் கூறினோம். அந்தப்படி எரித்தோமோ இல்லையோ அது வேறு விஷயம். நமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டோம். இன்னும் சொல்லப்போனால் அந்தக் காலத்தில் "குடிஅரசு" இதழ்களில் எழுதியிருந்தவை எல்லாம், இன்றைக்குப் பொருந்தக் கூடியனவாக உள்ளன. அந்தக் காலத்திலே காங்கிரசிலிருந்து "ராஜினாமா" செய்த சில தலைவர்கள் எல்லாம் "காங்கிரஸ் தேச விடுதலைக்காகப் பாடுபட்டு வருவதால் அதற்கான முதல் முயற்சி என்பதாக இந்நாட்டு மக்களுக்குள் பிறவியின் காரணமாக இருந்துவரும் உயர்வு தாழ்வுகளை, சமுதாய இழிவுகளைக் களையவேண்டும்" என்பதாகத் தீர்மானித்த லட்சியத் தீர்மானத்தைச் சிதைக்க வேண்டும் என்பதற்காகவே ராஜினாமா செய்தார்கள்.

மற்றொரு சமயம், புராணங்களை எரிப்பது என்பதான திட்டத்தின் விளைவாக இராமாயணம், கந்த புராணம் இவைகளை எரிப்பதென்று தீர்மானித்தோம். உடனே புலவர்களும், பண்டிதர்களும் இராமாயணம், கந்தபுராணம் இவைகளில் உள்ள ஆபாசங்களை

ஒத்துக்கொண்டு, ஆனால் "இராமாயணம் கந்தபுராணம் இவைகளை இலக்கியங்களாகப் பாவியுங்கள்; புராண மாக மதிக்காவிடினும் பரவாயில்லை" என்றார்கள். நாம் மறுத்ததும் சிலர் கழகத்தை விட்டு விலகினார்கள். இன்று மற்றொருபடி முன்னேறி விக்கிரகங்களை உடைக்கத் தீர்மானித்திருக்கிறோம். இத்தீர்மானங் களின் அவசியத்திற்கு, நமக்கு நல்ல பலமான ஆதா ரங்கள் இருக்கின்றன.

துணிவு ஏற்பட்டதேன் ?

இந்த ஆதாரங்கள் யாவும் வேத சம்பந்தமானவை களாக அதுவும் டாக்டர் முன்ஷி, நீதிவாதி டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார், முதலியோர் தலைமையில் எழுதப்பட்டு வெளியாகிவரும் ஆதாரங்களிலேயே இருக்கின்றன. இவர்கள் சமீப காலத்தில் **இந்திய சரித்திர கலாசார ஸ்தாபனம்** என்பதாக ஒரு கழகத்தை நிறுவி, இந்தியாவின் சரித்திரத்தைத் திருத்தி எழுதி வருகிறார்கள். மொத்தம் எட்டுத்தொகுப்புகள் தயா ரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இதுவரை 2 தொகுப்புக் களைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது முதலாவது தொகுப்பில் **வேத காலம்** வரை இந்தியா வின் கலாச்சார வரலாற்றை வெளியிட்டிருக்கிறார்கள். எதற்கு ஆக என்றால் இந்நாள்வரை வெளியிடப்பட்டு- கற்பிக்கப்பட்டுவரும் சரித்திரம் ஒரு சார்பாகவே இருப்ப தாகக் கூறியிருக்கிறார்கள். என்றாலும் அமெரிக்க பிரிட்டிஷ் சரித்திராசிரியர்களும், என்சயிக்ளோ பீடியா என்ற ஞானக்களஞ்சிய நூலும் மற்ற ஆராய்ச்சி யாளரும் எழுதியிருப்பது போலவேதான் இந்த முன்ஷி வகையறாக்கள் அவைபற்றி எழுதியிருப்பதும் இருக் கின்றன. இவைகளைப் பார்த்த பிறகு நம்முடைய தெனக் கூறப்படும் வேத புராணங்களின் ஆபாசங் களை வெளியிடுவதில் மேலும் துணிவு எனக்கு ஏற்பட்

டிருக்கிறது. அக்கருத்து காரணமாகவே, இதுபோழ்து "வேதமும் வேதக் கடவுள்களும்" என்னும் பொருள் பற்றிப் பெரிதும் அதை அனுசரித்தே பேசலானேன்.

நம்மைப் பிரித்து வைத்துள்ளவை

வேதம், மதம், கடவுள்கள் எனப்படும் மூன்றாலுமே நம்மை, நாம் அனைவரும் இந்துக்கள் என்ற ஒரே சமுதாயப் பட்டிக்குள் திணிக்கப்பட்டிருக்கிறோமெனினும் பலபடியாகப் பிரித்து வைக்கப்படிருக்கிறோம். இந்து மதத்தினராக உள்ள நாம் சுமார் 25 கோடி இந்துக்கள் இருப்பினும், நாம் யாவரும் இந்தக் கடவுள்களினால், மதத்தினாலேயே ஒன்றுப்படுத்தப்படவில்லை.

"இந்து மதம் என்று ஒரு மதமே இருந்தது கிடையாது எனக் காலஞ்சென்ற காந்தியார் உட்பட, பல ஆராய்ச்சிக்காரர்கள் கூறியிருக்கிறார்கள். மதத்தினாலேயே நாம் ஒன்றாயில்லை, கடவுளினாலும் நாம் ஒன்றாயில்லை. பலகோடிக் கடவுள்கள் இந்து மதத்தினருக்குக் கற்பிக்கப்பட்டுள்ளனர். அவைகளில் யாவருக்கும் ஒன்று என்பதாக ஒன்றுகூட இல்லை. சாஸ்திரத்தின் பேராலும், வேதத்தின் பேராலும் இந்தியாவில் உள்ள இந்துக்கள் ஒன்றுபட்டவர்களாக இல்லை. அதை விடுத்து சென்னை மாகாணத்தில் தமிழ்நாட்டில் உள்ள "இந்து"க்களாகிய நாமாவது எதனாலாவது ஒன்றுபட்டிருக்கிறோமா என்றால் அதுவும் இல்லை. முதலாவது, வேதத்தில் இருப்பவை என்ன என்றே நமக்குத் தெரியாது. ஏனெனில் நாம் தான் வேதத்தைதப்படிக்கவோ பக்கமிருந்து கேட்கவோ கூடாதே! தெரிந்தவரை ஆபாசங்களும் கேடுகளும் அதிலிருக்கின்றன என்று கண்டிருக்கிறோமே தவிர

நமக்கு முறையாக வேதம் கற்பிக்கப்பட்டிருக்கிறதா? ஏன் அதை நாம் பார்க்கப் படிக்க நேர்ந்தால் அதன் அசிங்கம் நமக்கு விளங்கிவிடும், அன்றியும் நம்மை இழிவுபடுத்தவும் ஒழிக்கவுமே வேதசாஸ்திரம் மதம் கடவுள்கள் இருக்கின்றனவே தவிர அவைகளில் நம் நலத்திற்கென்று ஒன்றுமே இல்லை என்பதும் விளங்கி விடும்.

சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், வருணன், ருத்திரன், அவன், இவன் என்று பெயர்களும் உருவங்களும் இருக்கின்றனவே தவிர காட் (God) அல்லா, கடவுள் என்பதாக ஒன்று நமக்கு இல்லை. சொல்லப் போனால் கடவுளுக்குத் தமிழில் ஒரு சொல்லே நமக்கு இல்லை. இந்தக் கடவுள் என்ற சொல் இடைக் காலத்தில் தமிழில் புகுந்ததுதான். சரித்திரம் காணாத கால முதற்கொண்டே நாகரீக வாழ்வில் திளைத்திருந்த நாம், ஒரு பெரிய சமுதாயம்—தனக்கென வேதம், மதம், கடவுள், சாஸ்திரம், கொள்கை இவைகள் இல்லாமல் அண்டிப் பிழைக்க வந்த ஒரு நாடோடிக் கூட்டத்தாரின் பிரசாரத் தந்திரத்துக்கு ஆளாகி கூத்தடிக்கிறோமே தவிர, வேதனைக்காளாகிறோமே தவிர வேறென்ன?

ஆரியர் திராவிடர் என்னும் இரு இனப் பிரிவுகளை இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தவிர சர்வ சகல கட்சியினரும், அமெரிக்க-பிரிட்டிஷ் வரலாற்று நூலாசிரியர்களும், இந்தியாவின் காங்கிரஸ் தலைவர் பிரதம மந்திரி பண்டித நேரு உட்பட ஒத்துக்கொள்ளுகின்றனர், நாம் கூறும் ஆரியர், திராவிடர் பிரச்னை ரத்தப் பரிசோதனையின் விளைவாக அல்ல; கொள்கைகளினால்- கலாச்சாரத்தினால், பழக்க வழக்கங்களினால்,-பிரிக்கப்பட்டிருக்கும் பேதத்தினால் கூறுகிறோம். மற்றபடி ஆரியரும் திராவிடரும் பெரும் அளவுக்கு இரத்தத்தினால் கலந்து விட்டனர் என்பதை நாம் மறுக்க முன்வரவில்லை.

ஆரியர்கள் யார்

ஆரியர்கள் என்போர் யார்? என்சைக்ளோபீடியா என்ற சர்வபொருள் விளக்க நூலும், வேத நூல்களும், ஆராய்ச்சி உண்மை ஆதாரங்களும் சொல்லுவதென்ன?

பர்ஷியா என்னும் பாரசீகத்தில் இருந்தவர்களே ஆதியில் பெரிதும் ஆரியர்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது இவர்களுக்குள் இரு கட்சிகள் இருந்ததாகக்கூறப்படுகிறது: அதாவது ஒரே இனத்தவர் எனினும் இங்கு உள்ள சைவர்கள் வைணவர்களைப்போல, ஒரு சாரார் தேவர்கள் என்றும், மற்றவர்கள் அசுரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களுக்குள் உயர்வு தாழ்வு கிடையாது எனினும் கொள்கைத்துறையில் மாறுபட்டிருந்தனர். வானம், தீ முதலிய பிரகாசம் என்னும் பொருளைக் கொண்டதான வான ஒளி என்ற தத்துவத்தின் மீது தேவர்கள் வழிபாடு, கொண்டிருந்தனர். மற்றவர்கள் இதற்கு மாறுபட்ட இயற்கைத் தத்துவத்தைக் கொண்டிருந்தனர், இவர்களுக்கு அசுரர் என்ற பெயர் இருந்து வந்தது. அசுரர்கள் மது மாமிசம் சாப்பிடாதவர்கள். கொலை பலி வெறுப்பவர்கள்.

தேவர்கள் மது, புலால், ஒழுக்கக் குறைவு கொலைத் தொழில் முதலியவைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆதலால் அது காரணமாக அசுரர்கள் தேவர்களை வெறுத்து விரட்டி விட்டனர்.

வசவே வேதம்

விரட்டப்பட்டு ஓடியவர்கள், விரட்டியவர்களை எவ்வளவு கீழ்த்தரமாகவும் இழிவாகவும் பேச முடியுமோ அவ்வளவும் செய்துகொண்டு வெளியேறி பலநாடுகளைச் சுற்றிவிட்டு, இறுதியாக இந்தி நதி (சிந்து நதிக் கரை

வந்தடைந்து, சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு, தம்மை விரட்டியவர்களை மேலும் தொடர்ந்து வசை பாடலாயினர். இந்தியாவிலும் அவர்கள் கண்ட மனிதர்கள் அவர்களது நாட்டு "அசுரர்" களைப் போலவே உயர்ந்த தத்துவத்தினராக இருந்த இவர்களை வெறுக்கவே அவர்களையும் அசுரர் என்றே கருதி, அவர்களை வைவது போலச் சபிக்கும் காரியத்தை இவர்கள் மீதும் செய்து வந்திருக்கின்றனர். அந்த வசவே தான் வேதமாயிற்று இவ்விதம் பாரசீகத்தில் இருந்து வந்த ஆரியர்கள் இந்தியாவிலும் குடியேறி கண்ணுக்குக் காணும் சூரியன், சந்திரன், தீ, தண்ணீர் முதலிய இவை களையே கடவுள்களாக்கி, அவைகளின் எண்ணிக்கை 33 ஆக ஆக்கினர். இவை எல்லாம் டாக்டர் முன்ஷி முதலியோர் தீட்டியிருக்கும் ஆதாரம் முதலியவைகளில் இருந்தும் உறுதிப்படுத்தப் படுகின்றன. இந்த 33 கடவுள்களில் இன்று கூறப்படும் சிவன் இல்லை; **விஷ்ணு** என்பவனைத் தங்கள் இனபாதுகாப்புத் தேவனாக, ஆபத்துக்களை அகற்றக் கோரித் துதி பாடுவதற்காக ஏற்படுத்தியிருந்தனர் **ருத்திரன்** என்றொரு கொடுமையான குணத்தைக் கொண்ட தேவராக ஆரியர் ஒரு தேவரைக் கொண்டிருந்தனர்.

இங்கு வந்த பின்பே ஆரியர்கள் ருத்திரன் என்ற தேவனை, சிவன் என்று பெயர் மாற்றி, அதை முக்கிய தேவனாக்கி, வேதத்தில் மிகச்சாதாரண பிந்திய தேவனாக இருந்த விஷ்ணுவையும் முக்கியத்துவம் அளித்து நாளாவட்டத்தில் அவைகளையும் கடவுள் களாக ஆக்கி வந்திருக்கின்றனர். ஆயினும் **பிரம்மா** என்பதாக ஒரு கடவுள் வேதத்தில் காணப்படுவதில்லை. இவைகளையே நாளடைவில் விருத்தி செய்து சிவனின் பிள்ளைகள் என்றும், விஷ்ணுவின் அவதாரம் என்றும் பலரை உற்பத்தி செய்து தசாவதாரம், புராணக் கதைகள் என்பவைகளையும், கடவுள்களுக்கு புத்திரர்க

ளையும் உண்டு பண்ணினர். இவர்களெல்லாம் கடவுள்கள் அல்லர்; பெரிதும் தேவர்களும் அல்லர், தேவர்கள் என்றால் பிரகாசமாக வானத்தில் இருப்பது என்பது அவர்கள் ஆதாரக் கருத்து.

வேத காலம் தெரியாது

வேதங்களுக்கும் காலம், கர்த்தா, குறிப்பிட்ட கருத்து, முதலிய எதுவுமில்லை என்கிறார்கள். வேதம் ஏற்பட்ட காலம், எழுதியவர், அல்லது ஏற்படுத்தியவர் யார் என்று ருசுப்பிக்க ஆதாரங்கள் எதுவுமில்லை; ஆனால், இப்போதுகூறுகிறார்கள் 'காலப்போக்கில் தொகுக்கப்பட்டவை' என்று. இதையே இக்காலத்தில் உலகெங்கும் நிகரற்றது, சகல மதத்தையும் தழுவியதென்கிறார்கள். சங்கரர், ராமானுஜர், மாத்துவர் உட்பட ஆஸ்திகர் நாத்திகர்களும் பிறரும் தத்தமது ஆஸ்திக நாஸ்திகமான பலவிதக் கொள்கைகளை மதங்களாக வேதத்திலிருந்தே அவரவர் கருத்துக் கேற்ப விளக்கம் தந்து அமைத்திருக்கிறார்கள். இளைக் கடவுள்களையும் அவதாரங்களையும் கொண்ட புராண இதிகாசங்கள் யாவும் ஒரே கருத்தில்தான்— அதாவது ஆரியர் திராவிடப் போராட்டத்தின் மீதே ஏற்பட்டிருக்கின்றன.

அடிமைப் படுத்தும் தத்துவமே

திராவிடர்கள் என்றென்றைக்கும் தலைதூக்காதுபடி செய்யும், நிரந்தரமாக ஆரியர்க்கு அடிமைப்பட்டிருக்கச் செய்யும் தத்துவமே புராண இதிகாசங்களின் தத்துவங்களாகும். சைவம் வைணவம் எல்லாமே இதே நோக்கம் கொண்டவை. திராவிடர் ஒழிப்பே அந்த நோக்கமாகும். இங்கு கண்டவர்களையும் நமது நாட்டு அசுரர்கள் என்றே கருதி, ஆரியர்கள், திராவிடர்களை சூழ்ச்சிப்போரில் வென்று, அவ்வெற்றி தேவர்களால்

ஏற்பட்டதென்று கருதி அத்தேவர்களையே அவதாரங்களாக்கி, அவற்றை நமது கடவுள்களாக ஆக்கிவிட்டனர். நமது நாட்டிலாரம்பிக்கப்பட்ட போராட்டத்தை —அவர்கள் வெற்றி பெற்றதும் பல உருவில் கதைகளாக்கி அக்கதைகளைப் புராணங்களாக்கி விட்டனர். அக்கதையில் வந்த பாத்திரங்கள் எல்லாம்தான் கடவுள்களாக்கப்பட்டன.

இன்று

மக்களுக்கு இன்று உணர்ச்சி வந்து விட்டதால் ஆரியர்கள் நம்மை அசுரர்கள், ராட்சதர்கள் என்று நேரில் கூறாமல் இருக்கின்றனர். என்றாலும் அந்த வெறுப்புடன் தான் நம்மை நடத்துகிறார்கள்.

தேவர் — ஆரியப் பார்ப்பனரே

தேவர்கள் என்னும் ஆரியர்களை அதாவது பார்ப்பனர்களைப்பற்றி அவர்கள் நன்றாக எழுதிவைத்துக் கொண்டு இருக்கிறார்கள் திராவிடர்கள் போரில் தமக்குச்செய்த கொடுமைகள் காரணமாகவே **மனுதர்மம்** என்பதாக தமது வகுப்புக்கு ஒரு தனி அடக்குமுறை நீதிநூல் உண்டாக்கி அதை மத ஆதாரமாக ஆக்கி விட்டார்கள். அந்த நூலில் யாகத்தின் பெயரால் "திராவிடர்களைக் கொள்ளையடி" என்றும், "பலாத்காரமாய்ப் பொருளைப் பிடுங்கிக்கொள்" என்றும், ஆரியர்கள் எழுதியிருக்கிறார்கள். வசதிப்பட்டபோது திராவிடர்களும் ஆரியர்களை வெளுத்திருக்கிறார்கள், இக்கால மலைவாசிகள் யுத்தமுறை போன்று. என்பதும் வேதத்தினால் விளங்குகிறது.

பெண் வேடத்தில் ஏமாற்றினர்

கஷ்டங்கள் நேர்ந்த காலத்தில் எல்லாம் பெண் வேடத்தில் ஆரியர்கள் திராவிடர்களை ஏமாற்றியிருக்

கிறார்கள். தமது இனப் பெண்களென்பதற்குப் பதிலாக சிவன், விஷ்ணு பெண் அவதாரம் என்பதாகத் திரித்து எழுதியிருக்கிறார்கள். ஆக தந்திரம், சூது காரணமாகவே பல சாதனைகளைச் செய்திருக்கின்றனர். இது சம்பந்தமான கதைகளை எழுதும்போதும் ஆபாசங்களையும் மோசமானவைகளையும் அவர்கள் செய்யத் தயங்கவில்லை. நமக்கு வணக்கம் வழிபாடு இவைகட்கு உரியதாக புராணம்—கடவுள்களை ஏற்படுத்திப் பார்ப்பனர்களுக்கு என்றென்றும் சுலபமான வகையில் சுகமாக வாழ வழி செய்துள்ளனர்.

தங்களுடைய ஆபத்துக்காலத்தில் புராண தந்திரங்கள் பயன்படவேண்டியே புராணப் பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும், கடவுள்கள் திருவிழா, பண்டிகைகளாகக் கொண்டாடுமாறு செய்துவிட்டனரே அன்றி, நமக்கு என்று ஒரு தனிக் கடவுள் எதுவும் இல்லை. நம் கடவுள்கள் என்பனவெல்லாம் நம் பொருளையும் பணத்தையும் பார்ப்பனருக்குப் பிடுங்கிக் கொடுக்கவே இருக்கின்றன.

கந்தபுராணமே இராமாயணம்

இன்னும் சொல்லப்போனால், கந்தபுராணமே, ஆரியர் திராவிடர் போராட்டத்திற்குப்பின் கற்பனை செய்யப்பட்ட முதல் கதையாகும். இதுபோலவே இராமாயணம் முதலியவையுமாகும். இராமாயணத்தில் பலவகை இராமாயணங்கள் இருக்கின்றன. அதன்படி பார்த்தால் இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம் என்றிரு காண்டங்களுடன் முடிகிறது இராவணன், இலங்கை, அனுமார், சீதை, வனவாசம் முதலியன எல்லாம் அவைகளில் இல்லை. பிற்பாடு கந்தபுராணத்தைப் பார்த்து விஷயங்கள் கற்பிக்கப்பட்டு அதில் சேர்க்கப்பட்டவைகளேயாகும். கந்தபுராணத்

துக்கு அந்தக் காலத்திலிருந்த செல்வாக்கைக்கண்டு அதற்குப் போட்டியாக இருக்க, பிற காண்டங்களை இராமாயணத்தில் சேர்த்தனர். பெயர்களை மாற்றி யமைத்தனரே அன்றி, மற்றபடி "கந்த புராண நிகழ்ச்சி களை காரண கதைகளை அப்படி அப்படியே இராமா யணத்தில் சேர்த்துள்ளனர். இராமாயணத்தில் அயோத் தியா காண்டம்வரை உள்ளவை மட்டுமே" "இராமாவ தார சேதிகளாகும்" இராமாயணத்தில் கந்தபுராண நிகழ்ச்சிகளைக் காணலாமேயன்றி கந்தபுராணத்தில் இராமாயணத்தைக் காணமுடியாது. அதனால் இராமா யணமானது கந்தபுராணத்தைப் பார்த்து, பின்னிட்டு உண்டாக்கப்பட்டது என்பதில் சந்தேகமே கிடையாது. ஆராய்வரேயாயின் பண்டிதர்களுக்கே இந்த உண்மை நன்கு தெரியும்.

ஆச்சாரியாரே கூறட்டும்

சிவன்—விஷ்ணு அவதாரங்கள் யாவும் ஆரியர்—திராவிடர் தேவர்—அசுர போராட்ட அடிப்படையில், ஆரியர்—தேவர் பாதுகாப்புக்கென, திராவிட அசுரர் களைக் கொன்று உண்டாக்கப்பட்டவைகளேயாகும். ஆக எல்லாம் இந்த ஆரியர்—திராவிடர் போராட்டம் என்பதாக இருக்கிறதேயன்றி, நமக்குக் கடவுளென யாதிருக்கிறது? கடவுளின் பிரதிநிதியாக வக்காலத்து வாங்கிக் கொண்ட தன்மையில் பேசி வரும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்தான் கூறட்டுமே!

நம்மைப் பார்த்து பலர் "ஆபாசங்களை மட்டும் காண்கிறீர்களே, நல்லவைகள் ஏன் உங்கள் கண் களுக்குத் தெரிவதில்லை" என்கிறார்கள். நல்லது ஏதேனும் இருப்பதாக உங்களுக்குத் தெரிந்தால்

தெரிவியுங்கள் என்றால் யாரும் வாய்கூடத் திறப்ப தில்லை. ஆபாசங்களை நீக்கி எழுதுங்களேன் என்றா லும் எதுவும் பேசுவதில்லை.

ஆறுமுகன் பிறப்பு

ஆறுமுகம் என்னும் சுப்பிரமணியக் கடவுளின் பிறப்புப்பற்றி கந்தபுராணத்தில் கூறப்பட்டிருப்பதைத் தான் பாருங்கள். தேவர்கள், தங்களுக்கு அசுரர்கள் தொல்லை கொடுத்து வருவதாகவும், அசுரர்களை அழிக்க வழி செய்தாகவேண்டும் என்றும் சிவனார் என்னும் கடவுளிடம் முறையிட்டார்களாம். சிவனாரும் ஒரு புத்திரனைத் தோற்றுவிக்கவேண்டி தமது தேவி யார் பார்வதியுடன் கர்ப்பகோடி ஆண்டு கலவி செய்தா ராம். இவர்களது கலவி காலம் கழிந்து அவதாரம் தோன்றுமுன் தேவர்கள்—அசுரர்கள் பேதமே தெரியா தொழிந்துவிடுமே என்றஞ்சி, தேவர்கள் சிவனாரை அணுகிக் கலவியை நிறுத்துமாறு வேண்டினராம். "கலவியை இடையில் நிறுத்துவதாயின் வெளிப்பட்ட இந்திரியம் என்னாவது" என்று சிவனார் கேட்க, தேவர்கள் தாங்கள் ஆளுக்குச்சிறிதளவாக உட்கொண்டு விடுவதாக ஒப்பி அவ்விதமே செய்ய, அதன் பயனாக, தேவர்கள் அனைவரும் கருவுற்றனராம். ஆண்கள் இந்திரியத்தை வாய் வழியாக உட்கொண்டு கருவுற்றன ராம். தேவர்கள் எதிர்பாராத இவ்விளைவைக் கண்டு அஞ்சி மறுபடியும் சிவனாரையே அணுகித் தமது கரு கலைய வழி கேட்டனராம். அவரும் ஒரு குளத் தைக்காட்டி அதில் நீராடச் சொன்னாராம். தேவர்கள் அவ்வாறே செய்து தமது கர்ப்பத்தைக் குளத்தில் சிதைத்துக் கொண்டனராம். இவ்விதம் சிதைவான கருப்பாகங்கள் குளத்தில் ஆறு குழந்தைகளாகினவாம். அவைகளைச் சிவனார் ஒன்று படுத்தி ஆறுமுகம் என் றாக்கினாராம். இவனே பிற்காலத்தில் சூரபத்மன்

என்ற திராவிட அரசனைச் சூதினால் அழித்தான் என்று புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எல்லாம் ஆபாசக்கதைகள்

இப்படியாகப் புராணங்கள் ஒவ்வொன்றிலும் ஆபாசக் கதைகள் நிரம்பியுள்ளன. பாகவதம் முதலிய பிற்பட்ட காலத்திய நூற்களில்தான் என்ன ஒழுக்க மிருக்கிறது? ஆக ஆரியர்-திராவிடர் போராட்டத்தைச் சமாளிக்க அவ்வப்போது ஏதேதோ செய்து இருப்ப தாகவே அறிகிறோம்.

மச்சாவதாரம்

தசாவதாரங்களுள் முதலாவதாகச் சொல்லப் படும் மச்சாவதாரத்தை எடுத்துக்கொள்ளுங்களேன்; வேதத்தை யாரோ ஒரு அசுரன் சுருட்டி எடுத்துச் சென்று சமுத்திரத்துள் மறைத்து வைத்துவிட்டானாம். அதை மீட்டுவர விஷ்ணு மீன் அவதாரமெடுத்தாராம். வேதத்தை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்தான் அசுரன் என்றால் என்ன பொருள்? அந்த நாட்களில் காகிதம், ஓலைச்சுவடி, அச்சுக்கூடம், அல்லது பேனா—பென்சில் எதுவும் கிடையாது. அதனாலே வேதம் புத்தகமாக அல்லது ஓலைச்சுவடியாக இருந்திருக்கமுடியாது. அப்படியானால் அதை எவ்வாறு தூக்கிச்சென்று மறைத் திருக்கமுடியும்? வேதம் அந்நாட்களில் வெறும் வாய்ச் சொல்லாக உள்ளத்திலே இருந்த ஒரு பொருளாகவே இருந்து வந்தது. அதை மறைப்பதெப்படி? அதாவது வேதப் பிரசாரம் கூடாது என்பதாக திராவிட அரசன் ஒருவன் கண்டித்து ஆட்சேபித்திருக்கவேண்டும். அதற்குத் தடுத்தான் என்றுதானே பொருள்? தந்திர மாக அவ்வரசனை அசுரனாக்கிக் கொலைசெய்து, வேதத்தைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்

என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். ஆகவே அந்தக் காலத்திலேயே வேதத்திற்குச் சரியான சட்ட விரோதமாகக்கூட எதிர்ப்பும் இருந்திருக்கிறது.

வராகவதாரம்

வராகவதாரத்தின் லட்சணத்தைப் பார்த்தாலும் ஆபாசம் புரிகிறது. பூமியை அதாவது உலகைப் பாயாகச் சுருட்டி ஒரு அசுரன் கடலுக்குள் ஒளிந்து விட்டானாம். பூமியின் வடிவம் உருண்டை என்ப தாக நில நூல் வல்லுனர் கண்டிருக்கின்றனர். அப்படி யானால் பூமியைச் சுருட்டுவதெப்படிச் சாத்தியமாகும்? மேலும் எங்கிருந்து கொண்டு சுருட்டினான்? சுருட்டிய வனும் பூமிக்குள் அகப்பட்டிருக்கவேண்டுமே சுருட்டி யதைக் கடலுக்குள் ஒளித்து வைத்தானாம். பூமி அல்லது உலகம் எனும்போது கடலும் அதிலடங்கியது என்பதைப் புராணம் எழுதியவன் மறந்திருக்கவேண்டும் அல்லது அறியாதிருக்கவேண்டும்.

மற்றவை

அதே போலத்தான் நரசிம்மன், பரசுராமன், பல ராமன், இராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரங்களும் இருக்கின்றன.

பரசுராமன், இராமன்; இவ்விரு அவதாரங்களும் ஒரே கடவுளின் அவதாரங்களெனப்படும் இவை ஒரே காலத்தில் இருந்து ஒன்றை இன்னொன்று எதிர்ப்பதும், போரிட்டுத் தோற்கடித்ததுமாக எழுதப்பட்டுள்ளது. இதேபோல பரசுராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகிய மூன்று அவதாரங்களும் ஒரே காலத்தில் இருந்து செயல் புரிந்ததாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

வேத எதிர்ப்பு

சுருக்கமாகச் சொல்லப்போனால் வேத எதிர்ப்பு என்ற சங்கதிதோன்றியது இன்றுநேற்றல்ல. "ஈரோட்டு ராமசாமியும், திராவிடர் கழகமும் தோன்றிய காலத்தி லல்ல; புராண காலத்திலேயே வேதம் வெறுக்கப்பட்டு வந்திருக்கிறது என்று தெரிகிறது; மற்றபடிவேதத்தை ஏன் படித்தாய்? என்ன படித்தாய்? என்பது அக் காலத்தே தெரியாது. காரணம் அது குறிப்பிட்ட ஒரு வகுப்பாரிடையே வாய்மொழியாக, உள்ளத்தில் ஒரு கருத்தளவிலேயே இருந்து வந்திருக்கிறது என் றாலும், இராவணன், இரணியன் ஆகியோர் வேதத்தை முழுவதும் படித்ததினாலேயே அவர்கள் வேதத் திற்கும் யாகத்திற்கும் தேவர்களுக்கும் பிராமணர் களுக்கும் விரோதிகளானார்கள் என்பதாகத் தெரிகி றது. இக்காலத்திலேயும் வேதம் பாதுகாப்புக்கென தோழர்கள் ராஜகோபாலாச்சாரியாரும், வக்கீல் வெங்கட் ராம சாஸ்திரியாரும், சர். சி. பி. ராமசாமி அய்யர், ஜட்ஜ் ஏ. எஸ். பி. அய்யர் போன்றாரும் முன் வருகின்றார்கள் என்றால், சு. ம. இயக்கம் வேதத்தைக் கொளுத்த வேண்டும் என்று சொன்ன பிறகுதான் வேதம் எப்படி, எதற்காக ஏற்பட்டது என்று திராவிடரில் யார் ஆராய்ச்சி செய்தார்கள்!

எந்த மொழியில்?

எந்த மொழியில் வேதம் ஓதப்பட்டு வந்தது என்றே சொல்ல முடியாது. சமஸ்கிருத மொழியே வேதகா லத்தில் கிடையாது. சமஸ்கிருதம் என்று தனிமொழியே இருந்ததில்லை. அந்தக்காலத்திலே ஆரியர்கள் பேசிக் கொண்டிருந்த மொழி பலமொழி, மலைவாசி மொழி கள். அப்படிப்பட்ட சகல மொழிகளையும் கிரமப் படுத்தி அதைச் சமஸ்கிதம்-சமஸ்தத்தையும் ஒன்றாக்கிய

மொழி என்றாக்கினர்கள். சமஸ்கிருதம் என்ற பதத்துக்கு அர்த்தமே அதுதான். அப்படி செய்யும்போது திராவிட மொழிகளிலிருந்தும் பல சொற்களை ஆரியர்களெடுத்துக் கொண்டனர். ஆனால் அச்சொற்களின் ஒலியை மட்டும் சிறிது மாற்றியமைத்துத் தனிமொழி போலத் தோன்றுமாறு செய்து விட்டனர் என்பதாக என்சயிக்களோபீடியா என்னும் சர்வ பொருட்களஞ்சியம் கூறுகிறது.

தமிழ்ப் புலவர்கள்

இங்குள்ள நமது தமிழ்ப் புலவர்கள் எனப்படுவோர் தமிழை பிழைப்புக்காக கற்று வைத்துக் கொண்டு பாடு படுகின்றனரே அன்றி, தமிழ் மொழி வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சிக்கென இம்மியும் காரியத்தில் இறங்கியது கிடையாது. தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் என்பதாக தமிழிலும் கடவுள் பாடல்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளும் வேதத் தேவர்களைக் கடவுள்களாகக் கொண்டு, பிரார்த்தனைப்பாடல் பாடப்பட்டிருக்கின்றனவே அல்லாது தமிழர்களுக்கான கடவுள்களைக் குறித்து ஒரு சொல்லும் கூறுவதில்லை!

அகஸ்தியனைப் பற்றிய கூற்று

தமிழ்மொழி ஏற்பட்டதே அகஸ்தியன் என்னும் ஒரு குறு முனிவனால் என்றும் சொல்லுகிறார்கள் இது ஒரு சிறிதும் உண்மையல்ல என்பதோடு தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் வெட்கக்கேடு ஆகும். அகஸ்தியன் ஆரியக் கதைப்படி ஒரு ஆரியனாகும். ஆரியத்தைத்தெற்கே புகுத்த வடக்கிலிருந்து அனுப்பப்பட்டவன். அதாவது 'சிவனாருக்கும் உமையாளுக்கும் திருமணம் இமயமலையில் நடைபெற்றபோது, தென்னாடு உயர்ந்து விட்டது என்று தேவர்கள்

புகார் உரைத்தனராம்: தேவர்கள் என்றால் ஆரியர் கள்; பார்ப்பனர்கள் தாம். தென்னாடு உயர்ந்து விட்டது என்றால், தென்னாட்டு மக்கள் ஆரிய சூழ்ச்சிப் புராணக்கதைகளில் சிக்கிச் சீரழியாது முன் னேற்றமடைந்து விட்டனர் என்பதாக அர்த்தம். தெற்கே யாரையாவது அனுப்பி உயர்ந்துவிட்டவர் களை மட்டம்தட்டவேண்டும் என்பது ஆரியரது விருப்பம். இதற்குத் தகுந்த நபராக அகஸ்தியன் என்ப வரைத் தேர்ந்தெடுத்தனர் என்பதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

இந்த அகஸ்தியன் தெற்குநோக்கி வரும்போதே, அப்போதைய எல்லைப்பகுதியான விந்தியமலைக்கருகில் ஆரியர் பிரவேசத்தையும் ஆரிய மதப் பிரசாரத்தையும் தடுத்தொழித்துவந்த வாதாபி, வில்வலன் என்ற இரு திராவிட அரசர்களை இந்த அகஸ்தியன் என்பவன் சூழ்ச்சியால் வென்று கொன்றிருக்கிறான் என்று கூறப் பட்டிருக்கிறது. "தென்னாடு சென்று இராவணனைக் கொன்றுவா" என்றே அகஸ்தியனுக்குக் கட்டளை யிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த இராவணன் யார்? இராமாயண இராவணனா அல்லது வேறொருவனா என்பது தெரியவில்லை. இவ்வாறாக அகஸ்தியன் தென்னாடடைந்ததும் தமிழ் நூல்களையெல்லாம் ஒழித்து ஆரிய மயமாக்கி விட்டான்.

ஒரே வார்த்தையில் சொன்னால் திரா விடர்களைக் கொன்று குவித்து அழிக்கவே வேதமும் மதமும் கடவுள்களும் பயன்பட்டு வந்திருக்கின்றனவே அன்றி இவைகளினால் என்ன உருவான பலன் ஏற்பட்டிருக்கிறது?

புராண விஷம்

இவைகளை எல்லாம் நீங்கள் ஊன்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? மனதில் பல தலைமுறைகளாகப் படிந்துவிட்ட களிம்பை—புராண விஷத்தை நீக்கிக் கொள்ளாவிடில் நாம் எவ்வகையிலும் வாழமுடியாது. வேத மத புராணக் கடவுள்கள்பற்றிய ஆபாசக்கருத்துக் களை மனதிலிருந்து அகற்றினாலன்றி சிறிதும் முன்னேற்றமடைய முடியாது. இவைகளே நமது வாழ்வுக்கு முன்னேற்றத்திற்கு, இன்று எதிர்ப்பாக, இடைஞ்சலாக இருக்கின்றன. அவைகளை நீக்கினா லன்றி நமது வாழ்வு வளப்பமாக முடியாது. நம் பெண் களுக்கும் மக்களுக்கும் அறிவு; பகுத்தறிவு ஏற்பட வேண்டும். கடவுள் வேதங்களினால் நமக்கிதுவரை ஏற்பட்ட நன்மைதான் ஒரு துளியேனும் என்ன? துன்பங்கள் தாழ்வுகள் தவிர வேறென்ன கண்டோம்?

விபசாரம்—மோசடி—கொள்ளை

விபசாரம், மோசடி, கொள்ளை இவைகளைத் தானே வேதங்களும், மதங்களும், கடவுள்களும் போதிக் கின்றன? ஒரு அங்குலமாவது, இவைகளைக்கொண்டு நாம் முன்னேறமுடிந்ததா? ஏமாற்றி வேஷம்போட்டுப் பிழைக்கலாம். ஏமாற்றுவேஷம் வெளிப்படின் உதை படலாம் என்பது தவிர, வேறெந்த வகையிலாவது முன்னேற்றத்துக்காக நாம்கண்ட மார்க்கமென்ன? திராவிடர் கழகத்தைச்சேர்ந்தவர்கள்பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக்கொள்ளுவோரில் பெரும்பாலோர் இன்னும் வேஷதாரிகளாகத்தானே இருந்து வருகிறார் கள்? யாரும் காணாதபோது விபூதி பூசுவது, வெளியே வரும்போது அழித்துவிடுவது உருவக் கோவில்களுக்குச் செல்லுதல், திருவிழா, பண்டிகை கொண்டாடுதல்

இவைகளை இன்னும் அனுஷ்டித்து வருகிறார்கள் என்றால், மற்றவர்கள் சங்கதியை நாம் எப்படிக் குறை கூற முடியும்? இதற்கு நிவாரண வழிதான் என்ன?

பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை தப்பினாலும் தப்பலாம்; வேதம், மதம், கடவுள் ஆகிய இந்தப் பாம்புகளின் பிடிப்பில் விழுந்தால் தப்ப முடிவதில்லையே!

உலக அறிஞர்கள்

ஏன் உலக அறிஞர்கள், நிபுணர்கள் என்றுபடிப்புக் காரணமாக, அறிவுத் திறமை காரணமாகப் பாராட்டப் படும் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், ஏ. ராமசாமி முதலியார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் இவர் களால் இந்தப் பிடிப்புகளில் இருந்து இம்மியும் விலக முடியவில்லையே! திராவிடர் கழக அனுதாபிகள் எனப்படும் இவர்களது போக்குகளும், புத்தியுமே இப்படி என்றால் சாதாரணமாக இருப்பவர்களைப்பற்றி என்ன சொல்ல முடியும்? நம்முன் கற்றவர்கள் எனப் படுவோர்க்குத் தேர்தல் என்றால் எதை விட்டுக்கொடுத் தேனும், கொள்கை, மனச்சாட்சி, நேர்மை நாணயம் இவைகளில் எதைப்பற்றியும் கவலைப்படாது, எப்படி யாவது தேர்தலைச் சமாளித்தாகவேண்டும், தேர்தலில் வெற்றிபெற்றாகவேண்டும் என்றுதானே தோன்று கிறது? நல்லதொரு சமுதாயம் அநியாயமாக, வீணாக கெட்டுப்போகிறதே என்று யார் கவலைப்படுகிறார்கள்?

மாற்றவேண்டும்

இவைகள் எல்லாம் அதாவது வேதம், மதம், புராண கடவுள்கள்பற்றிய, நமது பழங்கால முதற் கொண்டு இருந்துவரும் மனப்பான்மை; அடிமைப்புத்தி

மாற்றமடைய வேண்டும்; இவைகள் தானே நமக்கு இலக்கியம், நாடகம் சினிமா முதலிய எல்லாத் துறைகளிலும் புகுந்து பெரும் இடையூறாக இருந்து வருகின்றன? ஆகவேதான் மாற்றம் வேண்டும் இல்லையேல் முன்னேற்றத்திற்கு மார்க்கம் இல்லை என்று கூறுகிறேன்.

மற்றபடி எனக்கு வேறு யாருடனும் விரோதமே கிடையாது. வேதம், மதம், புராணம், கடவுள்கள் இவைகளினால் என் மக்கள் நாசமாகி வருகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள், அடிமைப் படுத்தப்படுகிறார்கள், சுரண்டப்படுகிறார்கள் என்று கூறுகிறேன்; இவ்விதம் நான் சொல்லுவதும் அதற்காக ஏதோ என்னால் முடிந்த அளவு செயலாற்றுவதும், செயலாற்ற மக்களிடை பிரசாரம் செய்து தூண்டிவிடுவதும் பிடிக்கவில்லையானால், தோழர் ராஜகோபாலாச்சாரியார் போன்றவர்கள் சொல்லட்டுமே ஒரே வார்த்தை—ஆரிய வேதம், மதம், புராணம், கடவுள்கள் இவைகளுக்கும் திராவிட மக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று. அதைவிடுத்து பிரசாரத்துமீது காய்வார்களேயானால், இனியும் நாம் சும்மா இருப்பதில் பயனில்லை. **மாதம் ஒருபடி முன்னேற்றம் கண்டோம் என்ற முறையில்**, மாதமொரு பண்டிகை திருவிழா என்றிருப்பதுபோல் **மாதந்தோறும் ஏதேனும் ஒரு புராணத்தை எரித்தல், விக்கிரகத்தை உடைத்தல்**, முதலிய நடவடிக்கைகளில் இறங்கியே ஆகவேண்டும். நம்மீது புகுத்தப்பட்ட புராண நூல்களை எரிப்பதாலும், விக்கிரகங்களை உடைப்பதாலும் புராணங்கள் அனைத்தும் அழிந்துவிடும், விக்கிரகங்கள் கூண்டோடு மறைந்து போம் என்று நான் கூற வரவில்லை. இதைப்பார்த் மக்களுக்கு ஏன் எரிக்கிறார்கள். ஏன் உடைக்கிறார்கள் என்ற கேள்விகள் பிறக்கும். அதுசமயம் புராணக் கடவுள்களின் ஆபாசங்களை எடுத்துரைத்து இவை

தானா எங்களுக்கு வழிபாட்டு நூல்களும், கடவுள்களும் என்போம். விமோசனம் பிறக்காது போகுமா பார்ப்போம்.

"தோழர்களே நான் இதுவரை சொன்னதில் ஏதாவது, சிறிதாவது நியாயம் உண்மை இருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றினால், உங்கள் வீட்டில் மாட்டியிருக்கும் "கடவுள்களின்" உருவப்படத்தை எடுத்து எரியுங்கள்! நெற்றியில் சாம்பல், மண் இடாதீர்கள்! உருவக்கடவுள் உள்ள கோவில்களுக்குச் செல்லாதீர்கள்! மக்களுக்கு உதவி செய்யுங்கள்! துரோகம், வஞ்சகம் செய்யாதீர்கள்! உண்மை பேசுங்கள்! மக்களை ஏய்க்காதீர்கள்! அதுதான் **கடவுள் தொண்டு**!

பிற்சேர்க்கை :

சிலை வணக்கத்தால் சீரழியும் நாடு

இந்து மதத்தைத் தழுவிய கிரேக்க மாதின் எடுத்துக்காட்டு

இந்து மதத்தைத் தழுவி சாவித்திரிதேவி என்று மாற்றுப்பெயர் வைத்துக்கொண்ட கிரேக்கமாது "இந்துக்களுக்கு எச்சரிக்கை" என்று தலைப்பிட்டு எழுதியுள்ள புத்தகத்தில் 'அபாய அறிகுறி' என்ற அத்தியாயத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களாவன.

ஆரிய சிலைவணக்கத்துறையின் இறுதிக்கோட்டை இந்த இந்தியா. ஆனால் இந்த இந்தியாவில் இந்த இந்துத்வம் இனியும் எத்தனை காலம் உயிர்பற்றி நிற்கப் போகிறதோ!

கோயில்கள் நிறைந்த தென்னாட்டியே இந்தக் கேள்வி வியப்பளிக்கலாம். கோயில்கள் இருக்கும்வரை இந்துமதம் இருக்குமென்பது அவர்களுடைய எண்ணம். ஆனால் ஆரிய கலாச்சாரத்தின் தொட்டிலான பஞ்சாபிலும், இந்திய கலாச்சாரத்தின் தாயகமான வங்காளத்திலும் இந்துமதச் செல்வாக்கு பெரும் அளவுக்குக் கரைந்துவிட்டது.

மேற்கு பஞ்சாபில் ஓரளவுக்கு சீக்கியர்கள் இருந்தாலும் முஸ்லிம் மதத்தினர்கள் அதிகம். வங்காளத்திலோ ஒரு இந்துவைக்கூட கண்ணில் காணாது பல காத தூரம் பிரயாணம் செய்யலாம்.

ஒரு சில பணலேவாதேவிக்காரர்களும் வியாபாரிகளும் தவிர்த்து மற்றெல்லோரும் முஸ்லிம்களே.

(கிழக்கு வங்கத்தில் மிகவும் அதிகப்) பார்ப்பனப் பண்டிதர்களுக்கோ தங்கள் கிராம சுற்றுவட்டாரத்தைத் தவிர்த்து மற்றபடி பரந்த உலகறிவு கிடையாது. இந்துக்கள் பரம்பரை பழக்க வழக்கங்கள் ஹிந்து கலாச்சாரம் என்பனவெல்லாம் உயர்சாதி இந்துக்கள் என்பவர்களின் வீட்டுக்குள்தாலிருக்கின்றன. தாழ்ந்த சாதி இந்துக்கள் என்போர் மதம் மாறி விட்டனர்—இப்போதும் மதம் மாறி வருகின்றனர்.

இந்துமதம் 'தெய்வீகம்' 'சாகாதது' என்ற பழைய பாடமெல்லாம் இப்போது பொய்யாகி வருகிறது. ஏனெனில் அந்நிய மதங்களின் ஆதிக்கம் இங்கு வலுத்து வருகிறது. இந்து மதத்தை ஆதரிப்போர் நாளுக்குநாள் குறைந்து வருகின்றனர். பலர் மதம் மாறியபடியுள்ளனர். கிறிஸ்தவ மதத்தினால் ஆசியா மைனர் கிரீஸ், எகிப்து, இத்தாலி ஆகிய நாடுகளில் சிலை வணக்க மதம் ஒழிந்து போனது அறிந்ததே.

கிறிஸ்துவ மதம் தோன்றிய காலத்தில் மேற்கு நாடுகளில் ஆரிய மதம் பூண்டற்றுப் போயிற்று. கிரீஸ் நாட்டிலே இடிந்த கோயில்கள் ஏராளமாகக் காட்சி தருகின்றன. பழைய கற்சிலைகள் மார்க்கட்டுகளிலே—பொம்மைக் கடைகளிலே விற்பனைக்கு வருகின்றன. முன்னர் கடவுளாக வணங்கப்பட்ட சிலைகள் இப்போது பொருட்காட்சி சாலைகளிலே இடம் பெற்றிருக்கின்றன. இவைகள் அமெரிக்கா – முதலிய அயல் நாட்டினருக்குச் சிறந்த கலைக்காட்சியாகவுள்ளன. ஆனால் இந்தச் சிலைகளை இப்போது யாரும் வணங்குவதில்லை. கிரீசில் சிலை வணக்கம் பூண்டற்றுப் போய் விட்டது.

இத்தாலியிலும் சிலை வணக்க முறைக்கும் கோட்பாடுகளுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது எகிப்திலே முற்காலத்தில் காளையையும் நைல் ஆற்றையும் வணங்கினர். ஆனால் இப்போது யாரும் அந்தப்படி வணங்குவதில்லை.

இந்தியாவில் கங்கையை தேவி என்றும், தெய்வம் என்றும் வணங்குவது போல் நெடுங்காலத்துக்கு முன் எகிப்தியரும் நைல் நதியை தந்தையாகப் பாவித்து வணங்கினர். சிவன் சடைமுடியிலிருந்து கங்கை வருவதாக இந்துக்கள் கூறிக்கொள்வதுபோல் எகிப்தியரும் நைல்நதி வானுலகிலிருந்து வருவதாக எண்ணமிட்டுக் கொண்டனர். ஆனால் இப்போதோ, இந்த நைல் ஆற்றங்கரையில் இருந்த கோயில்கள் பாழடைந்து கிடக்கிறன. இப்போது இங்கு சிலை வணக்கத்தினரே கிடையாது.

இந்து தத்துவமும் இப்போது இப்படியாகத்தான் ஆதரவிழந்து வருகிறது.

கிரீஸ், இத்தாலி, எகிப்து முதலிய நாடுகளில் சிலை வணக்கத்திற்கு ஏற்பட்ட கதியை எண்ணிப் பார்க்குமிடத்து; இந்த நாடுகளுக்கு ஏற்பட்ட கதி நாளை இந்தியாவுக்கும் ஏற்படலாமென அஞ்சச் செய்கிறது. வங்காளத்திலும் இந்துமதத்தின் அநாதரவு நிலைமையே இக்கூற்றுக்கு ஆதாரமாகிறது. 500 ஆண்டுகளுக்குப்பின் வங்காளத்திலுள்ள இந்து கோயில்களும் "கடவுள்" சிலைகளும் பொருட்காட்சி மண்டபங்களில் இடம் பெறும் பொருள்களாகி விடலாம். காளிகோயில் என்பது பழைய கல்வெட்டுக் காட்சிப் பொருளாகி விடலாம். இந்து புராணங்களுக்கும் கிரேக்கப் புராணங்களின் கதி ஏற்படலாம். கங்கையில் புண்ணிய தீர்த்தமாடுவோரோ, பூமாலைகள் சூடுவோரோ, பிரார்த்தனைகள் அர்க்கியங்கள் செய்வோரோ இல்லாமற் போகலாம். ஒன்று சாகவேண்டும்; அல்லது துணிந்து சீர்திருத்திக்கொண்டு உலகத்திற்கேற்ற நடப்பு முறையில் முன்னேறவேண்டும் என்ற கட்டத்தை அடைந்து நிற்கிறது இப்போது இந்துமதம்.

சிவன் கற்பிதம்

சிவன் கற்பிதம் மிகப் பழமையான காட்டு மிராண்டிக் காலத்தியதாக இருக்கிறது. அதாவது தலை சடையாகவும், ஆடை மிருகத்தின் தோல் ஆகவும், அணி (நகை) பாம்புகள்—எலும்பாகவும், புஷ்பம் கொற்றை எருக்கம் பூக்களாகவும், பாத்திரம் மண்டை ஓடு ஆகவும், ஆகாரம் தேன், தினைமாவு; கொழுக்கட்டையாகவும், ஆயுதம் 1-வது மழு; 2-வது சூலம். இடம் மலை. விளையாடுவது சுடலை. பூசிக்கொள்வது சாம்பல். ரூபம் (சாயல்) அகோரம். வாகனம் மாடு. குணம் வெளிப்படையான ஹிம்சை. நடனம் காட்டுமிராண்டி ஆட்டம். சங்கீதக்கருவீ உடுக்கை. துணைவி இதுபோன்றே கோர ரூபமுள்ள காளீ. அவள் வாகனம் சிங்கம். பிள்ளைகள் ஒன்றுக்கு ஆறுமுகம்; மற்றொன்றுக்கு யானை தலை விகார ரூபம்.

தமிழன் அச்சகம், ஈரோடு.

பகுத்தறிவு, குடிஅரசு பதிப்பக வெளியீடுகள்

1. பெண் ஏன் அடிமையானாள்?
2. உண்மை இந்துமதம் எது?
3. நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
4. மதம் மக்களுக்குச்செய்த நன்மை என்ன?
5. பேய் பூதம் பிசாசு
6. இரண்டு வழிகள்
7. முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை
8. இதிகாசங்களின் தன்மைகள்
9. தமிழர் தலைவர்
10. மதமும் அரசியலும்
11. பெரியார் ராமசாமி அவர்களைப் பற்றி
12. கடவுளும் பிரபஞ்சமும்
13. காமராஜர் ஆட்சியின் சாதனைகள்
14. சுதந்தரத் தமிழ்நாடு ஏன்?
15. அறிவுச்சுடர்
16. கடவுள்
17. மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி
18. கிராமச் சீர்திருத்தம்
19. சிந்தனைத் திரட்டு
20. ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள் 0
21. மதப்புரட்சி 0
22. ஞான சூரியன் 0
23. இனிவரும் உலகம் 0
24. பிரகிருதிவாதம் 0

இவைகள் பெரியார் அவர்கள் பேசும் கூட்டங்களில் கிடைக்கும்